# ஆரம்பக்கல்வி



ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை.

| மலர் 30 | நவம்பர் 1966 | இதழ் 11 |
|---|---|---|


# வெற்றிக்கு உரிய வழிகள்

ஆசியாக் கண்டத்தில் மட்டுமல்ல அகில உலகிலேயே இன்றைய தினம் மிகப் பெரிய ஜனநாயக நாடாகத் திகழ்வது இந்தியப் பெரு நாடே ஆகும். இந்த மாபெரும் நாட்டில் ஜனநாயகக் கோட்பாடு ஆழமாக வேரூன்றி அழுத்தமாக இடம் பெற்றால்தான் ஆசியாக் கண்டம் முழுவதிலேயும் ஜனநாயகச் சுடர் பேரொளி வீசித் திகழ முடியும். ஆசியாக்கண்டத்தில் ஜனநாயகப் பண்பாடு பட்டொளி வீசித்திகழ்ந்தால்தான் உலகம் முழுவதிலேயும் அதன் சிறப்பும் செல்வாக்கும் நிலைத்த இடத்தைப் பெற இயலும். இந்த அடிப்படை உண்மையை அழுத்தந்திருத்தமாக உணர்ந்த காரணத்தால்தான், ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய பல்வேறு கண்டங்களைச் சேர்ந்த ஜனநாயகத் தலைவர்கள், இந்திய ஜனநாயகம் ஓங்கி உயர்ந்து சிறந்து பொலியவேண்டும் என்பதில் தணியாத ஆர்வம் படைத்தவர்களாகக் காட்சி தருகிறார்கள்.

இந்திய நாடாக இருந்தாலும் சரி, வேறு எந்த நாடாக இருந்தாலும் சரி, ஒரு நாட்டில் ஜனநாயகக் கோட்பாடு, வலிவும் பொலிவும் மிகுந்து, சீரும் சிறப்பும் செறிந்து, எழிலும் ஏற்றமும் உடைய

தாக விளங்க வேண்டுமானால், அந்த நாட்டில், ஆற்றல்மிக்க ஓர் ஆளும் கட்சி இருந்தால் மட்டும் போதாது; வன்மை நிறைந்த ஓர் எதிர்க்கட்சியும் இருந்தாகவேண்டும்.

ஆடி அசைந்து அழகாகச் செல்கிற தேர், குறுக்கும் நெடுக்கும் கண்டபடி ஓடி அளவற்ற துயரத்தை உண்டாக்காமல் இருக்கவேண்டுமானால் அதற்கு ஒரு முட்டுக்கட்டை போடப்படவேண்டும்.

வீதியிலே வேகமாக ஓடுகிற கார், பக்க வாட்டிலோ, எதிர்ப்புறத்திலோ, சைக்கிளின்மீது அமர்ந்தோ நடந்தோ வருகிற மக்களுக்கு உயிர்ச் சேதத்தையோ பொருள் இழப்பையோ உண்டாக்காமல் இருக்கவேண்டுமானால், அதற்கு ஒரு 'பிரேக்' இருந்தாக வேண்டும்.

அளவற்ற ஆரவாரத்தோடும் எல்லையற்ற ஆற்றலோடும் ஓடி வருகிற வெள்ளம், வயல்களை அழித்து, ஊர்களைச் சிதைத்து, தொல்லைகளையும் துயரங்களையும் பெருக்காமல் இருக்கவேண்டுமானால் அதற்குக் குறுக்கே ஓர் அணை எழுப்பப்பட்டாக வேண்டும்.

இவற்றைப் போலத்தான் ஒரு நாட்டின் ஆளும் கட்சியின் போக்கிலும் நோக்கிலும் அந்த நாட்டிற்குத் தொலலைகள் நிகழாமல் இருக்கவேண்டுமானால், அந்த நாட்டில் பலம்மிகுந்த ஓர் எதிர்க் கட்சி இருந்தாகவேண்டும்.

வீட்டிற்குக் கதவு எவ்வளவு அவசியமோ, கதவுக்கு தாழ்ப்பாள் எவ்வளவு அவசியமோ, ஆற்றிற்குக் கரை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம், ஒரு நாட்டிற்கு எதிர்க்கட்சி. இந்த உண்மையைத்தான் உலகப் பெரும் புலவர் திருவள்ளுவர்,

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பார் இலானும் கெடும்"

என்னும் தெள்ளுதமிழ் மொழியால் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே சுவைப்பட எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆளும் கட்சியின் நடைமுறைகளையும் ஏற்பாடுகளையும் கூர்ந்து கவனிப்பது; அவற்றில் காட்சிதரக்கூடிய குற்றங்களையும் குறைகளையும் சுட்டிக் காட்டுவது; செல்ல வேண்டிய பாதை இது அல்ல—இது என்பதைஎடுத்துக் காட்டுவது-மென்மையான சொற்களால் எடுத்துக் காட்டினால் ஆளும் கட்சியினர் கேளாக் காதினராக இருந்தால் சற்று வன்மையான சொற்களால் இடித்துக்காட்டுவது—இவையும் இன்னோரன்ன பிறவும்தான் எதிர்கட்சியின் கடமைகள் ஆகும்.

ஜனநாயகக் கோட்பாடு வெற்றிபெற வேண்டுமானால், ஆளும் கட்சி என ஒன்றும், எதிர்க் கட்சி என மற்றொன்றும், இருந்து

விட்டால் மட்டும் போதாது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இல்லாவிட்டாலும் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும், ஆளும் கட்சி எதிர்க் கட்சியாகவும், எதிர்க் கட்சி ஆளும் கட்சியாகவும் மாறி அமைவதற்கு ஏற்ற வகையில் மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். தலைசிறந்த ஜனநாயக நாடாகத் திகழ்கிற இங்கிலாந்தில் மக்கள் அப்படித்தான் தங்கள் வாக்குகளைப் பயன் படுத்துகிறார்கள். இப்போது அந்த நாட்டில் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கிற கட்சி, தொழிற்கட்சி. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் அங்கே அமைச்சரவையை அமைத்திருந்த கட்சி, கன்சர்வெடிவ் கட்சி ஆகும். அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னரோ தொழிற் கட்சியின் ஆட்சி அங்கு நிலவியிருந்தது. இவ்வாறாக இங்கிலாந்தில் சில ஆண்டுகள் கன்சர்வெடிவ் கட்சியின் ஆட்சியும், வேறு சில ஆண்டுகள் தொழிற் கட்சியின் ஆட்சியும் மாறிமாறி ஏற்பட்டு வருகின்றன. இதைப் போலத்தான் ஐக்கிய அமெரிக்க நாட்டிலும், ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய இரு கட்சிகளின் ஆட்சி, சில ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறிமாறி ஏற்பட்டு வருகிறது. இப்படி ஏற்பட்டு வருவதால்தான் அந்த இரு நாடுகளிலும் ஜன நாயகக் கோட்பாடு, அப்பழுக்கு அற்ற நிலையில், ஆபத்து இல்லாத முறையில், செம்மையும் செழுமையும் நிறைந்த வகையில் நிலைத்து நிற்கிறது.

இத்தகைய மாற்றம் எதுவும் ஏற்படாமல் ஒரே கட்சி மறுபடி யும் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றுவது என்கிற நிலைமை ஏற்படு மானால், அந்தக் கட்சியின் தலைவர்களில் சிலருக்காவது, “என்றென் றும் நாமே பதவி நாற்காலிகளில் வீற்றிருந்தால் எவ்வளவு நன்றா யிருக்கும்” என்கிற எண்ணம் ஏற்படக் கூடும்; அந்த எண்ணத் தின் தொடர்ச்சியாக, “பொதுத் தேர்தல்களே இல்லாமல் இருந் தால் இன்னும் சிறப்பாக இருக்கும்!” என்கிற கனவும் பிறக்கக் கூடும். சுருக்கமாகக் கூறுவதானால் தலைவர்கள் சிலருடைய உள்ளங் களில், சர்வாதிகார உணர்வு, திரை மறைவுக்குப் பின்னால் கூத் தாடக் கூடும்.

ஜனநாயக வெற்றிக்குத் தேவைப்படுகிற மற்றோர் இன்றியமை யாத சூழ்நிலை, சட்டத்தின் ஆட்சி (Rule of law) ஆகும். வேண் டியவர்கள்—வேண்டாதவர்கள், செல்வம் நிறைந்தவர்கள்—அது அற்றவர்கள், செல்வாக்கு மிகுந்தவர்கள்—அதனைப் பெற முடியாத வர்கள், பெரிய பதவிகளில் இருப்பவர்கள்—சிறிய நிலைகளைப் பெற்ற வர்கள் முதலிய எத்தகைய மக்களாக இருந்தாலும் அனைவர் மீதும் சட்டம் ஒரே முறையில் ஒரே நிலையில் ஒரே வகையில் பயன்படுத் தப்படவேண்டும். அப்படிப் பயன்படுத்தப்படுவதுதான் முறை. அது தான் நியாயம்; ஒழுங்கு அறம். அப்படிப் பயன்படுத்தப்படுகிற வகை

யில் அமைந்த ஆட்சி முறைக்குத்தான் சட்டத்தின் ஆட்சி என்கிற பெயரை அரசியற்கலை அறிஞர்கள் சூட்டியுள்ளார்கள்.

**"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து; ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி"** என்று பொய்யில் புலவர் திருவள்ளுவர் புகன்றுள்ள பொன்னுரை, சான்றோர்க்கு மட்டுமல்ல, சான்றோர்களைப் பெற்றுள்ள ஜனநாயக நாட்டிற்கும் பொருந்துவதாகும். சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைவது, சட்டத்தின் ஆட்சி. அத்தகைய ஆட்சியைப் பெற்றிருக்கும் நாடுதான், ஜனநாயகக் கோட்பாடு குடியிருப்பதற்கு உரிய வீடு எனத் தகுவது ஆகும்.

ஜனநாயக உணர்வு நிலைத்து நிற்க வேண்டுமானால், மக்கள், தங்கள் உள்ளங்களில் ஊற்றெடுக்கும் கருத்துக்களை அச்சம் தயை தாட்சண்யமின்றி எடுத்துக் கூறும் உரிமை பெற்றவர்களாக இருப்பதும் ஓர் இன்றியமையாத தேவை ஆகும். அத்தகைய உரிமையைப் பெற்றவர்களாக மக்கள் இருந்தால் மட்டும் போதாது; அந்த உரிமையைப் பயன்படுத்துவது தங்களுடைய தனிப்பெருங் கடமை என்கிற உணர்வு படைத்தவர்களாக அவர்கள் இருப்பது அதைவிட முக்கியமான தேவை ஆகும். "எந்தக் கருத்தைக் கூறினால் எந்த அதிகாரியின் மனம் புண்படுமோ!" "எந்தச் சொற்பொழிவை நிகழ்த்தினால் எந்த அமைச்சரின் உள்ளத்திற்கு ஆகாதோ?" என்றெல்லாம் எண்ணி எண்ணித் தயங்குகிற போக்கு மக்களிடம் இருத்தலாகாது. அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களையும் நடைமுறைகளையும் கூர்ந்து கவனித்து, ஆகாத திட்டங்களோ ஏற்பாடுகளோ மேற்கொள்ளப் படும்போது, அத்தகைய திட்டங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு, மக்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தினால்தான், ஜனநாயகப் பயிர், செழித்து வளரும்; வளர்ந்து பொலியும். இந்தக் கருத்தை உள்ளத்திற் கொண்டுதான் ஐரோப்பியப் பேரறிஞர் ஒருவர், "இடையறாத விழிப்புணர்வே ஜனநாயகத்திற்குத் தரப்பட வேண்டிய விலை" என்று தெரிவித்துள்ளார்.

அஞ்சாத நெஞ்சுடனும் அசையாத உறுதியுடனும் தங்கள் உள்ளக் கருத்துக்களை எடுத்துக்கூறுகிற திட்பம் இருந்து விட்டால் மட்டும் போதாது; அதே வகையான நெஞ்சு உரமும் நேர்மைத் திறமும் கொண்ட பிறர் நமக்குப் பிடிக்காத சில கருத்துக்களை எடுத்துக் கூறும்போது, அவற்றைப் பொறுமையோடு கேட்டுக் கொள்கிற சகிப்புத்தன்மையும் நமக்கு இருந்தாக வேண்டும். "என் கருத்தை உரத்த குரலில் எடுத்துக்கூறுவதற்கு எனக்கு உரிமை இருக்க வேண்டுமே தவிரப் பிறர் கருத்தை எடுத்து மொழிவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கக் கூடாது" என்று கருதுகிற மனப்போக்கு

சர்வாதிகார ஆட்சியின் இலக்கணத்திற்குப் பொருத்தமானதாக இருக்கலாம்; ஆனால் ஜனநாயக ஆட்சியின் தன்மைக்கு ஏற்றதாகாது. பல்வேறு வகைப்பட்ட கருத்துக்கள் மலர்ந்து மணம் வீசுவதற்குத் தாராளமாக இடம் இருந்தால்தான், ஜனநாயக உணர்ச்சி, தங்கு தடையற்ற வளர்ச்சியைப் பெற முடியும்.

இந்தச் சகிப்புத்தன்மையும் பொறுமை உணர்ச்சியும் ஜனநாயக சமுதாயத்தைச் சேர்ந்த எல்லாக் குடிமக்களிடமும் இருக்க வேண்டியது இன்றியமையாதது என்ற போதிலும், சிறப்பாகவும் குறிப்பாகவும், ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் பெருமக்கள் போன்றவர்களிடம் இவை தவறாமல் இருந்து தீர வேண்டும்.

**"அரசாங்கத்தின் கொள்கைகளையோ திட்டங்களையோ எவரேனும் குறை கூறினால் அவர்களைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் போக்கு, அண்மைக் காலத்தில் வளர்ந்து வருகிறது. இத்தகைய போக்கு, ஜனநாயக வளர்ச்சிக்கு உகந்தது அன்று"**

இந்த வார்த்தைகளை எடுத்துக் கூறியிருப்பவர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திருவாளர் டாங்கே அல்ல; சுதந்திராக் கட்சி முதல்வர் திருவாளர் இராஜகோபாலாச்சாரியாரும் அல்ல; திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணாத்துரையும் அல்ல. தமிழ் நாட்டு அரசாங்கத் தொழில்துறை அமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் பிரபல தலைவர்களில் ஒருவரும் ஆகிய திருவாளர் **ஆர். வெங்கட்ராமன்** அவர்களின் கருத்துரை இது.

சில நாட்களுக்கு முன்னர் பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றியபோதுதான் திருவாளர் வெங்கட்ராமன் அவர்கள் இந்த ஆய்வுரையை அளித்துள்ளார்.

தக்க நேரத்தில் தக்க மனிதரால் தரப்பட்ட தகுதிமிக்க உரை இது. எதிர்க்கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியில் உள்ள தலைவர்களிலும் சிலராவது, இவ்வாறு சிற்சில பிரச்சினைகளிலாவது உள்ளம் திறந்து பேசினால்தான், ஜனநாயக ஒளி விளக்கு சிறப்புக் குன்றாமல் திகழ முடியும்.

ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் மட்டுமல்ல, எந்தக் கட்சிகளிலும் சேராமலிருக்கிற-ஆனால் நாட்டின் நாடியைப் பிடித்துப் பார்க்கவல்ல அறிவும் ஆற்றலும் மிகுந்த வழக்கறிஞர்கள், டாக்டர்கள், பேராசியர்கள், துணை வேந்தர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்து வேந்தர்கள் முதலிய அறிஞர் பெருமக்களும், நாட்டை எதிர் நோக்கும் தலையாய சிக்கல்கள் பற்றிய தங்கள் கருத்துக்களை, விருப்பு வெறுப்பு அற்ற நடுநிலைக் கோணத்திலிருந்து தெள்ளத் தெளிவாக எடுத்துக்கூறுவது இன்றியமையாதது ஆகும்.

"எந்தப் பிரச்சினை எப்படிப் போனால் எனக்கென்ன! எனக்கு என்று ஓர் உத்தியோகம் இருக்கிறது—நான் இருக்கிறேன்! என் உத்தியோகத்தை மட்டும் பார்த்துக்கொண்டு நான் இருந்தால போதாதா?" என்று எண்ணுகிற மனப்போக்கு, இத்தகைய அறிவு லக மேதைகளிடம் இருத்தல் ஆகாது. நாட்டுக்கு நல்வழிகாட்ட வேண்டிய ஆற்றல் பெற்றவர்கள் இவர்கள். அந்த ஆற்றலை உரிய வழியில் பயன்படுத்தாமல் துருப்பிடிக்க விடுவது முறை ஆகாது என் பதை யார் மறுக்க முடியும்?

1. பலம் பொருந்திய எதிர்கட்சி அமைந்திருப்பது,

2. பல ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் எதிர்க் கட்சி ஆளும் கட்சியாகவும், ஆளும் கட்சி எதிர்க் கட்சியாகவும் மாறி அமைவது,

3. சிறிதளவும் வழுவாத முறையில் சட்டத்தின் ஆட்சி நிலை பெற்றிருப்பது,

4. மக்கள் தங்கள் உள்ளக் கருத்துக்களை ஒளிவு மறைவின்றி எடுத்துக்கூறுகிற உரிமையும் கடமையும் பெற்றிருப்பது,

5. மாறுபட்ட கருத்துக்களைப் பிறர் தெரிவிக்கும்போது பொறுமையுடன் அவற்றைச் செவிமடுக்கும் சகிப்புத்தன்மை பெற்றிருப்பது,

6. எக்காரணத்தை முன்னிட்டும் வன்முறைச் செயல்களில் இறங்கிக் குழப்பம் விளைவிக்காமல் இருப்பது,

ஆகிய இந்த ஆறும், ஜனநாயக வெற்றிக்கு உரிய வழிகள் ஆகும். இந்தியாவைப் போன்ற ஒரு மாபெரும் ஜனநாயக நாட்டின் மக்கள் இந்த அறுவகை நெறிகளையும் மறவாமல் போற்றிப் பாதுகாத்தல், அவர்களுடைய தனிப்பெருங் கடமை என்பதை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

## வக்கீலுக்கு ஒரு விளக்கம்

சம்பவங்கள் உன் பக்கம் இருந்தால், ஜூரியைப் பார்த்துக் கர்ஜனை புரி; சட்டம் உன் பக்கம் இருந்தால் ஜட்ஜியைப் பார்த்துக் கோஷம் இடு; இரண்டும் இல்லை என்றால், உன் முன்னுள்ள மேஜைமீது ஓங்கி ஒரு குத்து விடு.

—ஸாமர் ஸெட் சாம் (பிரபல ஆங்கில ஆசிரியர்)

# வித்தகர் வேதநாயகம் பிள்ளை

[கெ. பக்தவத்சலம்]

தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில், தமிழ் மொழியின் முதல் நாவலாசிரியர் என்ற சிறப்பான இடத்தைப் பெறுகிறார் மாயூரம் முனிசீப் ச. வேதநாயகம் பிள்ளை. வேதநாயகம் பிள்ளைக்கு முன்பே வீரமா முனிவரும், தாண்டவராய முதலியாரும் தமிழில் உரைநடை எழுதியிருந்தாலும், வேதநாயகம் பிள்ளையின் தமிழ் நடை தனிப் பெருமை வாய்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆற்றல் வாய்ந்த தமிழ் நடையை அனுபவிக்க வேண்டுமானால், வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்', 'சுகுண சுந்தரி சரித்திரம்', 'பெண் கல்வி', 'பெண் மனம்' என்ற நாவல்களையும், கட்டுரைத் தொடர்களையும் படித்தல் இன்றியமையாதது.

நேர்மையிற் சிறந்த நீதிபதியாகப் பணியாற்றிய வேதநாயகம் பிள்ளை தமது ஓய்ந்த நேரத்தையெல்லாம் கல்வியிற் செலவழித்தார்; சமுதாய முன்னேற்றத்திற்காக சிந்தித்தார். அதன் பயனாகப் பிறந்தவையே பாட்டாலும் உரையாலும் அவர் நமக்குப் படைத்தளித்துள்ள இலக்கியங்கள். நாவல்களையும், கட்டுரைகளையும் தமது இலட்சியக் கொள்கை விளக்கங்களாகவே வேதநாயகம் பிள்ளை எழுதியுள்ளார். தாம் எழுதியபடியே நடந்து காட்டிய பெருமையும் வேதநாயகம் பிள்ளைக்கு உண்டு.

வேதநாயகம் பிள்ளையின் எழுதுக்களில் இன்றளவும் உயிர்த்திருக்கும் உயரிய நகைச் சுவையைக் காணலாம். புதிய புதிய உவமைகளும், அரிய பழமொழிகளும் கலந்த அவர் தமிழ் நடைக்குச் சில சான்றுகள் காண்போம்: முதலில் நல்ல புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தைப் பற்றி 'பெண் கல்வி' என்ற நூலில் அவர் கூறுகிறார்:—

"நல்ல புத்தகங்கள் படிக்கப் படிக்க எவ்வளவோ பிரியமாயிருக்கின்றன. அவைகளைப் படிக்கும்போது பசி தெரியவில்லை. பொழுது போவது தெரியவில்லை. ஆகார நித்திரைகளில் அபேட்சையில்லை. மனவருத்தங்களெல்லாம் நீங்கிப் போகின்றன. அந்தக் காரணங்களைப் பற்றியே ஐரோப்பியர்கள் எப்போதும் சிறந்த காலட்சேபம் செய்கிறார்கள். இந்தத் தேசத்துப் பிள்ளைகள் பாடசாலைகளை விட்டவுடனே படிப்பையும் விட்டு விடுகிறார்கள். குற்றஞ் செய்கிறவர்களைக் கட்டித் தூக்கு

வது போலப் புத்தகங்களைக் கட்டித் தூக்குப் பலகையில் வைத்து விடுகிறார்கள். பின்பு அந்தப் புத்தகங்களின் சாரம் எலிக்கும் கறையான் முதலிய பூச்சிகளுக்கும் உபயோகமா கிறதே தவிர, நம்முடைய பிள்ளை களுக்கு உபயோகமாகிறதில்லை. பிள்ளை வாதத்துக்குப் போய் புருஷனைச் சாகக் கொடுத்தது போலவும், தாது புஷ்டிக்கு மருந்து சாப்பிட உள்ள புஷ்டி யும் போய்விட்டது போலவும், சிலர் இங்கிலீஷ் முதலிய அந்நிய பாஷைகளைப் படிக்க ஆரம்பித்து அந்தப் பாஷையும் தெரியாமல், சொந்த பாஷையும் தெரியாமல், அப்பாவிகளாய்ப் போய்விடுகிறார் கள். சிலர் அந்நிய பாஷைகளில் பூரண விற்பன்னர்களாயிருந்தும் சொந்தப் பாஷையைப் படியா மல், அந்தரத்தில் விட்டுவிடு கிறார்கள்.''

''இந்தத் தேசத்தில் அந்நிய பாஷையைக் கற்றுக் கொண்டு சுய பாஷை தெரியாமலிருப்பவர் களுக்கே பிரபலமான உத்தியோ கங்கள் கிடைக்கின்றன. அதற் காக நாம் பொறாமை கொள்ள வில்லை. இங்கிலீஷ், பிரான்சு முதலிய அந்நிய பாஷைகளில் பல விஷயங்களைப் பற்றி அருமை யான அநேக கிரந்தங்களிருக் கின்றமையால் அந்தப் பாஷை களைப் படிக்கிற இந்தத் தேசத் தார் அந்தக் கிரந்தங்களிலுள்ள அருமையான பொருள்கள் இந்தத் தேசத்து ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் உபயோகமா கும் பொருட்டு, சுதேச பாஷை யில் வசன காவியங்கள் எழுத வேண்டுமென்பதே நம்முடைய மனோரதமாயிருக்கின்றது.''

சுருங்கச் சொன்னால், மேற் கூறிய சொற்களே வித்தகர் வேதநாயகம் பிள்ளையின் குறிக் கோளாகும். தாய் மொழிப் பற்றையும், உண்மைக் கல்வியின் இலக்கணத்தையும், ''பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண் டும்'' என்று கல்வியின் பயனைப் பாரதி வேண்டும் வேட்கையையும் விவரிக்கும் வேதநாயகரின் சொற்கள் இவை. இவற்றிற் கேற்பவே 'பிரதாப முதலியார் சரித்திரம்', 'சுகுணசுந்தரி' என் னும் இரு நவீனங்களை வேதநாய கம் பிள்ளை இயற்றினார் என்று கருதலாம். உரை நடையே பல் வேறு கருத்துக்களையும் பொது மக்களுக்கு உணர்த்த வல்ல கருவி என்று கண்ட வேதநாயகம் பிள்ளை, தமது வாதத்தைக் கீழ்க் காணும் சொற்களால் நிறுவு கிறார்.

காவிய ரூபமாயிருக்கிற இந்தத் தேசத்துக் கிரந்தங்கள் அநே கருக்கு அப்பிரயோசனமாயிருக் கின்றன. சில வித்வான்களுடைய பாடல்களை நாம் நாள் முழுவதும் பார்த்தாலும் அர்த்தம் விளங்க வில்லை. அந்தப் பாடல்களில் பிரயோகிக்கப்பட்ட அரும் பதங் கள் அகராதியிலும் அகப்பட வில்லை. சிறு நூல்களுக்கு சில வித்வான்கள் செய்திருக்கிற உரைகளும் சில இங்கிலீஷ் புத்த கங்களுக்குச் சிலர் செய்திருக்கிற

(11ஆம் பக்கம் பார்க்க)

# குடியரசு நமக்குப் புதிதல்ல!

குடியரசு என்பது நம் நாட்டிற்குப் புதிதல்ல. புராதன இந்தியாவில் பல குடியரசுகள் இருந்திருக்கின்றன. குடியரசு என்றதுமே மக்களால் நடத்தப்படும் ஆட்சியேதான்; மன்னர் ஆட்சியல்ல என்ற ஓர் எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இங்கிலாந்தில் உள்ளது போலவே மன்னர் ஆட்சியும், மக்கள் ஆட்சியும் கலந்தும் விளங்க முடியும். முன் காலத்தில் நம் நாட்டை ஆண்ட மன்னர்கள் மக்கள் நலத்தையே முன்னணியில் வைத்து ஆட்சி நடத்தியிருக்கிறார்கள்.

## பல குடியரசுகள்

இதைப் பற்றிச் சிறிது விவரமாகத் தெரிந்துகொள்ள பல நூற்றாண்டுகள் நாம் பின்னோக்கிச் செல்ல வேண்டும். முஸ்லிம்கள் ஆட்சி ஏற்படு முன் முடியாட்சியும் குடியாட்சியும் அடுத்தடுத்து அக்கம்பக்கப் பிரதேசங்களில் இருந்து வந்திருக்கின்றன. மேற்கு இந்தியாவிலும் வட மேற்குப் பகுதியிலும் அநேகம் குடியரசுகள் இருந்து வந்தன என்பது கௌடில்யர் எழுதிய "அர்த்த சாஸ்திரத்"திலிருந்து தெரிய வருகிறது. அக் குடியரசுகளில் முக்கியமானவை காம்போஜம், சௌராஷ்டிரம், மாளவம் முதலியவை. இவைகள் எல்லாம் ஜனநாயக அடிப்படையிலேயே இயங்கி வந்தன. சங்கம் என்று அழைக்கப்படும் மக்கள் சபையினாலேயே இவைகளின் நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தது. இதன் அங்கத்தினர்கள் 'சங்க முக்கியர்கள்' என்று அழைக்கப்பட்டனர் (இக்காலத்து எம். எல். ஏ. என்று வைத்துக் கொள்ளலாம்). அக் காலத்திலும் கட்சிகள் இருந்து வந்திருக்கின்றன. அசோகர் எழுப்பிய கல்வெட்டுகளிலும், குப்த காலத்து நாணயங்களிலும் இக்குடியரசுகளைப் பற்றிய விவரம் காணப்படுகிறது. மாபெரும் வீரர் அலெக்ஸாண்டரின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திய பெருமை இக்குடியரசுகளையே சேரும்.

இக் குடியரசுகளில் இரண்டு வகைகள் இருந்தன என்பதும் தெரியவருகிறது. ஒன்று 'நிகமா'. இது ஒரு நகரின் பரிபாலனம் மட்டும் நடத்துவது; இப்போதுள்ள முனிசிபாலிட்டி, நகரசபைகள் போல. மற்றொன்று 'ஜனபாதா'. இது ராஜ்யம் முழுவதுக்கும் நிர்வாகம் நடத்துவது.

## தமிழகத்தில் தேர்தல் முறை

தமிழ் நாட்டில் பூரண ஜனநாயக முறை முன்பு இருந்தது. இதற்கு செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் ஆலயத்திலுள்ள ஒரு கல்வெட்டு சான்று கூறுகிறது. கிராம நிர்வாகம்

கிராம மக்களிடமே இருந்தது என்றும், அவர்கள் மண்குடத்தில் ஓலை நறுக்குகளைப் போட்டுப் பொதுப் பிரச்னைகளைப்பற்றிக் கருத்து தெரிவிப்பார்கள் என்றும் அக்கல்வெட்டு கூறுகிறது. இந்தக் குடவோலை நறுக்கு ஏற்பாடு நம் காலத்துத் தேர்தல் வாக்குப் பதிவு முறையைப் போன்றதே.

## மேனாடுகளில்

மேனாடுகளில் குடியரசுத் தத்துவத்திற்குத் தாயகமாக விளங்கியவை, கிரீஸ-ரசும், ரோமும்தான். இவைகளில் மக்களே நேரிடையாக நிர்வாகப் பொறுப்புகளில் பங்கு பெற்றனர். உடல் வலிமை உள்ள எல்லா பிரஜைகளுமே நிர்வாக முடிவுகளைச் செய்வதில் பங்கு பெற்றனர்.

பிற்காலத்தில் ஐஸ்லாந்தில் குடியரசு முறையை நார்ஸ் குடிமக்கள் சிலர் ஏற்படுத்தினர். பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கும் பதினைாம் நூற்றாண்டிற்குமிடையே, இதாலியில், முக்கியமாக வெனிஸிலும், பிளாரன்ஸிலும், குடியமசு முறைகள் ஏற்பட்டன. அக்காலம் முதற்கொண்டே குடியரசுக் கருத்து மக்கள் மனதில் வேரூன்ற ஆரம்பித்து விட்டது. ஸ்விங்லி, கால்வின் போன்ற மேதைகள் தங்கள் போதனைகளில் குடியரசுத் தத்துவத்தைப்புகுத்தினர். லாக், மான்டெஸ்கியூ, வால்ட்டேர், ரூஸோ போன்ற அரசியல் ஞானிகள் குடியரசுத் தத்துவத்தின் பெருமைகளை எடுத்து விளக்கினர்.

1776-ஆம் ஆண்டில் அமெரிக்கா நாடு சுதந்திரப் பிரகடனம் செய்த போது குடியரசு முறைக்கு ஒரு புது உருவம் ஏற்பட்டது. பிரான்சிலும் குடியரசு முறை ஏற்பட்டது. ஆனால் அதிக காலம் நீடிக்கவில்லை. ஒரு நாட்டுடன் மற்றொரு நாடு தகராறு செய்ய முற்படவே சில நாடுகளில் சர்வாதிகாரம் தலை தூக்கலாயிற்று.

## 19-ஆம் நூற்றாண்டில்

பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதுமே குடியரசுவாதிகளுக்கும் சர்வாதிகாரிகளுக்கும் போராட்டம் நிறைந்த காலமாக இருந்தது. 1848-இல் புரட்சிகர ஜனநாயக உணர்ச்சி ஐரோப்பிய நாடுகளில் தோன்றியது என்றாலும், தேசிய ஐக்கியத்தை அதனால் ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே ஜெர்மனி, ஆஸ்டிரியா, இதாலி ஆகிய நாடுகளில் முடியாட்சி மூலமே அந்த ஐக்கியம் ஏற்பட்டது.

தென் அமெரிக்க நாடுகள் ஸ்பானிய ஆதிக்கத்தை உதறித் தள்ளிய பின் குடியரசு நாடுகளாக விளங்கத் துவங்கின.

## இருபதாம் நூற்றாண்டில்

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் சீனாவும் ஒரு குடியரசாக மாறியது.

முதல் உலக மகாயுத்தம் முடிந்தபின், குடியாட்சி இன்

னும் பரவலாகத் தோன்ற ஆரம்பித்தது. ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவாகியா ஒவ்வொன்றும் குடியரசாக மாறியது. ரஷ்யா 1917–இல் குடியரசு ஆகியது.

இரண்டு உலக யுத்தங்களுக்கிடையே சில நாடுகளில் குடியரசு முறைக்கு ஆதரவு குறையலாயிற்று. ஜெர்மனி, இதாலி, ஹங்கேரி ஆகிய நாடுகளில் சர்வாதிகாரம் தலை தூக்கின. ஸ்பெயினில் குடியாட்சி மறைந்து, பிராங்கோ சர்வாதிகாரியானார். ரஷியாவிலும் ஜனநாயகத் தன்மை குறையலாயிற்று.

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த பின்பு, குடியரசு தத்துவத்திற்கு புத்துணர்ச்சி ஏற்பட்டது. காலனி ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் பல நாடுகளில் மறைந்தன. இந்தியா, பர்மா, இலங்கை, பிலிப்பீன்ஸ், இந்தோனேசியா முதலிய நாடுகள் குடியரசாயின.

இந்தியா, ஜனநாயகக் குடியரசில் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறது. பல நாடுகள் குடியரசு ஆட்சியிலிருந்து எதேச்சாதிகார ஆட்சிக்கு மாறிக் கொண்டிருக்கும் இச் சமயம்கூட, பரிபூரண ஜனநாயக ஆட்சியே சிறந்த நிர்வாக முறை என்பதை இந்தியா உலகிற்கே எடுத்துக் காட்டி வருகிறது.

—"தினமணி கதிர்"

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொழி பெயர்ப்புகளும் தமிழோ பிரமலிபியோ அல்லது வேறென்ன பாஷையோ வென்று தெரியாமல் பிரமிக்கும்படியாய் இருக்கின்றது. கலியாணம் செய்தும் சந்நியாசம், கடன் வாங்கியும் உபவாசம் என்பது போல ஒரு நூலுக்கு உரையிருந்தும் அனுபயோகமாயிருப்பது ஆச்சரியமல்லவா?

சென்ற நூற்றாண்டில் அறியாமை மண்டிக் கிடந்த நம் நாட்டில், மூடப்பழக்கங்களுக்கும், அடிமைத்தனத்திற்கும் காரணம் கல்வியின்மையே என்று கண்டறிந்தார் வேதநாயகம் பிள்ளை. 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகக்' கல்வி கற்க வேண்டும் என்ற இயக்கத்தைத் துவக்கி வைத்த வேதநாயகம் பிள்ளையின் அடியிற் கண்ட சொற்களில் கல்வியின் அருமையும், நன்கு படம் பிடித்துக் காட்டப் பெற்றுள்ளது:—

"படியாதவர்கள் தங்கள் சுதேச காரியங்களையே அறியாதவர்களாயிருக்கிறார்கள். படித்தவர்கள் பூமண்டல மெல்லாம் சஞ்சரிக்கின்றவர்கள் போல பூத பௌஷிய வர்த்தமானங்களை யெல்லாம் பல பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள். படியாதவர்கள் இப்போதிருக்கிற வித்வான்களையே அறியார்கள். படித்தவனோ வென்றால் தற்கால வித்வான்களை மட்டுமல்ல, பூர்விக வித்வான்களையும் முகமுகமாகத் தரிசித்துச் சம்பாஷணஞ் செய்கிறவன்

போல் அவர்களுடைய கிரந்தங்களிலுள்ள நீதிகளையும், அலங்காரங்களையும் வேதார்த்தங்களையும் கற்றுக் கொள்ளுகிறான்.''

''படித்தவனுக்கு உலகமே ஒரு பெரிய புஸ்தகமாயிருக்கிறது. பஞ்ச பூதங்களும், பூமியிலுள்ள மலைகள், மரங்கள், கடல்கள், நதிகள் முதலியவைகளும், வானத்தில் உலாவும் சந்திர, சூரிய, நட்சத்திரங்களும், மேகங்களும், தத்துவ ஞானத்தை யுபதேசிக்கிற குருமூர்த்திகளாயிருக்கின்றன. பூமியிலுள்ள நானாபேத ஜீவாத்ம கோடிகளையும், விருட்ச ஜாதிகளையும், அந்த விருட்சங்களிலுள்ள மரகதத் தகடு போன்ற இலைகளையும், நவரத்தினத்தை யொத்த பரிமள புஷ்பங்களையும், கற்கண்டுக் கட்டி போன்ற மதுரக் கனிகளையும், பல வர்ணமுள்ள அழகிய பட்சிகளையும், கல்விமான் பார்த்துப் பார்த்து நேத்திரானந்தத்தை யடைகிறான். வானம்பாடி, குயில், கிளி, பூவை முதலிய பட்சிகள் பாடும் சங்கீதத்தைக் கேட்டு சுரோத்திரானந்தத்தை யனுபவிக்கிறான். அந்த ஆனந்தங்களைக் கொடுத்த பரம கிருபாநிதியை உடனே தியானித்து ஆத்மானந்தத்தையும் அடைகிறான்.''

இவ்வாறு இயற்கைக் கல்வியின் பெருமையை உணர்த்தும் வேதநாயகனார், 'பிரதாப முதலியார் சரித்திர'த்தில் உண்மையான கல்வி எது என்பதை விளக்குகிறார்: ''ஆசானுடைய போதகம் முடிந்த உடனே கல்வியும் முடிந்து போனதாகச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி எண்ணுவது தப்பு. உண்மையைச் சொல்ல வேண்டுமானால், பாடசாலையை விட்ட பிற்பாடுதான் படிப்பு ஆரம்பிக்கின்றது. 'பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது' என்பது போல் பள்ளிக்கூடத்தில் படிக்கிற படிப்பை அபிவிருத்தி செய்யா விட்டால், அந்தப் படிப்பு ஒன்றுக்கும் உதவாது. பாடசாலையிலே படிக்கிற படிப்பு அஸ்திவாரமாகவும், பாடசாலையை விட்ட பிற்பாடு, தானே படிக்கிற படிப்பு மேற்கட்டத்துக்குச் சமானமாயுமிருக்கிறது. வித்தையை அபிவிருத்தி செய்யாமல் பாடசாலைப் படிப்பே போதுமென்று இருக்கிறவன், மாளிகை கட்டாமல் அஸ்திவாரமே போது மென்றிருக்கிறவனுக்குச் சமானமாகிறான்.''

படிக்க வேண்டிய நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும் என்பதையும், அரைகுறைப் படிப்பு ஆபத்து விளைவிக்கும் என்பதையும் தமது நவீனத்தில் தக்க உதாரணங்களுடன் விளக்குகிறார் வேதநாயகம். அதிகம் படித்து விட்டோம் என்று கர்வம் அடைந்திருப்பவர்களுக்குத் தகுந்த சாட்டையடியும் கொடுக்கத் தவறவில்லை அவர்.

''தர்க்க சாத்திரம் அறிந்தவர்கள், இலக்கணங்களைத் தகுதியாக அறியமாட்டார்கள்; இலக்கண நூலிற் தேர்ந்தவர்கள் வேத நூல், இலக்கியம் முதலானவைகளைச் சரியாக அறியார்கள். அப்படி அறிந்தவர்களிற் பலர் இனிய

கவிதைகளை இயற்றும் ஆற்றலைப் பெற்றிருக்கமாட்டார்கள். அப்படியே முயன்று கவிதைகளை எழுதினாலும் புதுமையாக அவற்றில் ஒன்றும் இராது. பருத்தியை விதைத்துப் பயிராக்கி, பஞ்செடுத்து நூல் நூற்று, ஆடைகளை நெய்து கொடுத்தால், அவைகளை உடுத்திக் கொள்வது பெரிதா? அதைப்போல, அர்த்தத்துடன் இலக்கண இலக்கியமாகிய அருமையான பல நூல்களை முன்னோர் செய்து வைத்திருப்பதால் அந்நூல்களின் சிலவற்றை மட்டுமே கற்றறிந்து அந்தக் கல்வியாற் கர்வமடைவதிற் பயனென்ன?'' என்னும் பொருள்பட சில பாடல்களை அவர் "நீதி நூலில்'' இயற்றியுள்ளார்.

இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் வேதநாயகம்பிள்ளை தமது கருத்துக்களை ஆணித்தரமாகப் பல்வேறு நியாயங்களுடன் எடுத்துக் காட்டி விளக்குகிறார். அவையனைத்தும் இன்றும் என்றும் பொருந்தக் கூடிய கருத்துக்களாகும்.

கவிஞர், நாவலாசிரியர் என்பதற்கும் மேலாக, 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளை' இயற்றிய இசை மேதை வேதநாயகம் பிள்ளை. அத்தோடு சமரச நோக்கை இவர் தமது வாழ்விலும் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மூலம் திருவாடு துறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரின் சிறந்த நண்பரானார் வேதநாயகர். நேரிலும், கடிதங்கள் மூலமும் இருவரும் இனிய கவிதைகளை இயற்றி இலக்கியப் பரிவர்த்தனை புரிந்தனர். தனிப்பாடல் தொகுதியில் இடம் பெற்றுள்ள இப்பாடல்கள் கற்பனை நயமும், நகைச்சுவையும் பொருந்தியவையாகும். ஆங்கிலத்தின் செல்வாக்கு ஓங்கியிருந்த அக்காலத்தில், கவனிப்பாரற்றுக் கிடந்த தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பண்டார சன்னதிகள் (சுப்பிரமணிய தேசிகர்) எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டி வேதநாயகர் இயற்றியுள்ள ஒரு பாடல், அவருக்கும் பொருந்துவதாகும்.

"வானென் றுதவவருஞ் சுப்ர
மணிய வரோதயனே
தானென்று வெண்ணரன்
பாடையிந் நாட்டிற்
தலையெடுக்க
ஏனென்று கேட்பவ ரில்லாத்
தமிழை இனிதளிக்க
நானென்று கங்கணம் கட்டிக்
கொண் டாயிந்த
நானிலத்தே"

ஒரு சைவ மடத் தலைவரும், கத்தோலிக்கக் கிறித்தவப் பிரமுகரும் நெருங்கிப் பழகுவதென்பது அக்காலத்தில் புதுமைமட்டுமல்ல, புரட்சியும் ஆகும்!

சமரசப்பற்றும், முற்போக்குச் சிந்தனையும் கொண்ட வேதநாயகர், தமது இறுதி நாட்களில் மாயூரம் நகர் மன்றத் தலைவராகவும் விளங்கிப் பொதுத் தொண்டாற்றியுள்ளார்.

—புத்தக நண்பன்

# வழுக்கைத் தலை ஆராய்ச்சி

[ஆர். டெனன்ட் எம். டி.]

சமீப காலத்தில் வழுக்கைத் தலையைப் பற்றி அதிக ஆராய்ச்சி நடைபெற்றிருக்கிறது. பலருக்கு வம்ச பரம்பரையாக அது உண்டாகிறது என்றும், இப்படி உண்டாகும் வழுக்கையைக் குணமாக்க முடியாது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு பரிசோதகர் வழுக்கைத் தலையுள்ள அநேகரின் குடும்பங்களை ஆராய்ந்து பார்த்து, அது நான்கு அல்லது ஐந்து தலைமுறைகளாக, தகப்பனிடமிருந்து மகனுக்கு வாரிசுகிரமமாக வந்திருக்கக் கண்டார். அந்த வம்சங்களிலுள்ள பெண்களுக்கு வழுக்கை விழவில்லை. ஆனால் அவர்களுடைய இரத்தத்திலே இந்த வழுக்கையின் அம்சம் இருக்குமாம். இதனால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளின் தலை வழுக்கையாகி விடுகிறது என்று அந்த விஞ்ஞானி கண்டார்.

ஸி. எஸ். மில்லர் என்பவரும் இவ் வண்ணமே தமது ஆராய்ச்சியில் கண்டார். வண்ணாத்திப் பூச்சியின் வர்ணத்தையும் வரிக்குதிரையின் வரியையும் போலவே, வழுக்கையும் சிலருக்குச் சகஜமாக ஏற்படுகிறது என்று அவர் கூறுகிறார்.

ஆனால் அவர்களில் அநேகருக்கு இந்தத் தலை மயிர் நஷ்டத்துக்கு ஈடு செய்வதற்காகத் தானோ என்னவோ, உடம்பில் ரோமம் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானி ஆயிரம் மனிதர்களைப் பரிசோதித்தார். அவர்கள் இருபத்து நான்கு வயதிலிருந்து நாற்பத்திரண்டு வயது வரை உள்ளவர்கள்; நல்ல ஆரோக்கியமானவர்கள். அவர்களில், உடலில் அதிக மயிர்க் கட்டு இருந்த 614 பேரில், 114 பேருக்கு வழுக்கை விழுந்திருந்தது. அவர் இந்தப் புள்ளி விவரங்களையும் தருகிறார்: அதிக தலை மயிர் இருக்கப் பெற்றவர்களில் 41·8 சதம் பேருக்கு உடம்பில் மயிர் குறைவாக இருந்தது. 51·8 சதப் பேருக்கு மிதமாகவும், 6·4 சதப் பேருக்கு அடர்த்தியாகவும் இருந்தது. வழுக்கைத் தலையர்களில் 21·8 சதப்பேருக்கு உடலிலும் சொற்ப மயிர் இருந்தது; 59·2 சதப் பேருக்கு மிதமாகவும், 19 சதப் பேருக்கு அதிகமாகவும் இருந்தது.

இந்தக் கணக்குகளைக் கூர்ந்து படித்தால், பொதுவாக, தலை மயிர் குறைவாக இருக்கப்பெற்றவர்களுக்கு உடலில் அதிக

ரோமக் கட்டு இருக்கும் என்பதைத் தெளிவாகக் காணலாம்; ஆனால் சிலருக்கு உடலிலும் அது குறைவாகவே இருக்கும்.

நமது மயிர் ஒழுங்கு வம்சக் கிரமமாக வருவது என்பதில் ஐயம் இல்லை. அது ஜாதிக்கு ஜாதி வேறுபடும் என்பதும் வெளிப்படை. உதாரணமாக, அமெரிக்க இந்தியர்களுக்கும் எஸ்கிமோக்களுக்கும் மார்பிலும் கை கால்களிலும் மயிர் குறைவாக இருக்கிறது; வடஜப்பானில் வசிக்கும் ஐனஸ் ஜாதியாருக்கோ அடர்த்தியாக இருக்கும். ஆனால் ஒரே ஜாதி மக்களுக்குள்ளேயே மிகுந்த ஏற்றத் தாழ்வுகளைக் காணலாம்.

மேலும் சில ருசிகரமான விஷயங்கள ஆராய்ச்சியால் தெரிய வந்திருக்கின்றன. வழுக்கைத் தலையர்களுடைய இரத்தத்திலே டெஸ்டோஸ்டெரோன் (testos tertone) என்ற ஹார்மோன், பீஜச் சத்துக்களில் ஒன்று, மிகுதியாக இருக்கும். ஆனால் இதனாலே அவர்கள் அதிக ஆண்மை அல்லது வீரியம் உள்ளவர்கள் என்று கருதிவிடக் கூடாது. ஒரு வேளை இந்த ஹார்மோன் மிகுதியே வழுக்கை விழுவதற்குக் காரணமாக இருக்கலாம் என்று டி. எஸ். ஜாஸ், ஏ. எம். ராபர்ட்ஸன் போன்ற சில விஞ்ஞானிகள் ஊகிக்கிறார்கள். இவர்கள், ஆரோக்கியமான சில ஆண்களின் உடலில் டெஸ்டோஸ்டெரோன் திரவத்தைக் குத்திச் செலுத்திப் பரிசோதித்த போது, மண்டைத் தோலுக்குக் கீழே உள்ள கொழுப்பு கரைந்து போய், வழுக்கை விழக் கண்டார்கள். இயற்கையாக, மண்டையிலே நெற்றியை விட இரு மடங்கு அதிகக் கொழுப்பு இருக்கும். ஆனால் தலையில் வழுக்கை விழுந்த இடங்களில் இந்தக் கொழுப்பு கரைந்து, தோல் மெலிந்து விடும். இரத்த ஓட்டமும் தடைப்படும். இதற்குப் பிறகே மயிர் குழற்சி அடைந்து, உதிரத் தொடங்கும்.

சிற்சில வியாதிகளினாலும் வழுக்கை ஏற்படலாம். விசேஷமாக, ஸீபோரியா (seborrhea) என்ற வியாதியைச் சொல்ல வேண்டும். நமது மண்டையில் ஸீபேஷஸ் கிளாண்ட்ஸ் என்ற ஒருவித எண்ணெயச் சுரப்பிகள் இருக்கின்றன. அவைகளில் சில சமயம் மிதமிஞ்சிய எண்ணெய்ப் பசை சுரந்து, தலையில் ஒரு படலமாகப் படிந்து விடும். அதோடு பற்பல விதமான கிருமிகளும் தொற்றிவிடலாம். இதனால் தலைச் சுண்டு உண்டாகும்; முக்கியமாக, கன்னப் பொறியிலும் பிடரித் தலையிலும் பொடுகு அதிகமாக இருக்கும். சொட்டை விழும். இதற்குச் சில சிகிச்சைகள் நல்ல பலன் தருவதாக டாக்டர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவைகளைத் தாமதியாமல் செய்து கொண்டால், மேலும் மயிர் உதிராமலும் வழுக்கை படாமலும் தடுக்கலாம். தலையில் அடிக்கடி

சோப் போட்டுக் கழுவ வேண்டும். ஈதர், அல்கோஹால், ஆஸெடோன் இவைகளில் ஏதேனும் ஒன்று கலந்த மருந்துகளை உபயோகிக்கலாம். அவை எண்ணெய்ப் பசையைப் போக்கக் கூடியவை. கந்தகமும் நல்லது. பொது ஆரோக்கிய விஷயத்திலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் படபடப்பு உள்ளவர்களுக்கும், ஓய்வு கொள்ள முடியாதவர்களுக்கும், தீராக் கவலை கொண்டவர்களுக்கும், அளவுக்கு மிஞ்சி வேலை செய்பவர்களுக்கும், சம போஷணை இல்லாதவர்களுக்கும் இந்தச் சிகிச்சைகளால் அதிக குணம் ஏற்படாது. அவர்கள் முதலில் இந்தக் குற்றங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

இன்னும் இரத்த சோகை வியாதியால் பிடிக்கப்பட்டிருப்பவர்களுக்கும், தொண்டையிலுள்ள தைராய்ட் கிளாண்ட் என்ற சுரப்பியிலே குறைவாக நீர் சுரக்கப் பெறும் நோயாளிகளுக்கும், நாற்பது அல்லது நாற்பத்தைந்து மாதாந்தர ருது வருவது நிற்கத் தொடங்கும் (menopause) காலத்திலும், மயிர் துரிதமாகக் கழியலாம். நிமோனியா, சிவப்புக் காய்ச்சல், தட்டம்மை, அக்கிப்படுவன், டைபாய்ட், இன்பிளுயென்சா என்னும் இந் நோய்களைத் தொடர்ந்தும் வழுக்கை ஏற்படுவதுண்டு. தவிர, புற்று நோய், க்ஷய ரோகம், நீரிழிவு ஆகிய வியாதிகளால் நீண்ட காலம் படுக்கையாக இருக்கும் நோயாளிகளுக்கும் ரோம நஷ்டம் உண்டாகலாம்.

இந்த நோய்களுக்குத் தகுந்த மருத்துவம் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்லத் தேவை இல்லை என்று எண்ணுகிறேன். இரத்த சோகைக்கு இரும்பு இஞ்செக்ஷன் அவசியம்; உடம்பிலே தைராய்ட் நீர் குறைவாக இருந்தால், தைராய்ட் சத்தை (thyroid extract) இஞ்செக்ஷன் செய்து கொள்ள வேண்டியதிருக்கும். விரல்களின் நுனியால் மண்டையைப் பிடித்து விட்டுக் கொள்ளுதல், அல்ட்ரா வயலட் ஒளி, சூடு, இம் முறைகள் அதிக நன்மையைக் கொடுக்கும்.

இன்னும் ஒரு மர்ம வியாதி இருக்கிறது. அதற்கு ஆலோபிஸியா அரீயாட்டா (alo-pociaareata) என்று பெயர். இந்த வியாதியிலே, வழுக்கை படிப்படியாகவும் ஏற்படலாம்; ஐந்து, ஆறு நாட்களுக்குள்ளாகத் தலை மயிர் அத்தனையும் கொட்டி விட்ட சம்பவங்களும் உண்டு. கந்தகம், டிங்க்சர் ஐயோடின், கேட் எண்ணெய் (cade oil) முதலிய மருந்துகளைத் தேய்த்துப் பார்க்கலாம். ஆஸிட்களும் உபயோகமானவை. இவைகளால் குணம் தெரியவில்லையானால், எக்ஸ்-ரே சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். உட்சுரப்பிகளைச் சோதித்துப்பார்ப்பது அவசியம்.

—"நல்வழி"

# எதற்குப் பயம்?

எட்னு டி. ஹிக்ஸ்

மின்னல், இடி, கிணறு, இருட்டு, கோபுரம் இவற்றில் எதையாவது பார்த்து நீங்கள் பயப்படுவதுண்டா? ஒவ்வொருவருக்கும் இந்தமாதிரி ஏதாவதொரு பயம் (ஃபோபியா) உண்டு. உங்கள் உறவினருக்கு உண்டு; உங்கள் நண்பரில் பலருக்கு உண்டு. சாதாரண மக்களில் நூற்றுக்கு இருபத்தைந்து பேருக்கு ஏதாவது ஒரு விசேஷ பயமோ, குருட்டு நம்பிக்கையோ, நீண்ட நாள் கிலியோ இருக்கிறது. பெருந்திகிலாலும் கலவரத்தாலும் ஜனங்கள் எத்தனை பேர் எவ்வளவு வேதனை அடைகிறார்கள் என்பதை அறியும்போது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால், ஜனங்களின் இந்தப் பயங்களையெல்லாம் சுலபமாகக் கண்டுபிடித்து, இவற்றால் ஏற்படும் வேதனையைக் குறைத்து விடுவது சாத்தியம்.

'ஃபோபியா' என்பது, ஒரு தீங்கும் விளைவிக்காத ஒரு விஷயத்தில் ஏற்படும் அநாவசிய பயம். இந்த அநாவசிய பயம் காரணமாக எல்லோரும் ஒரே விதமாய் நடந்து கொள்வதில்லை. சிலபேர் சொற்ப வேதனை அடைகிறார்கள். குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட ஏதோ ஒரு நிகழ்ச்சிதான், 'ஃபோபியா' என்ற அநாவசிய பயத்துக்குக் காரணம் என்று மனத்தத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள்.

தங்கள் குழந்தைகள் இருட்டைக் கண்டு பயப்படுவதை அநேக பெற்றோர்கள் கண்டிருப்பார்கள். விளக்கை அணைத்தவுடனே சிறுவர்கள் பயப்படுகிறார்கள். இதனால், வயதடைந்து பெரியவர்களான பின்பும் இவர்கள் பயப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இருட்டைக் கண்டு ஏற்படும் பயத்தை 'நிக்டோஃபோபியா' என்று குறிப்பிடுகிறார்கள்.

என் நண்பர்கள் எல்லாருக்கும் இதோ இந்தப் பிரசித்தமான ஃபோபியாக்களில் ஏதாவது ஒன்று இருக்கிறது. (1) உயரமான இடங்களைக் கண்டு பயப்படுவது, 'ஆக்ரோஃபோபியா'; (2) மூடிய இடங்களைக் கண்டு பயப்படுவது, 'க்ளாஸ்ட்ரோஃபோபியா'; (3) இருட்டைக் கண்டு பயப்படுவது, 'நிக்டோஃபோபியா'.

இந்தப் பயம் ஏற்பட்ட ஒருவருக்கு உடனே நடுக்கம் எடுக்கலாம்; இருதயம் படபட என்று அடித்துக் கொள்ளலாம்; வேர்த்து விறுவிறுக்கலாம்; ஒரே

யடியாய்ச் சோர்ந்துபோய் அசதி ஏற்படலாம்

நெப்போலியன் போனபார்ட்டுக்குப் பூனைகளைக் கண்டு பயம் உண்டாகும். அதற்கு 'ஈலுரோஃபோபியா' என்று பெயர். சக்கரவர்த்தி நெப்போலியனுக்கு நூறு பீரங்கிகளைச் சிறிதும் மனந் தளராமல் எதிர்த்து நிற்கும் தீரம் உண்டு; ஆனால், பத்தே பத்துப் பூனைகளைக் கண்டால் பெருந் திகிலுற்று அவர் ஓட்டம் பிடித்து விடுவார்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண், எங்கள் வீட்டு மாடியில் சிறிய அறை ஒன்றில் குடியிருந்தாள். அவளுக்கு இடம் போதவில்லை. தவிர மட்டத்துக்குக் கீழே இருந்து ஓர் அறையில், பிரம்மாண்டமான இரும்புப் பெட்டி ஒன்றை அவள் வைத்திருந்தாள். அதிலிருந்துதான் அவளுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் எடுத்துக்கொள்ளுவாள். அந்தப் பாதாள அறைக் கதவைத் திறக்கும்போதெல்லாம், இரண்டு பெரிய பாறாங்கற்களைக் கதவுக்கு முட்டுக் கொடுத்து விட்டுத்தான் அறைக்குள் போவாள். ஏன் என்று கேட்டால், "கதவைக் காற்றடித்து மூடி விடுமோ, நான் உள்ளே யிருப்பது தெரியாமல் அதை யாராவது மூடிவிடுவார்களோ என்றெல்லாம் எனக்குப் பெருந் திகிலா யிருக்கிறது" என்று அவள் சொல்லுவாள்.

"அறைக்கு ஆறு ஜன்னல்கள் இருக்கின்றன. நீ கூச்சல் போட்டால், தெருவிலே போகிற யாருக்கும் கேட்குமே" என்று நான் தைரியம் சொன்னேன்.

இருந்தாலும், அவள் கேட்கவில்லை. "காற்றடித்துக் கதவை மூடிவிட்டால், அந்தக் கிலியே என்னைக் கொன்றுவிடும்" என்று அவள் சொன்னாள். பூமிக்குள்ளே இருக்கும் அறைகளைக் கண்டு அவ்வளவு பயம். இதற்கு 'பாட்டோஃபோபியா' என்று பெயர்.

அவளுடைய குழந்தைப் பருவத்தில் இந்த மாதிரி பாதாள அறைகளுக்குள் அவள் இருந்ததுண்டா என்று விசாரித்தேன். அவள் சற்று யோசித்துவிட்டு, "புயலுக்குப் பாதுகாப்பாக எங்கள் வீட்டிலே ஒரு பாதாள அறை இருந்தது. வெளியே புயல் அடித்தால், என்னையும் மற்றக் குழந்தைகளையும் எங்கள் அப்பா இந்த அறைக்குள் அழைத்துச் சென்று விடுவார். சுவர் இடிந்து அறைக் கதவில் விழுந்து மூடிவிட்டால், அப்படியே நாங்கள் ஒரேயடியாய்ச் சமாதியாகி விடுவோமே என்று எனக்கு ஒரே பயமாயிருக்கும்" என்றாள். இதற்கு 'டாஃபேஃபோபியா' என்று பெயர். புயலே அவளுடைய பயத்துக்குக் காரணம். இதனால் இடி, மின்னல், மழை இவற்றிடமும் அவளுக்குப் பயம் உண்டாகிவிட்டது. மின்னல் பயத்தை 'கொரானோஃபோபியா' என்றும், மழைப் பயத்தை 'ஆஸ்ட்ரோஃ

'போபியா' என்றும் சொல்லுகிறார்கள்.

ஒரு குழந்தை தட்டுக் கெட்டு ஒரு கூட்டத்துக்குள் அகப்பட்டுக் கொண்டாலும் சரி, ஏதாவது கூட்டத்திலே அதற்கு விபத்து நேர்ந்தாலும் சரி, பின்னுல் எப்போதும் கூட்டத்தைப் பற்றி அதற்கு ஒரு பயம் ஏற்பட்டுவிடும். திறந்த மைதானம், விசாலமான தெரு இவற்றையெல்லாம் பார்த்தால் அதற்குப் பயம் உண்டாகும். இதற்கு, 'ஆகொராஃபோபியா' என்று பெயர்.

நீரைக்கண்டு ஒருவனுக்கு ஏற்படும் பயத்துக்கு 'ஹைட்ரோஃபோபியா' என்று பெயர். இந்தப் பயம் உள்ள ஒருவனை நீங்கள் ஒரு படகில் ஏற்றிச் சென்ருல், அவன் மாரடைத்துச் சாகக் கூடும். பெரிய மலைகள், உயர்ந்த கட்டிடங்கள், உயரமான படிகள் இவற்றைக் கண்டு பயப்படுவது 'ஆக்ரோஃபோபியா'. இந்தப் பயம் உள்ள ஒருவன், சர்க்கஸில் ட்ரபீஸியம் விளையாட்டில் வல்லவனுக முடியாது. ரத்தத்தைக் கண்டு பயப்படுவது 'ஹெமட்டோஃபோபியா'. இந்தப் பயம் உள்ள ஒருத்தி, நர்ஸாகவோ டாக்டராகவோ வேலை செய்ய முடியாது.

என் மகளுக்குச் சிலந்தியைக் கண்டால் ஒருவித பயம் வந்து விடுகிறது. இது 'அராக்னிஃபோபியா'. சற்றும் அபாயம் இல்லாத சிலந்தி ஒன்றை மச்சிலே கண்டாளோ இல்லையோ, உடனே அவளுக்குப் பெருங்கிலி ஏற்பட்டு விடும். வெளியே ஓடி, யாரையாவது கூப்பிட்டு அதைக் கொல்லச் சொல்லுவாள். சிலந்தியைக் கொன்ற பிறகுதான், அறைக்குள்ளே திரும்பவும் நுழைவாள். அவளுக்கு ஐந்து வயதாயிருக்கும் போது, அவளுடைய தாத்தா அவளுக்கு இந்தப் பயத்தைப் புகட்டிவிட்டார். "தோட்டத்தில் இஞ்சிப் புல் இருக்கிறதே, அதில் கறுப்புச் சிலந்தி வரும். அது உன்னைக் கடித்தால், நீ செத்துப் போவாய். கறுப்புச் சிலந்தி வந்தால் உடனே என்னைக் கூப்பிடு" என்று ஒரு நாள் அவளிடம் அவர் சொல்லியிருக்கிருர். முதல் முதல் கறுப்புச் சிலந்தியைக் கண்டதும், தாத்தாவிடம் ஓடி வந்து அவள் சொல்லியிருக்கிருள். அவர் சட்டென்று போய்த் தீக்குச்சியைக் கிழித்து, சிலந்திக்குக் கீழே நீட்டி அதைக் கொளுத்தி யிருக்கிருர். இப்போது இஞ்சிப் புல் இருக்கும் இடத்துக்குச் சென்ருலே அவள் திகில் அடைகிருள்.

என் நண்பர் ஒருவர் புதிய மனிதர்களைச் சந்திப்பதென்ருலே தயங்குகிருர். காரணம், புதிய மனிதர்களிடம் எல்லாம் அவருக்கு ஒரு பயம் உண்டாவது தான். இதற்கு 'ஸெனேஃபோபியா' என்று பெயர். 'புதிய மனிதர்களின் முன்னிலையில் நாணிக் கூசி விடுவேனே?' என்றும் ஒரு பயம் அவருக்கு உண்டு. இது 'எரித்ரோஃபோபியா.'

எனக்குத் தெரிந்த ஒரு பெண், போர் வீரர்களின் அணி வகுப்பைப் பார்க்கப் போக மாட்டாள். குதிரைகளையும் விலங்குகளையும் கண்டு இவளுக்குப் பயம். இது 'ஜூஃபோபியா'. இவள் சிறு குழந்தையாக இருந்த போது, ஓர் அணிவகுப்பு நடந்ததாம். அதில் ஒரு குதிரை, ரஸ்தா ஓரத்து மேடையில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இவளுடைய காலடியில் வந்து கலாட்டா செய்ததாம்.

இதைத் தவிர, இவள் சிறுமியாயிருந்த காலத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தாளாம். அப்போது இவளை ஒரு தேனீ கொட்டி விட்டதாம். இப்போது, தேனீக்களையும் குளவிகளையும் கண்டுகூட இவள் திகில் அடைகிறாள். இது 'மெலிஸ்ஸோஃபோபியா'. இவள் ஓட்டிக்கொண்டிருக்கும் காரின் விண்ட் ஷீல்ட் கண்ணாடியைச் சுற்றி ஒரு தேனீ வந்து வட்டமிட்டால் போதும்; உடனே இவள் காரை நிறுத்திக் கீழே இறங்கி ஓடி, யாரையாவது கூப்பிட்டு, அந்தத் தேனீயை விரட்டச் சொல்லுவாள்.

பல வருஷங்களுக்கு முன்பு என் மாமா வில்பர், "நீ நல்ல பெண்ணாயிருக்க வேண்டும். இல்லா விட்டால், உன்னைப் பிச்சைக்காரனிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்" என்று என்னிடம் சொல்வார். யாராவது பிச்சைக்காரன் எங்கள் வீட்டு வாசலிலே போகும்போதெல்லாம், பிச்சைக்காரனைக் காட்டிப் பயமுறுத்துவார். இன்று வரைக்கும் எனக்கு 'வில்பர்' என்ற பெயரைக் கேட்டாலே, பெரும் பயமாயிருக்கிறது. ஒரு பெயரைக் கேட்கும் போதே உண்டாகும் பயத்துக்கு 'ஆனமட்டொஃபோபியா' என்று பெயர்.

என் நண்பர்களில் பலருக்குப் பாம்புகளைக் கண்டு பயம். 'ஆஃபிடியோஃபோபியா' என்பது இதன் பெயர். சினிமாப் படங்களில் பாம்பைக் கண்டால்கூடச் சில பேர் பயப்படுகிறார்கள். படத்திலே வரும் பாம்பு இவர்களை என்ன செய்துவிடும்? ஒரு தீங்கும் செய்யாது என்று இவர்களுக்குத் தெரியாதா?

சில இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் தங்கள் பாலிஸிகளில் 13-ஆம் தேதி போட்டுக் கொடுப்பதில்லை. ஏனென்றால், ஒரு குருட்டு நம்பிக்கை காரணமாக 13 என்ற எண் மீது பல பேருக்குப் பயம் இருக்கிறது. இதற்கு, 'ட்ரையகை டெகாஃபோபியா' என்று பெயர்.

என் சிநேகிதி திருமதி ஸ்மித் என்பவள் சின்னப் பெண்ணாக இருந்த போது, அவளுடைய தாய் ஒரு சமயம் மின்சார இஸ்திரிப் பெட்டியை நிறுத்த மறந்து போய் விட்டாள். அதனால் வீட்டிலே தீப்பிடித்துக் கொண்டது. வீட்டு முற்றத்திலே இந்தப் பெண் உட்கார்ந்து நடுங்கி அழுதுகொண்டிருந்தாள்.

தீ அணைக்கும் படையினர் வந்து வீட்டை நாலு புறமும் சூழ்ந்து கொண்டு தீயை அணைத்தார்கள். அதிலிருந்து இன்றளவும் என் சிநேகிதிக்குத் தீ என்றாலே அசாத்திய திகில். இது 'பைரோஃபோபியா'.

வேறு பல பயங்களும் உண்டு. உலோகங்களையும் உலோகப் பொருள்களையும் கண்டு பயப்படுவது 'மெட்டலோஃபோபியா'; மீன்களைக் கண்டு பயப்படுவது 'இச்திஃபோபியா'.

ஒரு பாலத்தின் மீதோ நீருக்கு அருகிலோ இருக்கும் வேறு ஏதாவது சட்டங்களின் மீதோ நடக்கப் பயப்படுவது 'கைஃபைரோஃபோபியா'. இந்தப் பயம் ஸ்ரீமதிஜோன்ஸ் என்ற ஒரு பெண்மணிக்கு இருக்கிறது. இவள் சிறுமியாயிருந்தபோது, ஒரு கார் போய்க் கொண்டிருந்ததாம். அந்தச் சமயத்தில் அப்படியே காரோடு பாலம் இடிந்து விழுந்ததை இவள் பார்த்தாளாம்.

இயற்கைக்கு மீறிய இந்தப் பயங்களுக்கெல்லாம் இயற்கையான காரணம் உண்டு. இது வெறும் மனக்கிலிதான். ஆயினும், வருஷங்கள் செல்லச் செல்ல வலுத்துவிடுகிறது.

உங்கள் மனக்கிலி ஃபோபியா தீர்ந்து குணமாக வேண்டும் என்றால், திட்டமாக உங்களுக்கு எதைக் கண்டு பயம் உண்டாகிறது, எந்த நிகழ்ச்சி அதற்குக் காரணம் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். இது மிகவும் சுலபமான காரியமாயிருக்கிறதே என்று தோன்றும். ஆனால் பயத்தை வெல்ல இதுதான் திறவுகோல்.

இன்று சிலபொருள்களிடமோ நிகழ்ச்சிகளைக் கண்டோ உங்களுக்கு உண்டாகும் பயத்துக்கு உங்கள் சிறு வயதில் நடந்த எந்த நிகழ்ச்சி காரணம் என்று சிந்தித்துக் கண்டு பிடியுங்கள். அப்படிக் கண்டுபிடித்த பிறகு, பயத்தைக் குறைத்துக்கொண்டு சாந்தமாயிருக்க ஒவ்வொரு நாளும் முயலுங்கள் 'தன்னைத் தானே கட்டுப் படுத்திக்கொண்டு திடசங்கல்பத்தோடு இருந்தால், இந்த விஷயத்தைச் சமாளித்து விடுவேன்' என்று உங்களுக்கு நீங்களே மனதுக்குள் சொல்லிக் கொள்ளுங்கள்.

உண்மையைச் சொல்லப் போனால், லேசான மனக்கிலி மனிதனுக்கு இயற்கையான உணர்ச்சியாகும். அபாயத்திலிருந்து பாதுகாப்பாகவே அது நமக்கு ஏற்படுகிறது. உதாரணமாக, குன்றுகளின் உச்சியில் உள்ள பாறை ஓரத்துக்குப் போய்விடாமல் சற்று உள்ளடங்கி நிற்பதே பத்திரமாகும். இது இயற்கை. ஆனால்உயரமான இடங்களைக் கண்டு அநாவசிய கிலி அடைகிறவர்கள், வீட்டின் இரண்டாவது மாடியில் உள்ள படுக்கை அறைக்குப் போகக் கூடப் பயப்படுவார்கள்.

உங்கள் மனக் கிலி என்னவாக இருந்தாலும் சரி; அதை நீங்களே நன்றாக அறிந்துகொண்டு

[22 ஆம் பக்கம் பார்க்க]

# நோய் தீர்க்கும் நூல்கள்

[விக்டர் இமானுவேல், பி, ஏ., எல். டி. எஸ்ஸி.]

அமெரிக்க மருத்துவ நூலக மொன்றில்... சில ஆண்டுகளுக்கு முன்னர்...

கை எலும்பு முறிந்த நோயாளி ஒருவர் கையில் கட்டோடு நுழைந்தார். கனமான கலைக் களஞ்சியத்தில் இரண்டு நூல்கள் வேண்டுமென்று கேட்டார். இது போன்ற விலையுயர்ந்த, குறிப்புக்களை மட்டும் கொண்ட தடித்த நூல்களை வழங்குவது இல்லை என்பது நூலக விதி. நூலகர் சிறிது தயங்கினார். இருப்பினும், வாசகரது ஆர்வத்தை மெச்சினார்; விதியைத் தளர்த்தினார்; அனுமதி வழங்கினார்.

நாட்கள் உருண்டோடின. கொடுத்த நூல்கள் திருப்பித் தரப்படவில்லை. நினைவுறுத்த எண்ணி, நோயாளிகள் அறைக்குச் சென்றார்; வாசகரைக் கண்டார்; நூல்களைப்பற்றிக் கேட்டார்.

"இன்னும் கொஞ்ச காலத்திற்கு அவைகள் தேவைப் படலாம்" பதில் நூலகர் காதுகளில் விழுந்தது.

வாசகரே தொடர்ந்து,

"அந்த நூல்களை நான் என்னுடைய பையில் எடுத்துச் செல்வதால் முறிந்த கை எலும்பு ஒட்டுவதற்கு இந்தக்கனம் உதவலாம்" என்றார்.

இதைக் கேட்ட நூலகர்...

* * *

உள நோய் மருத்துவ நூலகமொன்றில்...பதினெட்டு வயது குமரி...

தற்கொலை செய்யவினைக முயன்று காவலரால் பிடிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டவள், பிறந்த நாளிலிருந்து முகத்தில் பெரிய தழும்பு இருந்து வந்தது. முகத்தின் அழகை அது கெடுக்கிறது என்று மனப்பிராந்தி, விரும்பத்தகாத குடும்பச் சூழ்நிலை இவைகளே தற்கொலைக்குக் காரணங்கள். டீபிங்ஸ் (Deepings) எழுதிய நூல் அவளது பார்வையில் வைக்கப்பட்டது. இந்நூலின் கதாநாயகன் நொண்டி. மருத்துவக் கல்லூரி மாணவன். உடற்குறையைப் பற்றிக் கவலையுறவில்லை; தாழ்வு மனப்பான்மையும் கொள்ளவில்லை. வாழ்வில் ஊக்கமுடன் உழைத்தான்; உயர்ந்தான். பெயரும் புகழும் கிடைத்தது.

---

[21ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமாளிக்க முயலுங்கள். அது உங்களை மீறி வலுப்பட்டு விடாத படி பார்த்துக்கொள்ளுங்கள்.

மகிழ்ச்சியா யிருங்கள்; பத்திரமாயிருங்கள். உங்களுக்குப் பயமே இராது. "மஞ்சரி"

இந்நூலைப்படித்த பெண்ணின் முகத்தில் புதிய ஒளி, தெம்பு, உற்சாகம், ஊக்கம் இவைகளின் கூட்டுப்பலன், அவள் பெற்ற தன்னம்பிக்கை. இளைஞனின் கதை குமரிக்கு வழிகாட்டியாக அமைந்தது. வாழ்வைச் சீரமைக்க உதவியது. ஒரு பிடிப்பையும் உண்டாக்கியது.

* * *

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" நமது நாட்டில், பண்டைக் காலந்தொட்டே வழங்கி வருகின்ற பழமொழி. நோயில்லாமல் வாழ்கின்ற வாழ்வை, பெறற்கரிய பெரும் பேறாகக் கொள்ளுவது முறையாகும். உடலை வளர்க்கின்ற உணவைப்போல, உள்ளத்தைப் பண்படுத்துவது சிறந்த கல்வியறிவு. ஒரு பகுதி. நூலறிவு பெறுவதற்குத் துணைபுரிவன நூல்கள். அவற்றில், சில நூல்களைத் திறக்கும் பொழுது ஆசையும், ஆர்வமும் இருக்கும்; படித்து முடித்த பின் மகிழ்வும் நிறைவும் இருக்கும். அவைகளே சிறந்த நூல்கள், பயன்தரும் நூல்கள்.

நோயாளி என்று குறிப்பிடுகின்ற பொழுது, பொதுவாக உடலில் நோய் கண்டவர்களையே குறிப்பிடுகின்றோம். வெளிப் பார்வைக்கு நோயில்லாதவர்களாகக் காணப்படினும், உள நோய் இருந்தால் அவர்களும் நோயாளிகளே. உள நோய் என்பது, மூளைக் கோளாறினால் ஏற்படுகின்ற அமைதியின்மை, அதன் பலனாக அனுபவிக்கின்ற உறக்கமின்மை போன்ற நோய்களைக் குறிக்கும். இவ்வகை நோய்களைத் தீர்க்க முற்படுகின்ற முறையே உளநோய்மருத்துவம் (Psycho-theraphy) ஆகும்.

இருவருக்கிடையில் தொடர்பை ஏற்படுத்தி, அதன் மூலம் மருத்துவம் செய்கின்ற சிகிச்சை முறையே உள நோய் மருத்துவம் என்று அழைக்கப்படுகின்றது. மருத்துவக் கழகக் கூட்டமொன்றில் இப்பேருண்மையை எடுத்துரைத்தவரும்—அப்போது, எள்ளி நகையாடி ஏளனப் படுத்தப்பட்டவரும் சிக்மெண்ட் பிராய்டு என்னும் உள நூல் ஆராய்ச்சியாளர் ஆவார். அவரது கூற்றை மெய்ப்பித்த நிகழ்ச்சி:

ஜான் ஸ்டூவர்டு மில் என்ற பொருளாதார நிபுணர் வாழ்வில் கசப்படைந்து, வாழ்வையே முடித்துக்கொள்ள முற்பட்ட தருணம். அதிகமாக இன்னும் ஓராண்டு காலமே உயிருடன் இருப்பேன் என்று நம்பிக்கையிழந்திருந்த நேரம். 'கெடு' வைத்த காலத்தில் பாதி கடந்த பிறகு, ஒரு நாள் எனது இருளடைந்த வாழ்வில் புத்தொளியின் கதிர்கள் வீசத் தொடங்கின. அந்த நாள், மார் மெண்டலியின் (Mormentel) "நினைவுகள்" என்ற நூலைப்படித்தநாள் ஆகும். அதிலிருந்த பகுதி ஒன்றில்,

"எனது தந்தை இறந்தார். குடும்பச் சூழ்நிலை மிகவும் மோசமாகிக் கொண்டு வருகிறது. இருந்தும், ஏதோ ஒன்றினால்

உந்தப்பட்டேன். என் உள்ளத்தில் அசுரவேகம் பிறந்து சிறுவனாக இருந்தாலும் என்னால் இயன்ற மட்டும் குடும்பத்தைக் காப்பாற்றுவேன் என்று சங்கல்பம் எடுத்தேன்" என்றிருந்தது. இவ்வரிகளைப படித்தபொழுது, என் உடல் வியர்த்தது; மெய் சிலிர்த்தது; தளர்வு நீங்கியது: நம்பிக்கை பிறந்தது; உண்மை புரிந்தது; நன்மை விளைந்தது."

பிராய்டின் உண்மை நெறியை ஒட்டி, பிரெஞ்சு உள நூல் மருத்துவர் பியரி ஜெனட் "நோயாளிகளுக்கு நூல்களின் மூலம் நம்பிக்கை யூட்ட முடியும்; அவர்களது உணர்வுகளைத் தட்டி எழுப்ப முடியும்" என்று நம்பினார்.

இத்தருணத்தில், உடலுக்கும் உள்ளத்துக்கு மிடையிலுள்ள பிணைப்பை உணர்தல் நல்லது. உணர்ந்து இருந்தால் நினைவில் கொள்வது சிறந்தது. உடலும் உள்ளமும் ஒன்றையொன்று சார்ந்துமுள்ளன. உடலில் ஏற்படுகின்ற மாற்றம், உள்ளத்தைப் பாதிக்கின்றது. ஓரளவு மாற்றவும் செய்கிறது எனலாம். இதனால்தான், அதிகக்கோபமோ அல்லது மகிழ்ச்சியோ ஏற்பட்டால், இரத்த ஓட்டத்தின் வேகம் அதிகமாகி வாழ்வை முடித்து விடுகின்ற அளவுக்குச் சில வேளைகளில் சென்றுவிடுகிறது. நாவல் அல்லது சிறு கதை படித்துக் கொண்டிருந்தவர்கள், கதையில் உள்ள நிகழ்ச்சிகள் பிடிக்காததாலோ அல்லது கதையின்முடிவு எதிர்பார்த்ததற்கு மாறாக அல்லது ஏமாற்றமளிக்கும் வகையில் எழுதப்பட்டிருந்தாலோ ஆசிரியர் மேலுள்ள கோபத்தை, நூலின் மேல் காட்டி விடுகிறார்கள்; சில வாசகர்கள், உள்ளத்தைத் திறந்து கடிதங்களில் உணர்ச்சிகளைக் கொட்டி விடுகிறார்கள். ஆசிரியரைக் கண்டதுண்டமாக வெட்டிப் போட விழைகின்ற வாசகர்களும் இல்லாமல் இல்லை. இந்நிகழ்ச்சிகளெல்லாம் கதையின் நிகழ்ச்சியோடு வாசகர்கள் எவ்வளவு தூரம் ஒன்றிப் போகிறார்கள் என்பதையும், அவர் தம் உணர்வுகளைத் தூண்டிவிட்ட எதிரொலியின் விளைவுகள் என்பதையும் தவிரவேறு எதைக் காட்டுகின்றன?

உளநோய் மருத்துவத்திற்கும் நூல் நோய் மருத்துவத்திற்கும் (Biblio-therapy)நெருங்கியதொடர்பு உண்டு. நூலின் அளவு, அச்சின் அளவு, தரம், தன்மை,மையக் கருத்து, இலக்கியச்சான்று ஆகிய பல நிலைகளைக் கொண்டிருக்கும். இதைப் போலவே, படிக்கும் ஆற்றல், அறிவு, கல்வி, சமுதாயம், பண்பாட்டுச் சூழ்நிலை, தனிப்பட்ட ஆசைகள், வெறுப்புகள், தேவைகள்—ஆகிய பலமாறுபட்ட மனநிலையில் நோயாளிகள் இருப்பர். அவர் தம் நோய்களும் பலவாகும். நோயாளிகளின் புண்பட்ட உள்ளங்களுக்கு இதமளித்து ஆறுதலளித்து வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்த முற்பட வேண்டும். நோயாளியின் நூல்களோடு பிணைத்து வைத்து

நோயை விரட்டுகின்ற முறை இதுவாகும். சுருக்கமாகக் கூறினால், வறுமை வாயிலில் நுழையும் பொழுது, காதல் சன்னல் வழியாகப் பாய்ந்து ஓடுவதைப் போல, நோயாளியைக் காண நூல்கள் நுழையும் பொழுது, அவர்களைப் பீடித்திருந்த நோய் ஓடிப்போக வழி செய்வதாகும்!

நூல், நோய், மருத்துவம், உளத்தூய்மை பற்றிய செய்திகளைக்கொடுக்கலாம்; நாவல், கதை இவைகளின் தன்மையால், உளத்திற்கு மாற்றம் அளிக்கலாம்; கவிதையின் வாயிலாகத் தூண்டுகோலாக அஃது அமையலாம்; பயண நூல்களின் மூலமாகப் பல்சுவை அனுபவங்களைப் பெறத் துணைபுரியலாம். இக்கலையினைப் பெற, நல்ல பயிற்சியும், பரந்த அறிவும், சிறந்த அனுபவமும் வேண்டும். நோயின் தன்மை, நோயாளியின் கடந்த, நிகழ்கால குடும்பச் சூழ்நிலை ஆகியவைகளையும் அறிந்திருத்தல் நன்மை பயக்கும்.

உள நோய்களைத்தவிர, உடலை வருத்துகின்ற பலநோய்களுக்கும் நூல்களின் மூலம் மருத்துவம் செய்ய அறிந்திருக்கிறார்கள். பொதுவாக, எல்லா நோய்களுக்கும் இம்முறை தேவையென்றாலும், சிறப்பாகக் கட்டிலோடு கட்டிலாக நோயாளியைப் பிணைக்கின்ற நெடுநாள் நோய்களான எலும்புருக்கி, ஆஸ்துமா, டைபாய்டு, நிமோனியா, கைகால் எலும்பு முறிவு ஆகியவைகளுக்கு மிக்க அவசியமாகும். குணமாக அதிக காலம் எடுக்கின்ற நோய்களாதலால், புதிய சூழ்நிலையில் உள்ளம் சோம்பலடைய முற்படும். சோம்பலுள்ள உள்ளம் புண்பட்ட உள்ளமாக—உடைந்த உள்ளமாக மாறும். இம்மாற்றம், வாழ்வில் வெறுப்பை யூட்டும். இவ்வெறுப்பு உடம்பில் ஊறித் தீய எண்ணங்களுக்கு வித்திடும். இவ்வித்து முளைத்து, அறுகு போல் தளிர்த்து, செடியாகிப் பின் மரமாகும். வாழ்வை வேரோடுசாய்க்க முயலும். குழம்பிய உள்ளம் கொண்டோர் குமுறுவர்; பணிந்து போவர். தன்னம்பிக்கை யிழந்தவர் தடுமாறுவர்; நிலையிழப்பர்—உறுதி கொண்டோர் மட்டும், இறுதி வரை எதிர்த்துப் போராடுவர்; வெற்றியும் பெறுவர். அவர்களது வாழ்வுப் போராட்டத்திற்குத் தேவையான உளத்திட்டத்தை அளிக்கவல்ல சக்தி, நூல்களுக்கு உண்டு.

அனுபவ அறிவின் வாயிலாக, மேலைநாட்டில் நோய்களைத் தீர்க்கக் கூடிய நூல்களைப் பற்றியும், சில நூல்களைப் படிப்பதனால் நோய்கள் வரக்கூடிய நிலையையும் பற்றிய கருத்துக்கள் வெளியிடப் பெற்றிருக்கின்றன. இவைகளை அறிந்து தெளிதல் நல்லது.

தொரேல்சீ மாட்டியின் (Mrs ThorLle)"வாழ்க்கை வரலாறு" என்ற நூலைப்படித்ததின் பயனாகப் புலவர் ஒருவரைப் பீடித்திருந்த இன்புளூயன்ஸா காய்ச்சல், அவரிடம்விடைபெற்று விலகியிருக்கிறது என்ற செய்தி

ஆச்சரிய மூட்டக்கூடியதாகவும் நம்ப முடியாததாகவும் இருக்கலாம். ஆனால் அதைவிட ஆச்சரியமென்னவென்றால், நலத்துடன் இருந்த அவருக்கு, இந்நோய் வரக் காரணம், பக்கிளின் (Buckle) "நாகரீகவரலாறு" என்ற நூலைப் படித்ததுதான் என்று கூறப்படுவதுதான். இதே இன்புளுயன்ஸா நோய், ஒரு சமயம் உமர்கய்யாமின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிட்ஸ்ஜெரால்டு என்பவரைப் பிடித்திருந்தது. அப்பொழுது அவர் கார்லைல் எழுதிய "பிரெஞ்சுப் புரட்சி" என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்ததால்தானோ என்னவோ, அவரை லேசில் விடுவதாக இல்லை என்ற கூற்று இன்னும் அதிக வியப்பை அளிக்கலாம்.

ஜீரண சக்திக்குத் துணைபுரிவதற்கு மனினி என்பவர் இலத்தீன், கிரேக்க நூல்களிலிருந்து சில பகுதிகளை உரக்கப்படிப்பது வழக்கமாம். வில்லியம்ஹாஸ்லிட் என்ற இலக்கியத் திறனாய்வாளர், ஜீரணக் கோளாறுகளுக்கு "டாம் ஜோன்ஸ்" என்ற நூல் ஏற்றது என்று கூறுகிறார். நோயின் கோரப் பிடியினின்று மீண்டு, ஓய்வையும், அமைதியையும் நாடுபவர்களுக்கு, மாண்டெய்ன், ஆஸ்டின் இவர்களது நூல்கள் சிறந்தனவாம். நாவலாசிரியர் ஸ்டீவன்சன் பல்வலியில் படுத்த படுக்கையாக இருந்த பொழுது "ஷெர்லாக் ஹோம்ஸின் வீரச் செயல்கள்" என்ற நூல், பல்வலியினை உணரச் செய்யாதது மட்டுமின்றி, புளூரசி நோயினின்று குணமடையவும் செய்திருக்கிறது. விக்டர் ஹ்யூகோவின் நூல்களும், டால்ஸ்டாயின் "போரும் அமைதியும்" என்ற நூலும் ஆஸ்துமாவிற்கு நல்லவைகள் என்று கருதப்படுகின்றன.

இதைப் போலவே, பென் ஜான்ஸன், ராபர்ட் பர்டன் ஆகியவர்களது நூல்களும், சர்லான்டயின் "டான்க்விக்ஸாட்டும்" சாதாரணகாய்ச்சலுக்கு ஏற்றவைகளாம். பிராங்கைசுக்கு (Bronchi's) மார்க் ட்வெயினின் நூல்களைப்போல் இதமளிப்பவைகள் எதுவும் இல்லையாம். ஆனால் நகைச்சுவை அளவுக்கு அதிகமாக, வாய்விட்டுச் சிரித்தால் தொடர்ந்து இருமல் வந்து தொல்லை கொடுக்கும் என்பதால் எச்சரிக்கையுடன் படிக்க வேண்டும். எலும்புருக்கி நோயில் அவதியுறுகின்றவர்களுக்கு, டிக்கன்ஸ், பீல்டிங், மேரி கொரல்லி போன்றவர்களின் நூல்கள் துணைபுரியலாம்; மெரிடீத், பேட்டர் இவர்களின் நூல்கள் தவிர்க்கப்பட வேண்டியவைகளாம். கோலேரிட்ஜ் நோய்வாய்ப் பட்டிருந்த பொழுது, கிருஸ்துவமத நூலான பைபிள் அவ்வளவு பயன் அளிக்கவில்லையாம். ஆனால் ஸ்காட்டின் நாவல்கள் ஆறுதலளித்திருக்கின்றன.

இதுகாறும், நோய் தீர்க்கும் வலிமை பெற்றிருந்த நூல்களைப் பற்றிக் கண்ணுற்றோம். இந்நூல்

களை, சில வேளைகளில் நோயை அளிக்கவும் முற்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் நூலின் தன்மை மட்டுமல்ல; தவறாக எடுத்துரைத்ததாகவும் இருக்கலாம். காய்ச்சலில் அவதியுறும் நோயாளியிடம் மயிர்க் கூச்செறியும் நிகழ்ச்சிகளைக் கொண்ட எட்கர் அல்லன் போவின் கதைகளைக் கொடுக்கக்கூடாது; வாசிப்பதைக் கண்ணுற்றால் தடுக்கவும் வேண்டும். பலருக்கு நன்மை அளிக்கின்ற டிக்கன்ஸின் நாவல்கள், சிலருக்குத் தீய பலன்களையும் தந்திருக்கலாம். இது இயற்கையே.

நரம்புத் தளர்ச்சியினால் உடல் நலிந்திருந்த ஆர்னல்டு பென்னட்டிற்கு (Laliche) **"லாலிக்கியின் நாடகங்கள்"** ஆறுதலளித்திருக்கின்றன; ஆனால் பென்னட் எழுதிய **"ரயின்கோ சீமான்"** (Lord Raingo) ஒருவரைப் பீடித்திருந்த சாதாரணக் காய்ச்சலை நிமோனியாவாக மாற்றியிருக்கின்றது. ஓ ப் பன் ஹீம் தமது **"மாண்டிகார்வோவின் ஊதாரிகள்"** என்ற நூலில், இருதய நோயைப் பற்றி விளக்கமாகவும், விரிவாகவும் எழுதியுள்ளார். இந்நூல், இருதய நோயுள்ளவர்களுக்கு ஏற்றதாகாது. H. G. வெல்ஸின் **"டாக்டர் மொரேயின் தீவு"** என்ற நூலில் ஒழுக்க நெறிக்கு அப்பாற்பட்ட சமுதாயத்தைத் தோற்றுவித்து மிருகத்திற்கும் மனிதனுக்குமுள்ள ஒற்றுமையை எடுத்துரைக்கின்றார்.

ஆஸ்கார் வைல்டின் **'டோரியன் கிரே'** கருத்தாழமும், சொற்சுவையும் கொண்டிருந்தாலும், மனித நேர்மையை இழிவுபடுத்தும் நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. பெட்லர் எழுதிய **"சிவப்பு அஸ்தி"** என்ற நூலில் அறுவை சிகிச்சையின் போது, டாக்டர் செய்கின்ற குழப்பத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கின்றது. சிறந்த ஆசிரியரான லாயிட்டக்ளஸீம் தமது **"பச்சை விளக்கில்"** மருத்துவ நிலையத்திலுள்ள அனுபவம் நிறைந்த டாக்டருக்கு அறுவை சிகிச்சையின் போது ஏற்பட்ட தடுமாற்றத்தால், நோயாளி இறக்க வேண்டி நேரிட்டது என்பதாக உள்ள பகுதி, நோயாளிகளுக்கு டாக்டரிடம் இருக்க வேண்டிய நம்பிக்கை என்ற ஆணிவேரையே அசைத்து விடலாம.

இறுதியாக நோய் தீர்க்கும் நூல்களையும், நூல்களளிக்கும் நோய்களையும் கூறிய நான், ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்னர் திரையிடப்பட்டு, இன்னும் என் நினைவுத் திரையில் நிழலாடுகின்ற காட்சியைக் கூறலாம் எனக் கருதுகிறேன்.

டாக்டர் ஒருவரின் நர்ஸிங் ஹோமில் அவரது அறைக்கு வெளியில் நோயாளிகள் பலர் அமர்ந்திருக்கின்றனர். வாளால் அறுத்துச் சுடினும் தம்பால் மீளாத காதல் கொண்ட நோயாளர்கள் அவர்கள். நோயாளியின் நோய் விவரங்களைக் கேட்டறிந்து

ஒவ்வொருவருக்கும் 'மருந்து' எழுதிக் கொடுத்தார். அதைக் கண்ட ஒவ்வொருவரும் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டனர். ஏனெனில், மருந்துகளின் பெயர்களை எழுதாமல், ஒவ்வொரு சீட்டிலும் அமைதி, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி, ஆறுதல், இவைகளில் ஏதாவதொன்றை எழுதியிருந்தார். உங்களது நோய்க்கு என்ன என்ன தேவையோ அதையே தான் எழுதியிருக்கிறேன் என்று சமாதானமும் கூறுகிறார்.

திரையிலே கண்டகாட்சியைப் போல, நோயிற்கேற்ற நூல்களை மருந்தாக எழுதிக் கொடுக்கின்ற நாளும், அந்நிலைக்குத் தமிழ் நூல்களும் ஏற்றம் பெறுகின்ற நாளும் எந்நாளோ!

"புத்தக நண்பன்"

---



# புதுமுறை சங்க வாய்பாடு

**V.K. சேஷாத்திரி. B.A., L.T.**

**(Retired Dputy Inspector of schools.)**

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# விஞ்ஞானமும் விவசாயமும்

[எம். கே. கே. நாயர்]

தானிய சாகுபடி முதன் முதலாக நடந்தது சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்று சொல்லப்படுகிறது. ஆப்கானிஸ்தானம், அனடோலியா, அபிஸீனியா ஆகிய நாடுகளின் மலைப் பகுதிகளில்தான் அது நடைபெற்றது; அங்கெல்லாம் ஆதிகால மனிதர்கள் புற்களிடையிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுத்துப் பயிரிடத் தொடங்கினர். நாளடைவில் பிற பிரதேசங்களுக்கும் இப்பழக்கம் பரவி, பல்வேறு தானியங்கள் சாகுபடி செய்யப்படலாயின. வாழை, தென்னை, கரும்பு, மா ஆகியவற்றின் பிறப்பிடம் இந்திய—மலேசியப் பகுதியே என்று கருதப்படுகிறது. இங்கோ அல்லது பிலிப்பீன்ஸிலோதான் அரிசியும் தோன்றியதெனலாம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகத்தைக் குறிக்கும் மொஹெஞ்சோதரோவும் ஹரப்பாவும் பெருமளவில் தானியங்கள் பண்படுத்தப் பட்டதைக் காட்டுகின்றன. அக்கால மக்கள் ஆண்டுதோறும் ஆறுகளில் வந்த வெள்ளங்களால் நீர் பாய்ந்த நிலங்களைப் பண்படுத்தி, பிரதானமாகக் கோதுமையையும் பார்லியையும் பயிரிட்டனர். எருதுகள் இழுத்த "கிரிஷ்" என்னும் இரும்புக் கலப்பையை கி. மு. 1500-ஆம் வருடவாக்கில் வந்த ஆரியர்கள் இந்நாட்டில் புகுத்தினர். விதைக்கு முன் நிலத்தை உழுவதன் பலனை விவசாயிகள் முதன் முதலாக அறிந்தது அப்போதுதான்.

இந்தியாவில் ஏறக்குறைய 3500 ஆண்டுகளுக்கு முன்தான் முதன் முறையாக நெல் சாகுபடி நடந்ததாகக் கூறப்படுகிறது. கிழக்கு இந்தியாவிலேயே அது ஆரம்பமாயிற்று. அதன்பிறகு அங்கிருந்து தென்னிந்தியாவுக்கு அது பரவி இறுதியில் இவ்விரு பிராந்தியங்களிலும் அரிசியே முக்கிய உணவாகியது.

விஞ்ஞானம் பிறந்து மூன்று நூற்றாண்டுகளே ஆகின்றன. அப்புறமும் பொருளாதாரத் துறையில் மனிதனுக்கு அது பயன்பட மேலும் சுமார் 150 வருடங்கள் பிடித்தன. விவசாயத் துறையை அது எட்டவோ மேலும் பல ஆண்டுகள் ஆயின. இந்தியாவைப் பொறுத்தவரையில் 19—ஆம் நூற்றாண்டின் இறுதி வருடங்களிலேயே விஞ்ஞானத்துடன் தொடர்பு ஏற்பட்டது. எனவே, பழங்கால முறைகளுக்கே பழக்கப்பட்டுப் போன பாரத விவசாயி, இயற்கையை நம்பியே இருக்க வேண்டியதாயிற்று. பஞ்சங்களைக் கடவுளின் கோபக் குறியாகவே கருதி வந்தான் அவன். அவ்வாறு அநேகப் பஞ்சங்கள் தொடர்ந்து ஏற்

படவும்தான் நம்மை அப்போது ஆண்டுவந்த பிரிட்டிஷார் விழித்தெழுந்து, 1880-ஆம் ஆண்டில் பஞ்ச விசாரணைக் கமிஷனொன்றை நியமித்தனர். உணவுப் பற்றாக்குறையின் கோர விளைவுகளிலிருந்து நாட்டைக் காப்பதற்கு முதல் படியாக விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென அந்தக் கமிஷன் சிபாரிசு செய்தது. அதன் பயனாக 1889—இல் பூனாவில் மிருக வைத்திய ஆராய்ச்சிக் கழகமொன்று அமைக்கப்பட்டது; பிற்பாடு அக்கழகம் முக்தேசுவருக்கு மாற்றப்பட்டது. 1905இல் தான் பீகாரிலுள்ள பூஸாவில் விவசாய ஆராய்ச்சிக் கழகத்தை இந்திய அரசாங்கத்தினால் நிறுவ இயன்றது. அதுவும் ஒரு அமெரிக்க தர்மிஷ்டரின் நன்கொடையினாலேயே சாத்தியமாகியது. விரைவில் பூனா, கான்பூர், நாகபுரி, லயால்பூர், கோயமுத்தூர், ஸாபூர் ஆகிய இடங்களில் விவசாயக் கல்லூரிகள் துவக்கப்பட்டன. இந்தக் கல்லூரிகளிலிருந்து பட்டதாரிகள் வெளிவரத் தொடங்கிய பிறகுதான் புதிய முறையில் விவசாயப் பிரச்னைகளை அணுக முடிந்தது. பெரும்பாலான மாகாணங்கள் தத்தம் ரெவின்யூ இலாக்காக்களில் விவசாயப் பிரிவுகளைத் துவங்கின. அதன் பின் நாட்டில் பல்வேறு இடங்களில் விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் அமையலாயின. அவற்றின் பயனாக விவசாயத்தின் பல்வேறு விஞ்ஞான அம்சங்கள் ஓரளவு கவனிக்கப்படத் தொடங்கின.

இவ்வாறு விவசாயத் துறையில் விஞ்ஞான நோக்கு புகுத்தப்பட்டதும் சில அடிப்படைத் தத்துவங்களை அனுசரிப்பது குறித்து மக்கள் சிந்திக்க முற்பட்டனர். பாசன வசதித் தேவையே அனைத்துக்கும் முன்னதாக உணரப்பட்டது. கி. பி. இரண்டாவது நூற்றாண்டிலேயே காவிரி நதியின் குறுக்காகக் கட்டப்பட்டு விட்ட கிராண்ட் அணைக்கட்டு நிச்சயமான நீர் வசதியின் முக்கியத்துவத்தை அதற்கு முன்னமே விவசாயிகளுக்கு உணர்த்தியிருந்தது. அதை யடுத்து நாட்டின் பல இடங்களிலும் அணைகள் கட்டப்பட்டிருந்தது உண்மைதான். எனினும் நீர்ப்பாசன வசதிகளைத் திட்டமிட்ட ரீதியில் செய்து தரும் முயற்சி கடந்த நூற்றாண்டுகளுக்குள்தான் மேற்கொள்ளப்பட்டது. அணைகளை அமைப்பதை முற்றிலும் வர்த்தக நோக்குடன் பிரிட்டிஷார் அணுகியதே அந்த மெத்தனத்துக்குக் காரணம். குறிப்பிட்ட அளவு லாபம் தரவேண்டுமென அவர்கள் விதித்ததால் ஒரு சில நீர்ப்பாசனத் திட்டங்களே நிறுவப்பட்டன. அந்நிலையிலிருந்து நாம் இன்று வெகு தூரம் கடந்து வந்துவிட்டோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் 8 கோடி ஏக்கராவுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டு விட்டது. மூன்றாவது திட்ட

இறுதியிலோ இப்பரப்பு 10 கோடி ஏக்கராகும்.

கணிசமான அளவு விஞ்ஞான ஆலோசனை பெறும் அனுகூல நிலையில் இன்றைய இந்திய விவசாயிகள் இருக்கிறார்கள். என்றாலும், சில ஆண்டுகளுக்கு முன் வரையில் அவர்கள் அதை அறவே விலக்கிவந்தனர். பழைய முறைகளிலிருந்து பிறந்ததால் தெய்வக் குற்றம் செய்தவராவோம் என்று அவர்கள் அஞ்சியதே அதற்குக் காரணம். அதே நேரத்தில் பணத்தின் தேவையையும் அவர்கள் அறியாமலில்லை. பக்கத்து நிலக்காரர் அரசாங்க நிபுணரின் ஆலோசனைப்படி சாகுபடி செய்ததால் அதிக விளைச்சல் பெற்றதைக் கண்டதும் தாங்களும் அதே முறையைப் பரீட்சித்துப் பார்க்கப் பலரும் முன்வந்தனர். மிகுந்த தயக்கத்துடனேயே அந்தப்பரிசோதனையை அவர்கள் ஆரம்பித்தன ரென்றாலும் கை நிறையக் கண்டுமுதல் கிடைத்ததும் ஆர்வமுடன் அம்முறையை அனுஷ்டிக்கத் தொடங்கி விட்டனர்—நாட்டின் பல பகுதிகளிலும் லட்சக்கணக்கானவர்கள் விஞ்ஞான விவசாய முறையின் அவசியத்தை இவ்வாறு அனுபவ முறையாக அறிந்துள்ளனர். ஆயினும் இன்னும் எத்தனையோ லட்சம் விவசாயிகள் இந்த ஞானத்தைப் பெறாமலே இருந்து வருகின்றனர்.

நிலத்தைப் பண் செய்யத் துவங்குவதிலிருந்து விளை பொருளை விற்று முடிக்கும் வரையில் எல்லாக் கட்டங்களிலும் விவசாயிக்கு விஞ்ஞானம் பேருதவி புரிகிறது. பழங்காலக் கலப்பைக்குப் பதிலாக இன்று இயந்திரக் கலப்பை என்னும் டிராக்டர் வந்து விட்டது. பெரும் பண்ணைகளிலேயே பெரிய ரக டிராக்டர்களால் ஆதாயம் உண்டு. இந்திய நில உடைமைகளோ சிறியவை. நம்மைப் போலத்தான் ஜப்பானும். ஆகவே, அங்கு கைகளால செலுத்தப்படும் சிறிய ரக டிராக்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த எளிய சாதனம் விசையினால் இயங்குகிறது. ஒரு ஜதை மாடுகளினால் பத்து நாட்களில் செய்யப்படும் வேலையை இது ஒரே நாளில் செய்து முடித்து விடுகிறது. ஆக, பெரிய பண்ணையார் மட்டுமின்றி சிறிய சுவான்தாரும் ஆழ உழுவதற்கு உகந்த சாதனத்தை விஞ்ஞானம் படைத்துத் தந்துவிட்டது.

நன்கு உழுதுவிட்டால் மட்டும் போதாது, விதையைப் பெற்றுப் போற்றி வளர்ப்பதற்குப் பக்குவமான நிலையையும் நிலம் எய்தியாக வேண்டும். வளரும் பயிரானது நிலத்திலிருந்தே தனக்குத் தேவையான சத்தைத் தேடிப் பெறுகிறது. அத்தகைய பயிருணவுகளில் பற்பல பொருள்கள் அடங்கியுள்ளன. அவற்றில் நைட்ரஜன், பாஸ்பாரிக் அமிலம், பொடாஷ் ஆகிய மூன்றுமே மற்றவற்றைவிட முக்கியமானவை. தொழு எரு, பசுந்

தழை ஆகிய இரண்டையும் போடுவதே பழங்காலப் பழக்கம். இவற்றில் நைட்ரஜனும், பாஸ்பாரிக் அமிலமும் ஓரளவுக்கு உள்ளன. வளரும் பயிரினால் இந்தச் சத்துகள் உறிஞ்சப்பட்டு விடுகின்றன. அடுத்த பயிர் போதிய பலன் தர வேண்டுமானால் இந்த ஊட்டகங்கள் நிலத்தில் திரும்பச் சேரவேண்டியது அவசியம். அப்படி மறுபடி சேர்க்கும் பொருட்டு எந்த அளவுக்கு இந்தச் சத்துக்கள் குறைகின்றன என்பதை விவசாயி கண்டறிவதற்கு விஞ்ஞானம் உதவுகிறது. இதுதான் மண் தரப் பரிசோதனை எனப்படுகிறது. இன்று முற்போக்கு விவசாயிகள் அனைவரும் இம்முறையை ஆர்வமுடன் மேற்கொள்கின்றனர்.

மேற்கூறிய நைட்ரஜன், பாஸ்பாரிக் அமிலம், பொடாஷ் ஆகிய மூன்று முக்கிய ஊட்டகங்களும் இப்போது ரசாயன உர உருவில் கிடைக்கின்றன. இவ்வகை உரங்கள் கண்டு பிடிக்கப்பட்டு நூறாண்டுகள் தான் ஆகின்றன. லீபிக் என்னும் ஜெர்மானிய விஞ்ஞானிதான் இந்த உர உணவுச் சித்தாந்தத்தை 1840–ஆம் ஆண்டில் வெளியிட்டார். ஆயினும் 1857—ஆம் வருடத்தில்தான் லாஸ், ஜில்பெர்ட், ப்யூ ஆகிய மூன்று விஞ்ஞானிகள் ரோதாம்ஸ்டெட் என்னுமிடத்தில் நைட்ரஜனின் பயனை நிரூபித்தனர். காற்றில் நிறைந்துள்ள நைட்ரஜனைப் பெற்றுப் பயன்படுத்தும் முறை அப்போதும்கூடக் கண்டறியப்படவில்லை. 1910–இல் தான் இதற்கு அனுபவ சாத்தியமான முறையொன்று ஜெர்மனியில் வகுக்கப்பட்டது. அதன் பிறகு ரசாயன உர உற்பத்தி மிக வேகமாக முன்னேறியது.

இந்தியாவில் முதன்முதலாக 1896—இல் அந்த வகைச் செயற்கை உரங்கள் உபயோகிக்கப்படத் தொடங்கின. முதலில் சிலியன் நைட்ரேட்டை இறக்குமதி செய்து பயன்படுத்தலாயினர். 1920—க்குப் பிறகு பிரிட்டிஷ் கம்பெனியொன்று ரசாயன உரங்களைப் பிரபல்யப்படுத்த ஆரம்பித்தது. அதன் வாயிலாகத் தான் அமோனியம் சல்பேட் இங்கு அறிமுகமாயிற்று. ஆரம்பத்தில் தோட்டத் தொழிலே ரசாயன உரங்களைக் கணிசமான அளவில் கையாண்டது. பயிரினால் சுலபமாகக் கிரகித்துக் கொள்ளக்கூடிய வகையில் பாஸ்பாரிக் அமிலம் அடங்கிய சூபர் பாஸ்பேட் உலகெங்கும் பேராதரவு பெறவே இந்தியாவும் அதைத் தயாரிக்கப் புகுந்தது. நைட்ரஜன் கொண்ட உரத்தை முதன் முதலாக மைசூர் அரசாங்கத் தொழிற்சாலை தான் 1938-இல் சிறிய அளவில் தொடங்கியது. 1947-இல் "பாக்ட்" இயங்க ஆரம்பித்ததும் தான் பெரிய அளவில் அமோனியம் சல்பேட் உற்பத்தி துவங்கியது. அதையடுத்து நாடு நெடுகிலும் உரத் தயாரிப்பு கணிச

மாகக் கூடிவிட்டது. விவசாயிகளும் காலக்கிரமத்தில் ரசாயன உரங்களைப் பெருமளவில் உபயோகிக்கப் பழகிவிட்டனர். நிலத்துக்குத் தேவையான பல்வேறு ஊட்டகங்களையும் தகுந்த தருணத்திலும் போதிய அளவிலும் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கேரளத்திலுள்ள முற்போக்கு விவசாயிகள் உணர்ந்து, பிற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியுள்ளனர்.

நல்ல விதைகளை உபயோகித்தாலேயே நிறைய விளைச்சல் கிடைக்கும் என்பதை வலியுறுத்தத் தேவையில்லை. சரியான விதையிலேயே விளைச்சலின் வெற்றி பெருமளவுக்கு அடங்கியிருக்கிறது. ஆகவே, அமோக அறுவடை தரும் புதுப்புது விதை ரகங்களைக் கண்டுபிடித்துப் புகுத்துவதில் எல்லா விவசாய ஆராய்ச்சிக் கழகங்களும் எப்போதும் ஈடுபட்டுள்ளன. பயிர்களின் பல்வேறு தன்மைகளும், அவற்றின் ஆரோக்கியத்தையும் விளைச்சல் திறனையும் அபிவிருத்தி செய்யும் எல்லா அம்சங்களும் பகுத்தறியப் பட்டுப் புதிய ரகங்கள் படைக்கப்படுகின்றன. ஆகவே, சிறந்த பலன் தரும் விதைகளைப் பற்றிய சகல விவரங்களும் இன்றைய விவசாயிகளுக்கு உடனுக்குடன் கிடைத்துவிடுகின்றன.

விதைப்பது, நடுவது ஆகியவற்றைப் பொறுத்துக்கூட ஆராய்ச்சி பரிசோதனைகளின் பயனாக புது முறைகள் புகுத்தப் பட்டுள்ளன. ஜப்பானிய முறை, சீன முறை என்றெல்லாம் இன்று நாம் கேள்விப் படுகிறோம். இவையனைத்தும் சிறந்த பலன் பெறுவதற்காக ஆராய்ச்சி, அனுபவம் மூலம் வகுக்கப்பட்ட முறைகளேயாகும்.

விவேகம் மிக்க விவசாயி விதைக்கப் புகுமுன் ரசாயனத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதில்லை. விதையிலோ பயிரிலோ நோய் எதுவும் தொற்றிக் கொள்வதைத் தவிர்ப்பதற்கே இந்த ரசாயன உபயோகம். பயிர் வளரத் தொடங்கியதும் களைகளைக் களைய வேண்டியது அவசியம். இதற்கும் ரசாயனத் துறை கை கொடுக்கிறது. வீரியமிக்க களைக் கொல்லிகளை அது சிருஷ்டித்துத் தந்திருக்கிறது. உயிருள்ள அனைத்தையும் போலவே தாவரங்களும் நோய்களுக்கு இலக்காகும் தன்மை உடையவைதாம். அவற்றில் சில தொற்று வியாதிகளாகும். முன்பெல்லாம் அந்நோய்கள் வாராமல் தடுக்கவோ, வந்த பின் குணப்படுத்தவோ வகையேதும் இருக்கவில்லை. இன்றோ அநேகமாக எல்லா ரகப் பயிர் வியாதிகளும் கண்டறியப் பட்டுள்ளதுடன் ஒவ்வொன்றை

**" ஆரம்பக் கல்வி "**
**ஆபீஸ்.**
**94–95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு
அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) *100* ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) *100* ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு
கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) *100* ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச்
சேர்க்கும் விண்ணப்பத்
தாள்கள்
(ஆங்கிலம்) *100* ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட்
பண்டு சரிபார்த்தனுப்பும்
பாரங்கள்
(ஆங்கிலம்) *100* ரூ. 2-00

Form of Certificate of
income
வருமான நற்சாட்சிப்
பாரங்கள்
(ஆங்கிலம்) *100* ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

**முக்கிய அறிவிப்பு**

Book Post-ல் பாரங்களை
அனுப்ப தபால் செலவு :

*25* பாரங்களுக்கு *14* nP.
*50* பாரங்களுக்கு *26* nP.
*75* பாரங்களுக்கு *41* nP.
*100* பாரங்களுக்கு *50* nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.


யும் தவிர்க்கவும் தீர்க்கவும் தகுந்த மருந்துகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பூச்சிகளால் மட்டிலும் நம் நாட்டில் ஆண்டுதோறும் 10 சதவிகிதம் வரையில் தானிய நஷ்டம் ஏற்படுவதாக மதிப்பிடப் படுகிறது. நமது உணவுப் பற்றுக்குறையின் அளவும் இதுதான். எனவே, சரியான சமயத்தில் பூச்சிக் கொல்லிகளை உபயோகித்தால் எவ்வளவு பயனுண்டு என்பதை எவரும் எளிதில் ஊகித்துக் கொள்ளலாம்.

இவ்விதம் நோய்களைத் தவிர்ப்பது, விளைச்சலைப் பெருக்குவது, ஆதாயத்தை அதிகரிப்பது ஆகிய அனைத்தையும் பொறுத்துச் சகல பயிர்களுக்கும் விஞ்ஞானம் சகாயம் செய்கிறது. ஆகவே, உலகம் முழுவதிலும் விவசாயிகள் அனைவரும் வர வர அதிக அளவில் விஞ்ஞான ஆர்வம் கொள்வதில் வியப்பில்லை. அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த விவசாயிகள் இவ்வகையில் உலகுக்கே வழிகாட்டிகளாகத் திகழ்கின்றனர். இந்தியாவிலோ இன்னும் ஏராளப் பகுதிகளில் இனிமேல் தான் இந்த விஞ்ஞான உணர்வு பரவ வேண்டும். எனவே, விவசாயிகளுக்கு அறிவூட்டும் இயக்கம் முடுக்கப்படுவது முக்கியம்.

—**" உரவழி "**

# ஜனநாயகத்துக்கு ஒரு கோவில்

[சு. இராமசாமி, எம். ஏ.]

விண்ணளந்த புகழ்படைத்த அமெரிக்காவின் நான்கு முக்கிய தலைவர்களை விண்ணிலேயே வைத்துக் கோவில் எழுப்பியிருக்கிறது அமெரிக்கா. மண்ணுலக வாழ்க்கையில் உயர்ந்தவர்களை விண்ணில் நிமிர்ந்து நோக்கி அதிசயித்து வணங்கத்தக்கவகையில் மலை முகடுகளில் சிலை செதுக்கிக்கோவில்கண்டிருக்கின்றனர் அமெரிக்கர்கள்.

ஜார்ஜ் வாஷிங்டன்: அமெரிக்காவின்நிர்மாணபுருஷர். போரில் அமைதியில், மக்கள் மனதில் முதலிடம் பிடித்துக் கொண்ட முதல்வர்.

தாமஸ்ஜெபர்சன்: சுதந்திரப் பிரகடனத்தின் தந்தை. வாழ்க்கைஎன்பது உரிமைக்காக; உரிமை என்பது மனமகிழ்ச்சிக்காக என்று கூறி மக்கள் அனைவரும் சமம் என்ற முழக்கம் கொடுத்தவர்.

ஆப்பிரகாம் லிங்கன்: நிற பேதத்தைப் போரிட்டு வென்றவர்; நாட்டையே ஒற்றுமைப் படுத்தியவர்; தற்கால நாகரிக உலகில் நிரந்தர இடம் பெற்றுக் கொண்டவர்.

தியோடர் ரூஸ்வெல்ட்: அமெரிக்காவின் இருபதாம் நூற்றாண்டைக் குறிக்கும் இணையற்ற அரசியல் தலைவர். தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

ஆகிய நான்கு பேர்களது முகங்களும் 6660 அடி உயரமுள்ள தெற்கு டகோடா மலைத் தொடர்களில் காலைக் கதிரவன், மாலைச் சூரியன், பிறை நிலா, முழுநிலவு, கொடிய கோடை, அடைமழை, வெப்பம், குளுமை ஆகிய இயற்கையின் ஓட்டங்களுக்கு இடையே அமைதி, சாந்தம், புனிதம், வசீகரம், பெருந்தன்மை, பேரறிவு ஆகிய உணர்வுகளை அங்கே காணவரும் இலட்சக் கணக்கான மக்கள் முன் சிலை வடிவில் உணர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

காலத்தையே உருவாக்கிய அமெரிக்காவின் அந்த நான்கு தலைவர்களும் காலத்தாலும் இனி அழிக்கமுடியாத அளவுக்கு கற்சிலைகளாகக் கோவில் கொள்ளப் பட்டுள்ளனர்.

உலகின் இரண்டாவது பெரிய ஜனநாயக நாடு என்றும் சுதந்திர நாடுகளின் வழிகாட்டி எனவும் பெயருள்ள அமெரிக்காவின் அந்த நான்கு தலைவர்களும் மக்கள் மனத்தில் இடம்பெற்று விட்டதைப் போலவே மறைய முடியாமல் கல்லிலும் சிலையாகி விட்டிருக்கின்றனர்.

6,200 அடி உயரத்தில் இரண்டு சதுர மைல் பரப்பில் உள்ள இவர்களது நான்கு தலைகளும் உலகிலேயே கல்லில்

செதுக்கப் பட்ட தனி உருவங்களில் பெரியது என்னும் தகுதி உடையது ஆகும்.

ஒவ்வொருவரது தலையின் உயரம் 100 அடி. நெற்றியிலிருந்து கீழ் உதடு வரை உள்ள உயரம் மட்டும் 60 அடி. எகிப்திய ஸ்பிங்ஸ் சிலைகளைவிட இரண்டு மடங்கு பெரிய உருவங்கள்! ஆப்பிரகாம் லிங்கனின் வாய் மட்டும் 22 அடி அகலம் உள்ளது. ஜெபர்சனின் கண் இமைகளுக்குள் ஒரு உயரமான மனிதன் தாராளமாக நடக்கலாம்.

இத்தனை பெரிய உயரத்தில் இவ்வளவு பெரிய சிலையை ஆபத்து மட்டுமே சுற்றியுள்ள ஓர் இடத்தில் இருந்துகொண்டு எப்படி உணர்ச்சிகளைப் பிரதிபலித்து நிற்கும்படி செய்ய முடிந்தது என்பது பார்ப்பவர்களுக்கு விளக்கம் காண முடியாத வியப்பாகவே இன்றும் உள்ளது; இனி என்றும் இருக்கும்.

அமெரிக்க மக்கள் தங்கள் தலைவர்களுக்கு எழுப்பியுள்ள நிரந்தர நினைவுச் சின்னம் என்ற தகுதியுடன் இதை நிர்மாணிக்க அவர்கள் பெற்றிருந்த தொழில் திறமை செயல் துணிவு ஆகிய இரண்டுதான் முன்னதையும் மிஞ்சும் அளவுக்கு உள்ளது.

6,200 அடி உயரத்தில் இருந்து கொண்டு 400,000 டன்கள் எடையுள்ள கற்கள் கெல்லி எறியப்பட்ட பின்னர் தான் நான்கு தலைவர்களது திருமுகங்களும் சிலைவடிவில் முகிழ்த்திருக்கின்றன.

தெற்கு டகோடா பகுதியின் சரித்திராசிரியரான டோன் ராபின்சன் என்பாரது சிந்தனையில் தான் இச்சிலைகளை வடிக்கும் எண்ணமே முதன் முதல் 1923-ம் ஆண்டு உதயமானது.

'ஆகாசக் கோட்டை' எனக் கேட்டவர்களெல்லாம் எள்ளி நகையாடினார்கள். முடியக் கூடியதைச் சிந்தனை செய்யவேண்டும், சிந்தனை செய்வது முடியக் கூடியதாக இருக்க வேண்டும் எனப் போதனை புரிந்தனர் சிலர்.

ஆனாலும் ராபின்சன் சிலை வடிப்பதில் அப்போது பிரசித்தி பெற்றிருந்த கட்சன் பர்க்லம் என்பாரை அணுகினார். 150க்கு மேற்பட்ட சிலைகளை உருவாக்கி சாதனையைத் தோற்றுவித்திருந்த சிற்பி அவர். ராபின்சனின் இந்தத் திட்டம் தனது சாதனைப் பட்டியலில் மேலும் ஒரு புகழாரத்தைக் கொடுக்கும் என்ற ஆசையில் சிற்பியும் சம்மதித்தார்.

இருவரும் சேர்ந்து 'ரஷ்மோர்' என்னும் தெற்கு நோக்கிய மலைத் தொடரை சிலை வடிக்கத் தேர்ந்தெடுத்தனர்.

1927-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சிலை செதுக்கும் ஒலி காற்றில் எழும்பியது.

1930-ல் வாஷிங்டனின் சிலை உருவானது.

அடுத்து 1936-ல் 33 வயதை உணர்த்திக் கொண்டிருக்கும் தாமஸ் ஜெபர்சனின் சிலை தயாரானது.

1937 செப்டம்பரில் ஆப்பிரகாம் லிங்கன் தான் உயிர்பெற்று வந்தார் என்று எண்ணத்தக்க வகையில் அவரது முகம் கல்லில் படிந்தது.

1939-ல் ஜூலையில் கடைசியாக தியோடார் ரூஸ்வெல்டின் திருமுகம் சிலைவடிவானது.

பதினான்கு ஆண்டுகள் செலவழித்து இந்த நான்கு ஜனநாயகவாதிகளுக்காக எழுப்பப்பட்ட நினைவுச சின்னத்துக்குச் செலவான மொத்தத் தொகை 1,000,000 டாலர்கள். இப்போதுள்ள ரூபாய் மதிப்பில் 6,500,000 ஆகும்!

உண்மையாக வேலைகள் நடைபெற்றது ஆறரை ஆண்டுக் காலம் தான். பருவ நிலை இயற்கைப் பாதகங்கள் காரணமாகத் தள்ளி வைக்கப்பட்ட காலத்தையும் சேர்த்து மொத்தம் செலவான ஆண்டுகள் 14. நிதி வரவில் ஏற்பட்ட தடைகள், தடங்கல் காரணமாகவும் சிலைவடிப்பு நிறுத்தி வைக்கப்பட்டது சில காலம்.

கனதனவான்கள், பொது அமைப்புகள் நிதி அளித்ததுடன் பள்ளிச் சிறுவர்களும் இந்தக் காரியத்துக்கு நிதி வழங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது.

நான்கு தலைவர்களுக்கும் சிலை வடிவில் உயிர்கொடுத்து உயர்ந்த புகழைப்பெற்ற சிற்பி அலுவல்கள் முடியுந் தறுவாயில் தனது 74-வது வயதில் இறந்து விட்டார். புலிக்குப் பிறந்தது பூனையாகி விடாது என்பதற்கொப்ப அவரது மகன் தந்தையின் திறமையைத் தொடர்ந்து காட்டி தனக்கும் அவருக்கும் அழியாப் புகழைப் பெற்றுத் தந்தார்.

இவருக்கும் கடைசி வரை இருந்து உதவியவர்கள் 36 தொழில் வல்லுனர்கள். கற்களை உடைத்தெடுப்பது, கலைப்பது; பக்கங்களில் சாரங்கள் அமைப்பது போன்ற காரியங்களைக் கவனித்தது, இந்த உதவியாளர்கள் தான்.

கண்களுக்கு முன்னே காகிதத்தை வைத்துக்கொண்டு சித்திரம் வரைவதில் உள்ள சிரமத்தை உணர்ந்தவர்கள் 6000 அடிக்கு மேல் உயரத்தில் நூற்றுக் கணக்கான அடி பரப்புள்ள சிலையை அந்தரத்தில் இருந்துகொண்டு வடிப்பதில் உள்ள திறமையைக் கற்பனையில் கூட சிந்தித்துப் பார்க்க முடியுமா என்பது சந்தேகமே!

கீழே மலையடிவாரத்தில் ஒரு குடிசை போட்டுக் கொண்டு அங்கே தான் சிலைகளுக்கான காகிதப் படங்களைப் போட்டுப் பார்த்துக் கொள்வாராம் சிற்பி. சில சமயம் கீழே இருந்து கொண்டு அவர் உயரே இருப்பவர்களுக்குத் தொலைபேசி மூலம் குறிப்புகள் கொடுப்பாராம்! ஏனெனில் மேலே வேலை செய்பவர்களுக்குச் சிலைகளின் ஒரு முகத்தைக்கூட முழுவதையும் காண்பதென்பது முடியாது!

'யு. எஸ். நேஷனல் பார்க் சர்வீஸ்' என்ற அமைப்பின் கீழுள்ளது இச் சிலைகளைக் கண் காணிக்கும் அலுவலகங்கள். 1950ஆம் ஆண்டு முதல்-இரவிலும் பிரயாணிகள் கண்டு களிக்கும் வகையில் விளக்கொளியில் ஆழ்த்தி இருக்கின்றது இந்த நிர்வாகம்! உச்சியில் இருக்கும் சிலைகளை உருவாக்க கீழே மாதிரியாக இருந்த வரை படங்கள் மாதிரிச் சிலைகள் அனைத்தும் இன்றும் அடிவாரத்தில் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன.

வீணாகி விடுமே என்று உணராத காரணத்தினால்தானோ என்னவோ இயற்கை இச்சிலைகளை எப்போதும் பனியாலும், மழையாலும், வெப்பத்தினாலும், வெயிலினாலும் நனைத்துக் கொண்டே இருப்பதால் அவ்வப்போது அவைகளில் கீறல்கள் தோன்றி வருகின்றனவாம். அதைத் தவிர்ப்பதற்காக அடிக்கடி பழுது பார்க்கும் வேலைகளும் தடுப்பு முறைகளும் நடைபெற்று வருகின்றன. சிமெண்ட் கலவை, சில எண்ணெய் வகை உலோகம் போன்றவை சிலைகளுக்குள் செலுத்தப்படுகின்றன.

இச் சிலைகளின் மீது ஆங்காங்கே தவழ்ந்து சென்று பழுது பார்ப்பவர்களின் திறமையும் ஒரு அதிசயிக்கத்தக்க சாதனையே! தூரத்தில் நின்று சிலைகளைப் பார்த்து வியப்பவர்களுக்குச் சில சமயங்களில் பழுதுபார்ப்பவர்கள் அதன் மீது உயிரை மறந்து அங்குமிங்கும் தவழ்ந்து செல்வது புலப்படுவதே இல்லையாம். அப்படியே தெரிந்தாலும் ஏதோ எறும்பு ஊர்வது போலத் தோன்றுமாம்!

இப்படிப்பட்ட சிலைகள் எழுப்ப வேண்டும் என்ற நோக்கம் அதை உருவாக்கிய கரங்களின் திறமை ஆகிய இரண்டினையும் விவரிக்க மொழிகளில் வார்த்தைகளே இல்லையே என்று தவிப்பார்களாம், நேரில் காண்பவர்கள்.

இச் சிலைகள் அமெரிக்க மக்கள் தங்கள் தலைவர்களுக்குக் காட்டும் 'மதிப்பு' 'நன்றி' ஆகியவற்றைக் குறிக்கிறது என்பது அதைவிட வேறு சொற்கள் இல்லாமையினால்தான்.

இச்சிலைகளை சிற்பி 'வடித்தார்' என்று கூறுவது இத் தொழிலைக் குறிக்கும் சொல்லே தவிர அவரது 'திறமை'யை விவரித்துக் கூற வேறு வார்த்தை இருப்பதாகத் தெரியவில்லை.

"முத்தாரம்"

# தமிழகக் கோயில்களின் தனிச்சிறப்பு

சென்னை, ஜூலை, 6-தென்னகத்தில் புகழ் பெற்ற சில திருக்கோயில்களைப் பேணிக் காப்பதற்காகும் செலவில் கணிசமான தொகையை அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது என்று தெரிகிறது.

வரலாற்றுச் சிறப்பும் கலையழகும் செறிந்த திருக்கோயில்களைப்பாதுகாப்பதற்குக்கோவில்களின் அறங்காவலர்களுக்காகும் பெருஞ் செலவைக் குறித்துத் தமிழ் நாட்டின் ஆலய நிர்வாகத்திற்குப் பொறுப்பா யிருக்கும். இந்து சமய அற நிலையம் கவலை தெரிவித்துள்ளது. அழிந்து விடும் நிலையில் உள்ள சில கோபுரங்களைப் பழுது பார்ப்பதற்குத் தமிழ் நாட்டு அரசாங்கம் நிதி உதவி செய்ய வேண்டும் என்று இந்து சமய அறநிலையம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மத்திய அரசாங்கத்துக்குச் சுற்று உலாவை ஊக்குவிப்பதில் ஆர்வம் மிகுதியாயிருப்பதால், மாநில அரசு அத்திருப்பணியை மேற்கொள்ளுவதற்கு உதவி செய்ய ஒப்புக் கொண்டுள்ளது.

மனிதனின் இடையறா ஊக்கம், அறிவுக் கூர்மை, திறமை முதலியவற்றின் சின்னமாயிருக்கும் கோயில் கோபுரங்கள் காலத்தின் நாசத்தை யெல்லாம் தாங்கி நிமிர்ந்து நிற்கின்றன. அக் கோபுரங்களின் கம்பீரம், அழகு, நேர்த்திமுதலியன இந்தியனையும், அயல் நாட்டாரையும் கவர்ந்து வருகின்றன. ஏனெனில் அவற்றில் மிக அற்புதமான சிலைகளும், சுதை வேலைப்பாடுகளும் உள்ளன.

விண்ணை யிடிக்கும் அம் மாபெரும் கோபுரங்கள், அக்காலத்துச் சிற்பிகளின் மா மே தை க் கு எடுத்துக் காட்டாய் இலங்குகின்றன; அக் கலைஞர்கள் காட்டிய நுணுக்கத்தை உள்ளூர உணரச் செய்கின்றன.

இவ்வாழ்க்கை, மற்றும், கடவுளர்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன முதலியவற்றின் உருவங்கள் சிலைகளாக அக்கோபுரங்களில் கலைச் சிறப்புடன் வடிக்கப்பட்டுள்ளன. இது அக் கோபுரங்களுக்கு உள்ள அருஞ் சிறப்பாகும்.

"இக் கோபுரங்கள் வடிவிலும், நோக்கிலும், எகிப்திய கோயில்களின் கோ பு ர வாயிலைப் போன்றுள்ளன." என்று மாபெரும் கலைத் திறனாய்வாளரான ஃபெர்குசன் தென்னிந்தியக் கோபுரங்களைப் பற்றிக் கூறியிருக்கிறார். இக்கோபுரங்களை

எழுப்பியது இறைவனா அல்லது மனிதன்தானா என்ற வியப்பை அவை உண்டாக்குகின்றன.

வானளாவ எழும்பி நின்று, பல மைல் தொலைவிற்குத் தெரியும் சில சுமார் 200 அடி உயரமிருக்கின்றன. அவை வளம் செறிந்த திராவிடப்பண்பாட்டையும், நாகரிகத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

பண்டைப் பாண்டியனின் தலை நகரான சங்கம் உறைந்த மதுரையில் நிறைந்திருக்கும் பல்வேறு தொல் சிறப்பு வாய்ந்த கட்டிடங்களில் திராவிட கட்டுமானக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது புகழ் பெற்ற மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலாகும். ஊரின் நடுமையத்திலுள்ள அக் கோயிலைச் சுற்றியே நகரம் உள்ளது. அக்கோயிலுக்கு 9 கோபுரங்கள் உள்ளன.

தஞ்சாவூரிலும் பல கோவில்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது ஸ்ரீ பிரகதீசுவரர் கோயிலாகும். அது சோழ மன்னர்களின் பெருமையை எடுத்துக் காட்டும் கம்பீரமான சின்னமாய்த் திகழ்கிறது. அக் கோபுரத்தின் உச்சியில் மிகப் பெரிய கல்முடியைப் போல் அமைந்துள்ளது. விண்ணை முட்டும் அக்கோபுரத்தின் நிழல் கீழே விழாதவாறு அதைக் கட்டியிருக்கிறார்கள்.

தென்னகத்திலுள்ள புனிதத் தலங்களில் ஒன்றான ஸ்ரீரங்கத்தில் பல கோபுரங்கள் உள்ளன. அந் நகருக்குள் நுழையும் தலைவாயில் இராயகோபுரம் எனப்படும். அதை விஜயநகரப் பேரரசைச் சேர்ந்த அச்சுதராயன் கட்டினான்.

சிவத் தலங்களுள் சிறந்த சிதம்பரத்தில் ஆடும் இறைவனை நடராசப் பெருமானுக்குக் கோயில் உள்ளது. அக் கோயிலினின்று இரண்டு கோபுரங்களில் நாட்டிய சாஸ்திரம் அல்லது நடனக் கலையை விளக்கும் 108 பாங்குகள் சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளன.

ஆயிரங் கோயில்கள் மலிந்த பல்லவர் தலைநகரமான காஞ்சீபுரம், இந்தியாவின் ஏழு புனிதத் தலங்களில் ஒன்றாகும். காஞ்சீபுரத்திலேயேமிகப்பெரியவரதராஜஸ்வாமி கோவில் ஒரு குன்றின் மேல் கட்டப்பட்டுள்ளது. பிரமதேவன் அங்குப் பெரிய யாகம் செய்தான் என்று கூறப்படுகிறது. காஞ்சியின் ஏகாம்பரர் கோயிலிலுள்ள தென் கோபுரம் தென்னகத்திலேயே பெரிய கோபுரங்களில் ஒன்றாகும்.

சென்னை நகரில் காணப்படும் பல கோயில்களில் பெரிதும் கவரக்கூடியதாகவும், அழகு செறிந்ததாகவும் இருப்பது திருமயிலையிலுள்ள கபாலீஸ்வரர் கோயிலாகும். இங்கு மலைமகளான பார்வதி மயிலாக மாறிக் கபாலீஸ்வரரை-சிவ பெருமானை-நோக்கித் தவமிருந்ததாக நம்பப்படுகிறது. அக் கதை கோயிலின் உள்ளே சிலை வடிவில் உயிர்க்களையுடன் சித்திரிக்கப்பட்டுள்ளது.

— "தினமணி"

# மவுண்ட்ரோடு தபாலாபீசில்

## கார்டு விற்பனை இயந்திரம்

### — அமைச்சர் இயக்கி வைத்தார்

சென்னை, செப். 26— பத்து பைசா "இன்லாண்டு" கவர்களையும், 6 பைசா கார்டுகளையும், 65 பைசா விமான கவர்களையும் விற்கும் மூன்று இயந்திரங்கள் மவுண்டு ரோடு தலைமை தபால் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. அவற்றை இன்று தகவல் போக்குவரத்துத் துணை மந்திரி ஜகன்னாத ராவ் இயக்கி வைத்தார்.

இயந்திரங்களிலிருந்து இவற்றை எவ்வாறு பெறுவது என்பதை மக்களுக்கு விளக்கும் வாசகம் ஆங்கிலத்திலும், தமிழிலும், இந்தியிலும் எழுதப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

இன்லாண்டு கவர் விற்கும் இயந்திரம் சாதாரண எடை பார்க்கும் இயந்திரம் போன்றது. அதில் 10 பைசா நாணயத்தைப் போட்டு, அதிலிருக்கும் கெம்பு கோலை இழுத்தால் இயந்திரத்தின் அடிப்பாகத்தில் கவர் வரும். கார்டு விற்கும் இயந்திரத்தில் 10 பைசா நாணயத்தைப் போட்டால் தபால் கார்டும், இரண்டு இரண்டு பைசா நாணயங்களும் கிடைக்கும். விமானக்கவர் இயந்திரத்தில் 50பைசா நாணயத்தையும் 25 பைசா நாணயத்தையும் போட்டால், 10 பைசாவும் விமான கவரும் வரும்.

தபால் சர்வீசைப் பெருமளவுக்கு இயந்திரமயமாக்க இந்த இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன. இந்தியத் தபாலாபீசை நவீனமாக்கும் திட்டத்தின் பகுதி இது.

காரியாலயத்தில் உபயோகிக்க கணக்கிடும் இயந்திரங்களும், மூட்டை கட்டும் இயந்திரங்களும் வைக்கப்பட்டுள்ளன. தொகைகளின் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியவற்றை கணக்கிடும் இதயந்திரங்கள் செய்கின்றன. இவை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. ஜப்பானிலிருந்து வந்துள்ள மற்றொரு வகை இயந்திரம் ஓரிடத்திற்குப் போகும் கடிதங்களை மூட்டை கட்டுகின்றன.

கார்டு, கவர் விற்கும் இயந்திரங்களை இந்தியாவிலேயே தயாரிக்கும் விஷயம் சர்க்கார் பரிசீலனையில் உள்ளது.

# கல்வித் துறைச் செய்திகள்

## ஆற்றின் போக்கையே மாற்றிவிட்டார்கள் !

### சோவியத் எஞ்சினீயர்கள் சாதனை !

சோவியத் கசச்ஸ்தானின் தலைநகரான அல்மா அடா என்ற ஊருக்கருகே ஓடிக் கொண்டிருந்த அல்மா அடிங்கா என்ற ஆற்றின் போக்கையே மாற்றி விட்டார்கள்—ஆற்றல் மறவர்களான சோவியத் எஞ்சினீயர்கள் !

அந்த ஆற்றின் வழியை அடைத்திருந்த 330 அடி உயரமும் 1,560 அடி நீளமும் உள்ள இயற்கையாய் அமைந்த மலையணையை உடைத்துத் தகர்த்தெறிந்து ஆற்றின் போக்கையே மாற்றிவிட்டார்கள் ! இதற்கு 5,200 டன் எடையுள்ள வெடி மருந்துகள் பயன்பட்டன !

தினேஷான் மலையிலிருந்து வெள்ளப் பெருக்கெடுத்து ஓடி வரும் இந்த அல்மா அடா, அல்மா அடிங்கா நகரையும் சுற்றுப்புறத்தையும் வெள்ளத்தில் ஆழ்த்தி, ஏழு இலட்சம் மக்களுக்குத் தீராத் தொல்லை தந்து வந்ததாகும்.

இந்தச் சாதனையால் மக்களின் அந்தத் தொல்லை தொலைந்தது!

உலகத்திலேயே இப்படி ஒரு பேரணை, வெடிமூலம் தகர்க்கப்பட்டது இதுவே முதல் முறை என்றும், இதைச் சில விநாடிகளில் சாதிக்க முடிந்தது என்றும் சோவியத் செய்தி நிறுவனம் 'டாஸ்' பெருமையுடன் அறிவித்திருக்கிறது.

## சென்னை, கோவையில் அடுத்த ஆண்டு முதல் பகுதி நேர பி. இ. வகுப்புக்கள்

### இன்ஜினீயரிங் டிப்ளமா பெற்றவர்களுக்கு வசதி

திருச்சி, அக். 17— இன்ஜினீயரிங் டிப்ளமா பட்டம் பெற்றவர்களுக்கு அடுத்த வருடத்திலிருந்து சென்னையிலும் கோவையிலும் பகுதி நேர பி. இ. வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

இந்த வகுப்புக்களை இந்த வருடம் செப்டம்பர் முதல் ஆரம்பிப்பதென்று சென்னை சர்க்கார் முதலில் உத்தேசித்திருந்தனர். ஆனால் சென்னை சர்வகலாசாலை இன்னும் அங்கீகாரம் அளிக்கவில்லை.

தொழில் இயல் கல்வி டைரக்டர் திரு. முத்தையன் இன்று அளித்த பேட்டியில் இந்த விவரத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறினார். "சென்னையிலும் கோவையிலும் பகுதி நேர பி. இ. வகுப்புகளை ஆரம்பித்த பிறகு, அதே வகுப்புக்கள் மதுரையிலும் ஆரம்பிக்கப்படும்."

இன்ஜினீயரிங் கல்லூரிகளுக்கான புதிய பாடத் திட்டங்கள் அடுத்த வருடத்திலிருந்து அம

னுக்குக் கொண்டு வரப்படும் என்று டைரக்டர் கூறினார்.

நடப்பு வருடத்திலிருந்து தொழில் நுட்பக் கல்வி இலாகா பலப்படுத்தப்படும் என்றும் இன்ஜினீயரிங் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், ஜூனியர் டெக்னிகல் பள்ளிகள் முதலியவற்றை தணிக்கை செய்வதற்கு சென்னை, திருச்சி, மதுரை, கோவை முதலிய இடங்களில் பிராந்திய இன்ஸ்பெக்டர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் திரு. முத்தையன் கூறினார். இஞ்ஜினீயரிங் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் முதலியவற்றிற்குப் பாடப்புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு 4-வது திட்ட காலத்தில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவும் இதை ஏற்படுத்த ரூ. 10 லட்சம் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டு இருப்பதாகவும் திரு. முத்தையன் கூறினார்.

* * *

## ஆசிரியர்களுக்குப் புதிய வேலையா ?

### குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்புப் பிரசாரத்தில் ஈடுபட வேண்டுமா !

தஞ்சாவூர், அக். 15— கலெக்டரின் சமுதாய நல உதவியாளர் உத்தரவுப்படி திருவையாறு பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகள் எல்லாவற்றிற்கும் விடுமுறை விடப்பட்டு எல்லா ஆசிரியர்களும் திருவையாறு உயர்நிலைப் பள்ளியில் கூட்டப்பட்டார்கள். சுமார் 200 ஆசிரியர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிகிறது. மேற்படி கூட்டத்தில் கலெக்டரின் உதவியாளர் திரு. சுப்ரமண்யம் பேசுகையில், சமுதாய நலப்பணியில் ஆசிரியர்கள் நல்ல முறையில் பங்கு கொண்டு சர்க்கார் திட்டங்கள் செயல்பட உதவவேண்டும் என்றும், தாங்களாகத் திட்டங்களில் முதலீடு செய்யும் நிலையில் ஆசிரியர்கள் இல்லை என்பதை தான் உணர்வதாகவும், ஆனால் திட்டங்களில் பங்கு கொள்ள மற்றவர்களைத் தூண்டுவது ஆசிரியர்களுக்குப் பெரிய காரியமில்லை என்றும், ஆசிரியர்கள் மனது வைத்தால் நடக்கக் கூடாதது ஒன்றும் இல்லை என்றும், ஆகையால், இங்குள்ள ஒவ்வொரு ஆசிரியர்களும் குடும்ப கட்டுப் பாட்டுத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சைக்கு இரண்டு நபர்களைப் பிரசாரம் செய்து அழைத்துவர வேண்டும் என்றும் அத்துடன் சிறு சேமிப்புநிதியின் ஒரு பகுதியாக போஸ்டாபீஸில் மாதம் ரூ. 5 வீதம் பணம் கட்டும்படி ஒவ்வொரு ஆசிரியரும் 10 நபர்களிடம் பிரசாரம் செய்து வசூல் செய்யவேண்டும் என்றும் இன்று யூனியன் பள்ளிகளுக்கு விடுமுறை விடச் செய்து ஆசிரியர்கள் எல்லோரையும் ஒரு முகமாகக் கூட்டி இந்த வேண்டுகோள் விடுவதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை ஆசிரியர்கள் உணர்ந்து நடந்துகொள்வார்கள் என்று தான் நம்புவதாகவும் சொன்னதாகத் தெரிய வருகிறது.

# தாயத்து

"வளவன்"

அலங்காபுரி ஜமீன்தார்-அந்த அளவில்தான் வெளியுலகுக்கு அவர் பெயர் தெரியும். ஜமீன்தாரானதால் அவருடைய பெயரைச் சொல்லக்கூடிய வாய்ப்பும், வசதியும் மிகப் பலருக்குக் கிடைக்கவில்லை. சொல்லக்கூடியவர்களால்கூட அவருடைய பெயரை முழுவதும் சொல்லமுடியாது. அந்த அளவு, நீளமானது. முழுப்பெயர் வீரபாண்டிய கருணாகரத் தொண்டைமான் அழகுவேலத் துரைசிங்கத்தேவர் என்பதாகும். பெயருக்குத் தகுந்தாற்போல, ஆள் உயரமாகவும், பருமனாகவும் இருந்தார். அவருடைய உருட்டிய விழிகளும், முறுக்கிவிட்ட மீசையும் பார்ப்பவர்களுக்குப் பயத்தை அளிக்கும். அதிலும் அன்றைய தினம் மிகக் கோபத்துடன் இருந்தாரென்பதை அவருடைய சிவந்த கண்கள் காட்டின. காரணம் அவருக்கு வேண்டிய அளவு பணம் ஜமீனிலிருந்து கிடைக்கவில்லை. வரவை மீறிய செலவு எவ்வளவு நாளைக்குத் தான் நடக்கும்! அதிலும் ஜமீன்தாரின் ஆடம்பரச் செலவுகளுக்கு எந்த ஜமீன் வருமானம்தான் ஈடு தரும்? கூடிக்கொண்டு போகும் தன் வருமானத்தைப் பற்றி ஜமீன்தார் கவலைப்படவில்லை. ஜமீன் வருமானம் ஏன் குறைந்துவிட்டது என்று ஏஜண்டைக் கூப்பிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தார். எதற்கும் பதில் சொல்லாமல் ஏஜண்ட் தலையைத் தொங்கவிட்டு, நின்றுகொண்டிருந்தார். பதில் சொல்ல ஆரம்பித்தால்—அது சரியோ தப்போ, ஜமீன்தாரின் கோபம் அதிகமாகும். தொங்கவிட்டிருக்கும் தலை, மண்ணுக்குள் போகுமளவுக்கு தாழ்ந்தாலும் தாழ்ந்துவிடும். ராஜயோகமும் ராஜ தண்டனையும் அதிகமல்லவா? எனவே ஜமீன்தாரின் குற்றச்சாட்டுகளைத் தாங்கிக்கொண்டு, ஏஜண்டு, கணக்குப்பிள்ளை எல்லோரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஜமீன்தார் கோபித்து என்ன பயன்? பணம் எங்கிருந்து கிடைக்கப்போகிறது. கணக்கைப் புரட்டிப் பார்த்தால் சொத்து அதிகமா என்பதைக் கணக்கிடலாம். ஆனால் பணம்பெற வழியில்லை.

ஜமீன்தார் யோசித்தார், திடீரென்று ஏதோ கண்டுபிடித்தவர் போல "போய், அந்த மன்னார் சாமியை அழைத்துவா!" என்று கட்டளை தந்தார். கணக்கப்பிள்ளை வெளியே ஓடினார், ஏஜண்டு பெருமூச்சு விட்டார்,

ஜமீன்தாரின் கவனம் வேறு பக்கம் திரும்பியதை நினைத்து.

மன்னார்சாமி ஜமீந்தார் ஆதரவில் இருக்கும் ஒரு மந்திரவாதி. ரசவித்தையில் வல்லவனென்று பெயரெடுத்தவன். அவனை வைத்து செம்பைமாற்றிப் பொன்னாக்கி விடலாமென்று ஜமீன்தார் அவனை அழைத்துவந்து தன் மாளிகையில் இடம் தந்து, எல்லா வசதிகளையும் செய்துதந்தார். மன்னார்சாமி வந்து இரண்டாண்டுகளுக்கு மேலாகிறது, ஆனாலும் ரசவித்தையில் வெற்றி காட்டியதாகத் தெரியவில்லை. ஆசாமி நன்றாகச் சாப்பிட்டு விட்டு, பகல் பொழுதெல்லாம் தூங்குவதில் காலங்கழித்தான். ஜமீன்தார் இருக்கிறாரென்றால், நடுச்சாமத்துப் பூசை, ஆயிரத் தெட்டு மந்திரம், புடம்போட களிமண் என்று ஏதாவது செய்து கொண்டிருப்பான். ஜமீன்தார் அங்கு இல்லையென்றால், மன்னார் சாமியின் பூசை மடத்தில், தோட்டத்தில் வேலை செய்யும் மருதாயியின் குரல் கேட்கும். சில சமயங்களில் ஜமீன்தார் ரசவாதம் எப்படியிருக்கிறது என்று கேட்பார். நாள் நட்சத்திரம், திதி, பலன் குறித்து, அடுத்த அமாவாசை என்று மன்னார் ஒத்திப்போட்டுவிடுவான். மற்றும் சில சமயம் கடினமான தேவைகளை அவன் சமர்ப்பிப்பான்.

“ஜமீன்தார்வாள்! ரசவாதம் சாமான்யமானதல்ல.”

“அது தெரிந்துதானே உன்னைக் கொண்டு வந்துவைத்தேன்.”

“அதில் பாருங்கள், ரசவாதம் சொல்லி மாந்திரீக விதிகளைப் படித்தால் சாமான்யமானவர்களுக்கு ஒன்றும் புரியாது. நீண்ட ஆராய்ச்சிகளின் பின்புதான் ரசவாதம் சித்தியாகும் முறை தெரியும்.”

“சரிதான் அளக்கவேண்டாம். என்ன வேண்டும் உனக்கு?”

“அரைப்படி பசும்பால், கால் அரளி மொட்டு.”

“இது கிடைக்காதா?”

“இருங்கள், பொன்னாவிரை வேர், கஸ்தூரி மான் கொம்பு.”

“சாதாரண மான் கொம்பு போதாதா!”

“எப்படிப் போதும்? கஸ்தூரி மான் கொம்பில் உரைத்து என்று ரசவாதம், சொல்லுகிறது. நாம் சாதாரண மான் கொம்பைக் கலந்தால், அப்படியே செம்பாக நின்றுவிடும்.”

“அத்துடன் சிங்கத்தின் கடைவாய்ப் பல் ஒன்றும் வேண்டும்.”

“சிங்கத்தின் பல்லா? எதற்காக?”

“ரசவாதத்துக்குத்தான்! உலோகங்களில் சிறந்தது பொன் எப்படியோ, அப்படித்தான் மிருகங்களில் உயர்ந்தது சிங்கம். அதன் பல்லைக்கொண்டுதான் செம்பை மாற்றிப் பொன்னாக்க முடியும், எல்லாம் பெரிய வித்தை.”

ஜமீன்தாருக்கு மன்னார்சாமி சொல்வதில் நம்பிக்கை இருப்பதில்லை. இருந்தாலும் நப்பாசை விடுவதில்லை. ஒரு வேளை ரசவாதம் வெற்றி யடைந்தால்...? ஆதலால், மன்னார்சாமி கேட்பவைகளைக் கொண்டுவந்துசேர்த்து விடுவார். சாக்கு போக்குச் சொல்லி, மன்னார்சாமி தன் ரசவாதத்தையும், ரசமிக்க மாளிகை வாழ்வையும் நீடித்து வந்தான். இன்றைக்கு பண நெருக்கடி என்றதும், ரசவாதியின் நினைவு ஜமீன்தாருக்கு வந்தது.

கணக்குப்பிள்ளை உள் நுழைந்தார். அவருக்குப் பின் ஒருவன் வந்தான். ஐம்பது வயதிருக்கும், பரந்த தலைமயிர், கறுப்புத் தாடி, காவியுடை, கையில் ஒரு இரும்புக் கம்பி—பேய் பிசாசுகளை விரட்ட அந்த மந்திரக் கோல் எப்பொழுதும் கையில் இருக்கவேண்டுமாம்—நெற்றியில் பெரிய சந்தனப் பொட்டு, மத்தியில் குங்குமத் திட்டு. அவன் கண்களில் அபின் தின்பவனுக்கு இருக்கும் மிதந்த பார்வை இருந்தது. அந்த ஆசாமி தான் ஜமீன்தாரின் ரசவாதி மன்னார்சாமி!

''மன்னார்! எப்படிருக்கிறது?'' ஜமீன்தார் கேட்டார்.

வரும் வழியில் ஜமீன்தாரரிருக்கும் கோபத்தைப்பற்றி கணக்குப் பிள்ளை சொன்னார். ஆனால் நேரில் பார்க்கும்பொழுது தான் அதன் உண்மைச் சொரூபம் தெரிந்தது. இதுவரைச் சமாளித்ததைப்போலச் சாக்கு போக்குகள் சொல்லி, இனியும் காலங்கடத்த முடியாது என்பதை ரசவாதி கண்டுகொண்டான்.

''நானே வந்து உங்களிடம் சொல்லலாமென்றிருந்தேன். அதற்குள் கணக்குப்பிள்ளை வந்து கூப்பிட்டார். மன்னார்சாமி ஜமீன்தாரின் பக்கம் நெருங்கிப் போய் ரகசியம் சொல்லும் தாழ்ந்த குரலில், ''காரியம் முடிந்த மாதிரிதான்!'' என்று சொன்னான்.

''முடிந்த மாதிரிதான்! ஆக இன்னும் முடியவில்லை, அப்படித் தானே?'' ஜமீன்தாரின் கோபம் பொங்கி வழிந்தது.

''முடிந்து விட்டது, இன்னும்...'' என்று மன்னார்சாமி குழறினன். அவன் கைகள் நடுங்கின.

''இன்னும் ஒரு மாதம் வேண்டுமா? அல்லது ஒரு வருஷம் வேண்டுமா? உன்னை வைத்துஇரண்டு வருஷம் சோறு போட்ட பணத்தைப் பொன்னுக்கியிருந்தாலே போதும் போலிருக்கிறது. இரு! என்னை ஏமாற்றினதற்கு உன்னை நாளைக் காலைநட்டாற்றில் கொண்டுபோய் தலை கீழாக நட்டுவிடச் சொல்லுகிறேன்.''

ரசவாதிக்குப் பகீரென்றது. ஜமீன்தாரர் சொல்வதுபோலவே சில தடவைகள் செய்து விடுவார். அவருடைய கோபத்துக்கு ஆளானவர்கள் நட்டாற்றிலோ, நடுக்காட்டிலோ பிணமாக மாறியிருக்கிறார்கள்.

"இன்றைக்கு இரவே வந்து பாருங்கள். கடைசிப் புடத்தில் வேகவைக்கப் போகிறேன். அது பொன்னாகவில்லையானால் என் ரசவாதத்தையே நான் விட்டுவிடுகிறேன்.'' என்று மன்னார்சாமி தெளிவாகப் பேசினான்.

"அப்படியாகாவிட்டால், ரசவாதத்தையல்ல உன் உயிரையே விட்டுவிட வேண்டியிருக்கும்." ஜமீன்தார் எச்சரித்தார். மன்னார்சாமி எச்சிலை விழுங்கிக் கொண்டு வெளியேறினான்.

இரவு பன்னிரண்டு மணிக்கு ஜமீன்தார் ரசவாதி தங்கியிருக்கும் அறைக்கு வந்தார். அந்த அறை நாடோடி குகை மாதிரி காட்சியளித்தது. ஒரு கூண்டில் ஆந்தை கூவிக்கொண்டிருந்தது. புலித்தோல், மான்தோல், விரிக்கப்பட்டிருந்தன. ஏராளமான கல்வங்களில் மருந்துகள் அரைக்கப்பட்டு, பல வர்ணங்களில் பொடிகள் சிதறிக்கிடந்தன. ஒரு மூலையில் வேர், கொடி, இலைகள் குவிந்துகிடந்தன. நான்கு சட்டிகளில் கனல் எரிந்துகொண்டிருந்தது. மன்னார்சாமி ஒன்றின்மீது உட்கார்ந்து ஊதிக்கொண்டிருந்தான். மற்ற மூன்று தீச்சட்டிகளில், மருந்துகள், திராவகங்கள் கொதித்துக் கொண்டிருந்தன. ஜமீன்தார் உள் வந்ததை மன்னார்சாமி பார்த்தான். ஆனால் பேசவில்லை. மந்திரங்களை முணுமுணுத்தவண்ணம் இருந்தான். ஜமீன்தார் அவன் செய்வதைப் பார்க்க அருகில் போய் நின்றார்.

திடீரென்று மன்னார்சாமி பயங்கரக் கூச்சலிட்டான். புடத்திலிருந்த களிமண் சட்டியை உடைத்து, அதில் இலைச்சாறை ஊற்றினான். பின் அதில் வெண்மையான பொடியைக் கொட்டிக் கலக்கினான், குறட்டைப் பிடித்து ஒரு ஈயத் துண்டை அந்தப் பொடியில் துவைத்தான்.

ஜமீன்தாரால் காத்திருக்க முடியவில்லை. புகையும், நாற்றமும் அங்கு நிற்க முடியாது போலிருந்தது. "எங்கே பொன்?" என்று அவர் கேட்டார்.

மன்னார்சாமி பதில் பேசாமல், இடுக்கியிலிருந்த துண்டைக் காட்டினான்.

"ஈயமல்லவா அது!"

சற்றுப் பொறுங்கள் என்று கையசைத்து, கொதித்துக் கொண்டிருக்கும் திராவகத்தைக் கீழே வைத்து, அதில் மற்றும் ஏதோ பச்சை, சிவப்பு, மஞ்சள் கருப்புத் தண்ணீர்களையும், பொடிகளையும் தூவி, ஈயத் துண்டை அதனுள் ரசவாதி போட்டான். அதற்குப்பின் அவனிட்ட கூச்சல், ஜமீன்தாரையே பயமுறுத்தி விட்டது.

புகை அடங்கியதும் அந்தப் பாத்திரத்திலிருந்த குழம்பை வடித்து, அதில் மந்திரித்த தண்ணீரை ரசவாதி கொட்டினான். பின் நீர் தெளிவடைந்தது. ஜமீன்தார் பார்த்துக்கொண்டே இருந்தார். பாத்திரத்தின் அடியில் வா வா ஒரு பொன் கட்டி

இருந்தது தெரிந்தது. "மாகாளி! ஜக்கம்மா! சக்தி! பரதேவதை!" என்று தன் நன்றியைத் தெரிவிக்க மன்னார்சாமி மண்டியிட்டுக் கூச்சலிட்டான். அந்தத் தேவதை ஏழாவது உலகத்துக்கு மேல் இருந்திருந்தால் கூட, மன்னார் சாமியின் குரல் அவர்களுக்குக் கேட்டிருக்கும்!

ரசவாதம் கைகூடிவிட்டது. ஈயம் தங்கமாகிவிட்டது. ஜமீன்தார் ஆனந்தத்தால் கூத்தாடினார். "மன்னார்சாமி! இதுவரை ரசவாதம் என்றால் முழு நம்பிக்கையும் கிடையாது. ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக, என்னை ஏமாற்றப் பார்க்கிறாய் என்று நினைத்த துண்டு. ஆனால் இன்று உன்னுடைய உண்மையான சக்தி தெரிந்தது. நீ பெரிய சித்தர்கள் வகுப்பைச் சேர்ந்தவன். ஆமாம்!"

மன்னார்சாமி தன் கறுப்புத் தாடியைத் தடவிக்கொண்டான்.

ஜமீன்தார் மன்னார்சாமியைத் தட்டிக்கொடுத்துச் சொன்னார்: "நாளைக்காலை பெரிய ஈயக்கட்டி ஒன்றைக் கொடுத்து அனுப்புகிறேன், அதைத் தங்கமாக்கி விடு."

"தங்கமாக்கவா?" மன்னார் சாமி மிரள விழித்தான்.

"இதோ பார்! இன்றைக்குச் சிறிய ஈயத் துண்டைத் தங்கமாக்கினாய். அதே போல் நாளைக்குப் பெரிய கட்டியைத் தங்கமாக்கு!"

"அப்படி முடியாதுங்க......" மன்னார்சாமி இழுத்தான்.

"இதுவரை ரசவாதம் முழுவதும் தெரியாமலிருந்தது. இப்பொழுதுதான் உனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. இனிமேலும் ஏன் தயக்கம்?"

மன்னார்சாமி ஒன்றும் சொல்லாமல் கையை நொடித்துக் கொண்டான். இவனை மிரட்டினால் படிவான் என்று ஜமீன்தார் நினைத்தார். மாலையில் பயமுறுத்தியதும், இரவு ரசவாதத்தைச் செய்து முடித்தான். அடியாத மாடு படியாது!

"மன்னார்! நான் சொல்வதைக் கேள்! நாளை இரவு ஒரு பெரிய தங்கக் கட்டி கிடைக்கவில்லை, உன் தாடியைப் பிடித்து மரத்தில் தொங்கவிட்டுச் சவுக்கு கொண்டு அடிக்கச் செய்வேன்!" ஜமீன்தார் வேகமாகப் போய் விட்டார். மன்னார்சாமி தலையைப் பிடித்துக்கொண்டான்.

அவன் என்ன செய்வான்? மாலையில் ஜமீன்தார் மிரட்டியதும், ஓடிவந்து ஒரு சிறு தங்கக் கட்டியை ஈயத்திற்குள் வைத்துத் தயாராக வைத்திருந்தான். ஜமீன்தார் வந்ததும் மந்திர தந்திரங்கள் செய்து, கொதிக்கும் சட்டியில் மற்றக் கலப்புகளுடன் போட்டான். ஈயம் உருகிப் பிரிந்து விட்டது. தங்கத்துண்டு மிகுந்தது. நாளைக்குப் பெரிய தங்கக் கட்டிக்கு அவன் எங்கு போவான்? ஒரு நாள் தப்பிக்கத் தந்திரம் செய்யப்போய் பெரிய ஆபத்தாக வல்லவா போய்விட்டது!

"தாடியைப் பிடித்து மரத்தில் தொங்கவிட்டு, சவுக்குக்கொண்டு அடிப்பேன்." ஜமீன்தாரின் எச்சரிக்கை அவன் காதில் ஒலித்தது. ஜமீன்தார் எதையும் செய்வார்! ஆனால் அவர் கேட்குமளவு தங்கத்துக்கு எங்கு போவது?

மன்னார்சாமிக்கு இரவு பூராவும் தூக்கம் வரவில்லை.

காலை விடியும்போது ரசவாதிக்கு அபூர்வயோசனை தோன்றியது. ஓடி விடுவது! மாளிகையை விட்டு, மூலிகை தேடுவதுபோல, மலையடிவாரம் போய் அங்கிருந்து மறைந்துபோய் விடலாம்! நல்ல யோசனை! கதவைத் திறந்துகொண்டு ரசவாதி வெளியில் வந்தான். எதிரில் இரண்டு கூர்க்கா சிப்பாய்கள் நின்று கொண்டிருந்தார்கள். ஜமீன்தாருக்கு மன்னார்சாமி தான் இப்பொழுது இருக்கும் கடைசி நம்பிக்கை—சொத்து. அதைப் பாதுகாக்க இரவே இரண்டு காவலாளிகளைப் போட்டுவிட்டுப் போனார்!

இரவு ஒன்பது மணிக்கு ஜமீன்தார் அறைக்குள் வந்தார். தலைமயிரைப் பிடித்துக்கொண்டு மன்னார்சாமி உட்கார்ந்திருந்தான். ஜமீன்தார் போய்ப் பக்கத்தில் நின்றார்—மெதுவாகத் திரும்பி அவரைப் பார்த்தான், சாவைப் பார்ப்பதுபோல்!

"என்ன?" என்று ஜமீன்தார் சிரித்தார்.

"என்னங்க?" என்று மன்னார்சாமி தன் கைவிரல்களைப் பார்த்தான்.

"என்னவா? நான் கேட்டபடி தங்கம் கிடைத்ததா?" ஜமீன்தார் போய் அடுப்புகளைப் பார்த்தார். அவர் அனுப்பிய ஈயம் உருகி, வழிந்து கிடந்தது. ஒரு அடுப்பில் ஏதோ கொதித்துக் கொண்டிருந்தது.

"தங்கம் எங்கே?" என்று ஜமீன்தார் உறுமினார். மன்னார்சாமியின் உடல் நடுங்கியது. அவனையுமறியாமல், "தங்கம் இல்லை!" என்று வாய் குழறியது.

"இல்லையா?" ஒரு சத்தம் கேட்டது. அடுத்த விநாடி மன்னார்சாமி நிலத்தில் படாமல் ஊசலாடினான். தாடியை ஒரு கையினாலும், பிடரியை ஒரு கையிலும்பிடித்து அவனை அலாக்காக ஜமீன்தார் தூக்கிவிட்டார். பிடரியிலிருந்த கை கொஞ்சம் அதிகமாக அழுத்தியிருந்தால் மன்னார்சாமி மண்ணுக்குள்போக வேண்டிய ஆசாமியாகியிருப்பான் தன் கடைசி பலத்தை உபயோகித்து அவன் துள்ளிக்குதித்து, ஜமீன்தார் பிடியிலிருந்து விலகினான்.

"தங்கம் இன்று கிடைக்கவில்லை, ஆனால்..."

"ஆனால்?"

"ஆனால் தங்கத்தைவிட அபூர்வமான பொருள் கிடைத்து விட்டது."

ஆச்சரியமும் சந்தேகமும் கலந்த பார்வையுடன் ஜமீன்தார் அவனைக் கவனித்தார். மன்னார் சாமி மூச்சு வாங்கினான். சற்று அவகாசம்! கண நேரத்துக்குள் ஒன்றைப் பொருத்தமானதாகச் சொல்லிவிடவேண்டும்.

"அதென்ன அபூர்வமான பொருள்!" ஜமீன்தார் கேட்டார்.

"தங்கத்தைவிட அபூர்வமானது" நிதானமாக ரசவாதி சொன்னான். தப்பித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு வந்து விட்டது.

"அப்படியென்றால்..."

"தசலோக முத்திரை!"

ஜமீன்தார் புரியாமல் நின்றார். அது ரசவாதிக்கு இன்னும் தைரியத்தைக் கொடுத்தது. "சித்தர்களுக்கு மட்டும் தெரிந்திருந்த வித்தை. பத்து லோகங்களைச் சேர்த்து, வினைசுட்டான் வேருடன் பொடி செய்து, பௌர்ணமியன்று கிழக்கு நோக்கி உட்கார்ந்து, காரும்பசுவின் பாலுடன் வெள்ளைக்கோழி முட்டையின் மஞ்சள் கருவையும் சேர்த்து..."

ஜமீன்தாருக்குக் கோபம் வந்தது. "என்னை ஏமாற்ற அடுக்கிக்கொண்டு போகாதே! தசலோக முத்திரையாகும் அது எப்படிப் பொன்னைவிட உயர்ந்தது?"

ஜமீன்தாரின் கேள்வி மன்னார் சாமியின் முகத்தில் உற்சாகத்தைக் காட்டியது. "மாந்திரிக சாஸ்திரத்தில் சொல்லுகிறபடி தசலோக முத்திரையில், ஒரு தாயத்து அணிந்து கொண்டால் போதும்! நினைத்தது கை கூடும், போட்டி, எதிர்ப்பு எவ்வளவு இருந்தாலும். தசலோக முத்திரைத் தாயத்துக்கு முன் எதுவும் நிற்காது. 'தசலோக முத்திரா தசலோக ராஜா!' என்று மந்திர சுலோகம் சொல்லுகிறது. தசலோக முத்திரை பெற்றவன், பத்து லோகங்களுக்கு ராஜாவாக இருப்பானாம். அது சக்தி அம்சமானது!" ஜமீந்தாரின்கண்களில் சந்தேகம் இருந்தது. ஆனால் முதலிலிருந்த கோபம் இல்லை. அதுவே போதுமானது. மன்னார் சாமியின் கற்பனை மடை திறந்த வெள்ளமாயிற்று.

"சிவபெருமான் முப்புரங்களை எதிர்த்துப் போனபொழுது, சக்தி தசலோக முத்திரையில் ஒரு தாயத்தைச் செய்து கொடுத்தாள். அந்தத் தாயத்தை அணிந்துகொண்டுதான் சிவன் சண்டைக்குப் போனார், வெற்றியும் கண்டார்! எதிரிகளாக இருப்பவர்கள் எவ்வளவு பலமானவர்களாயிருந்தாலும் இதற்கு முன் பெட்டிப் பாம்பு போல அடங்கி விடுகிறார்கள்!"

"உண்மையாகவா?"

ஜமீன்தாரின் சபலத்தைப் புரிந்துகொண்டான். "தசலோக முத்திரையின் மகிமையைநான் கேள்விப் பட்டிருந்தாலும், இதுவரை அதன்முறை தெரியாதிருந்தது. அதிகமான தங்கத்தை விரைவில் செய்துமுடிக்க வழி

யென்னவென்று, போகர் சாஸ்திரத்தையும், அண்டப்புல்கியர் மந்திரத்தையும்புரட்டும்பொழுது எனக்குத் தெரிந்தது. அதன் படி தசலோக முத்திரையைச் செய்து முடித்தேன்.''

''எங்கே?''

மன்னார்சாமி அவிந்த அடுப்பின் மேலிருந்த பாத்திரத்தைக் காட்டி ''அதோ! பாத்திரத்தின் அடியில் சிவப்பாக இருப்பது தான்! மந்திர உச்சாடனம் முடிகிறவரை கையால் தொடக்கூடாது.''

''தாயத்தைப் பற்றி நீ சொல்வதெல்லாம் உண்மையா ?

''மாகாளி சத்தியமாகச் சொல்லுகிறேன். முற்றிலும் உண்மை! நான் கொடுக்கிற தாயத்துக்கு மகிமையில்லை யென்றால் கண்டதுண்டமாக என்னை வெட்டிப் போடுங்கள்! தாயத்தை இடது கையில் கட்டிக்கொள்ளுங்கள். ஏதாவது வெற்றிபெற வேண்டுமானால், வலது கையால் தாயத்தைத் தொட்டு, ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி என்று மூன்று தடவை சொல்லுங்கள் போதும் வெற்றி உங்களுக்குத் தான்.''

மன்னார்சாமி சொல்வதை ஜமீன்தார் நம்பினார்.

''மறுநாள் காலை ஜமீன்தார் இடது கையில் தாயத்து தொங்கியது.

''இந்தத் தடவை தப்பித்துக் கொண்டோம், சீக்கிரத்தில் வேறு இடம் பார்க்க வேண்டும்'' என்று மன்னார்சாமி பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

அலங்காபுரி ஜமீன்தார் கட்டியிருக்கும் புதிய தாயத்தைப் பற்றி செய்திகள் பரவின. பெரிய மனிதர்கள் சந்திக்கும்பொழுது புதிய தாயத்துப் பேசப்பட்டது. தாயத்தைக்கட்டிக்கொண்டதும், முன்னை விட முடுக்குடனும், ஆர்ப்பாட்டத்துடனும், ஜமீன்தார் மற்றவர்களிடம் நடந்து கொண்டார். அவர் வைத்திருந்த தாயத்தைப்பற்றிப் பலர் முதலில் அலட்சியமாக இருந்தார்கள். ஆனால் அலங்காபுரி ஜமீன்தாருக்கு எதிராக இருந்த மனுங்காபுரி ஜமீன்தாரின் திடீர் மரணம் தாயத்தின் சக்தியை உயர்த்தியது.

அலங்காபுரிக்கும் மனுங்காபுரிக்கும் எப்பொழுதும் தீராத சண்டை. ஆள் அம்புகளிலும், பணம் செல்வாக்குகளிலும் மனுங்காபுரி உயர்ந்த கை! ஒவ்வொரு மோதுதலிலும் அலங்காபுரிக்குத் தான் தோல்வி கிடைக்கும்! ஜில்லாபோர்டு தலைவராக மனுங்காபுரி ஜமீன்தார் தொடர்ந்து நான்கு முறை இருந்துவிட்டார். ஒவ்வொரு தடவையும் அலங்காபுரி ஜமீன்தார் எதிர்க்கட்சி சேர்த்துத் தொடர்ந்து தோல்விகண்டிருக்கிறார். சிறிய கூட்டுறவு பாங்கு தேர்தலிலிருந்து, கடைசியாக நடந்த ஜில்லா போர்டு கூட்டத்துக்கு, என்றுமில்லாமல் அலங்காபுரி ஜமீன்தார் வந்திருந்தார். தலைவரை அவ

மதித்துப் பேசினார். மலுங்காபுரி ஜமீன்தார் உட்காரச் சொல்லிக் கட்டளையிட்டார். தலைவர் என்ற முறையில், பேச்சு முற்றியது, அடிதடியில் முடியும் போலிருந்ததாம். திடீரென்று எதையோ ஞாபகப்படுத்திக் கொண்டவர் போல, அலங்காபுரி ஜமீன்தார் தன்னிடத்தில் உட்கார்ந்து வலது கையால் இடது கைமேல் தடவி "ஓம் சக்தி!" என்று முணுகி விட்டு, பேசாமல் கூட்டத்திலிருந்து வெளியேறி விட்டாராம் ஒரு வாரத்திற்குப் பிறகு மலுங்காபுரி ஜமீந்தார் மாரடைப்பினால் இறந்துபோனார்.

மலுங்காபுரியாரின் மரணத்துக்குக்காரணம் அலங்காபுரியார் தாயத்துதான் என்று நம்பிக்கை பரவியது. அலங்காபுரி ஜமீன்தார் என்றால் பெரிய மனிதர்கள் பயந்து நடுங்கினார்கள். கடன் கொடுத்தவர்கள் முன் போல நெருங்கிக் கேட்பதில்லை. அலங்காபுரி ஜமீன்தார் ஜில்லா போர்டைப் பிடிப்பதில் தீவிரமானார். முதலில் அவர் சந்திக்கச் சென்றது கீழையூர் சோமசுந்தரம் பிள்ளையை.

அலங்காபுரி ஜமீன்தார் வருகிறாரென்றதும் கீழையூர் பிள்ளை எழுந்திருக்காமல் உட்கார்ந்திருந்தார். அவர் அலங்காபுரியாரைவிட எந்த வகையிலும் உயர்ந்தவர். கீழையூர் பிள்ளை ஒரு ஜமீன்தார் இல்லையென்றாலும், பத்து ஜமீன்களை வாங்கக் கூடிய பணம் அவரிடமிருந்தது. அவரிடம் கடன் வாங்காத ஜமீன்தார்கள், பெரிய புள்ளிகள் அந்தப் பக்கத்தில் கிடையாது. அலங்காபுரி ஜமீன்தார் மிகுந்த தைரியத்துடன் வந்தபோதிலும் பிள்ளையை நேரில் பார்க்கும் பொழுது அவரையுமறியாமல் பணிவு வந்தது. நீண்ட பழக்கத்தை ஒரு நாளில் மாற்றமுடியுமா?

"உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்."

"என்ன சங்கதி?" பிள்ளை கேட்டார், வெற்றிலையைப் பளிக்கத்தில் துப்பியபடி.

"பெரிய காரியம் ஒன்றுமில்லை. எதற்கும் உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப்போக வந்தேன்." ஜமீன்தார் இழுத்துப் பேசினார்.

"சொல்லாமல் வளைத்தால், எனக்குப் புரியவில்லை!" அலங்காபுரி ஜமீன்தார் கட்டியிருக்கும் தாயத்தைக் கீழையூர் பிள்ளை பார்த்தார். சிறிய வெள்ளிக் குழாய் மஞ்சள் கயிற்றில் தொங்கியது. மந்திரம், மாயம், தாயத்து, ஏராளமாக விற்கிறார்கள், அவற்றில் இதுவும் ஒன்று! மற்றவர்கள் சொல்லியபடி அவ்வளவு பயங்கரமாக அது தெரியவில்லை.

"ஜில்லாபோர்டு தலைவர் தேர்தல் வருகிறது" ஜமீன்தார் குரலைச்சரி செய்துகொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

"ஆமாம்!"

"தலைவருக்கு என்னை நிற்கும்படி எல்லோரும் தொந்தரவு செய்கிறார்கள். பெரியவர்களைக்

கேட்டுத்தான் செய்யவேண்டுமென்று உங்களிடம் வந்தேன்."

இதுவரையில் மூலையில் கிடந்தவன், இப்பொழுது ஜில்லா போர்டுக்குப் போட்டியிட வந்துவிட்டானேயென்று கிழையூர்ப் பிள்ளைக்குச் சிரிப்பு வந்தது. அவரது பார்வை ஜமீன்தார் கட்டியிருக்கும் தாயத்தின் மீது படிந்தது. ஒருவேளை அந்தத் தாயத்து மகிமையுள்ளதாக இருக்குமோ? வேறு பக்கம் பார்க்க அவர் முயன்றாலும் அவரது கண்கள் மீண்டும் தாயத்துக்கு வந்தன.

"நீங்கள் சரியென்றால், நான் நிற்கிறேன்" என்று ஜமீன்தார் வேண்டுகோள்விடுத்தார்.

"நான் மட்டும் சொன்னால் போதாது. மனுங்காபுரி மாப்பிள்ளைகூட காலையில் வந்தார்" என்று தலைவர் தேர்தலுக்கு மற்றொருவர் போட்டியாக நிற்கிறார் என்பதை மறைமுகமாகப் பிள்ளை தெரிவித்தார்.

"அப்படியானால், நீங்கள் முடிவாகச் சொல்லுங்கள்!" ஜமீன்தார் கடுமையாகக் கேட்டார். அவரது வலது கை தாயத்தின் மீது பட்டது. தாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பிள்ளை திடுக்கிட்டார். நிமிர்ந்து உட்கார்ந்து, "அவசரப்படாதே!" என்று கேட்டுக்கொண்டார்

ஜமீன்தார் தாயத்தைப் பற்றிய வண்ணம் "கடைசியாகக்கேட்டுக் கொள்ளுகிறேன், உண்டு இல்லையென்று சொல்லிவிடுங்கள்! நான் போய்விடுகிறேன்!" என்று கேட்டார்.

"நான் யோசித்துச் சொல்லுகிறேன்!" பிள்ளையின் கண்கள் வெளிவந்து விடுவதைப் போன்று தாயத்தைக் கவனித்தன. ஜமீன்தார் தாயத்தை விடவில்லை.

"சரி! எப்பொழுது சொல்லுவீர்கள்?"

"என்ன அவசரம்? ஒருவாரம் கழித்து•••அல்லது...நாளைக்கு"

ஜமீன்தார் அதைக் கேட்டுக்கொள்ளாமல் "ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!" என்று முனகிக்கொண்டார். மூன்றாவது தடவை சொல்லி முடிப்பதற்கு முன், பிள்ளை அவர் காலைப்பிடித்துக்கொண்டு, "அப்பா! என்னை ஒன்றும் செய்யாதே! உனக்கு நான் வேண்டியது செய்கிறேன்" என்றார். ஒரு வாரத்துக்குப்பின் அலங்காபுரி ஜமீன்தார் ஜில்லா போர்டு தலைவரானார்.

மந்திரத் தாயத்து மகிமை உயர்ந்தது. அலங்காபுரி ஜமீன்தாரருக்கு முன் எல்லோரும் பணிந்து போனார்கள். மன்னார் சாமிக்கு ஆடம்பரமான உபசாரங்கள் சென்றவிடமெங்கும் கிடைத்தன. பல ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், பத்தாயிரம் தருகிறேன்! ஐம்பதினாயிரம் தருகிறேன்! எனக்கு ஒரு தாயத்துச் செய்துதா!" என்று அவனை ரகசியமாகக் கேட்டுக்கொண்டார்கள். தன்னைவிட்டு அகலமுடியாதபடி, மன்னார்சாமிக்குக் கட்டுக்காவல் அதிகம் போட்டதுடன்,

எங்குபோனாலும் அவனைத் தன் பக்கத்தில் ஜமீன்தார் வைத்துக் கொண்டார். அவர் நினைத்தது முடிந்தது, இட்டது சட்ட மாயிற்று, மலுங்காபுரி உட்பட எல்லா ஜமீன்தார்களும், பெரிய மனிதர்களும் அவர் வார்த்தையை மீறாமலிருந்தார்கள். அலங்காபுரி ஜமீன்தார் — அல்ல அவர் கட்டியிருந்த தாயத்து அமோகவெற்றியுடன் ஆட்சி செலுத்தியது.

இருபது வருடங்களுக்குப்பின் ரசவாதி மன்னார்சாமி நோய் வாய்ப்பட்டு இறக்கும் தருவாயிலிருந்தான். அவன் இப்பொழுது அலங்காபுரி ஜமீனில் இல்லை. அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இறந்துபோனார். ஜமீன்தார் இறந்துபோவதற்குமுன், தனக்கு வரவேண்டிய ஒரு லட்ச ரூபாய் கடனுக்குப்பதிலாக, மன்னார்சாமியைக் கீழையூர் பிள்ளை வாங்கிக்கொண்டார். வழக்கமாகச் சொல்லும் சாக்குபோக்குகள், நாள் நட்சத்திரம், மேகமில்லாத பௌர்ணமி இரவு இப்படிச் சொல்லி மன்னார்சாமி பதினெட்டு மாதங்கள் கடத்தி விட்டான். அதற்குப்பின் நோய் வாய்ப்பட்டு, ஆறுமாதமாகப் படுக்கையில் இருந்தான். கீழையூர் பிள்ளை எவ்வளவு செலவு செய்தும், மீண்டும் மன்னார்சாமி எழுந்து நடமாடுவான் என்ற நம்பிக்கை போய்விட்டது. கடைசியாக வந்த டாக்டர் தலையசைத்துவிட்டுப் போய்விட்டார். எல்லோரையும் வெளியில்போகச் செய்து கீழையூர்ப்பிள்ளை அறைக்குள் நுழைந்தார்.

"மன்னார்! கடைசியாகச் சொல்லிவிடு! தசலோகமுத்திரை மந்திரத் தாயத்து எப்படிச்செய்வது?" மிகக் கெஞ்சி பிள்ளை கேட்டுக்கொண்டார்.

இறக்கும்பொழுதுகூட சும்மா விடமாட்டார்களே என்று மன்னார்சாமி முனகிக்கொண்டான். "இதோ, பாருங்கள்! மந்திரமும் தாயத்தும் ஒன்றும் கிடையாது! கட்டியிருப்பவருக்குத் தன்னிடமிருக்கும் தாயத்து மந்திர சக்தியுள்ளது என்ற நம்பிக்கையிருக்கவேண்டும். அதைப் பார்க்கும் மற்றவர்களுக்கும் தாயத்து மந்திர சக்தியுள்ளது என்ற நம்பிக்கை வரவேண்டும்! அப்பொழுதுதான் தாயத்து சக்திவாய்ந்தது. நான் கொடுத்த தாயத்தில் ஒன்றுமில்லை-வெறும் ஈயம், செங்கல், கொஞ்சம் சத்தியம், அவ்வளவுதான்! தாயத்தைச் செய்வதில் கஷ்டமில்லை, ஈயம், பித்தளை தகரம், கல் மண், எது கிடைத்தாலும் செய்துவிடலாம்! மற்றவர்களிடத்தில் நம்பிக்கையும் பயமும்வரும்படி முதலில் செய்துகொள்ளவேண்டும்இதைச் சொல்லிய பிறகு உங்களுக்கு இனி எந்தத் தாயத்தும் பலன் தாராது. ஏனென்றால் உங்களுக்கு நம்பிக்கையில்லையென்றால் மற்றவர்களிடத்தில் நம்பிக்கையை உண்டாக்க முடியாது! காலம் வரவர மாறிப்போய்விட்டது; இனிமேல்..."

மன்னார்சாமி முடிக்கவில்லை. கீழையூர் பிள்ளை கோபத்துடன்

[56ஆம் பக்கம் பார்க்க]

# சங்க இலக்கியங்கள்

[மா. கி. தசரதன் எம்.ஏ.,]

நமது முன்னோர்கள், வாழ்ந்த வாழ்க்கையை எண்ணிப்பார்த்து இன்று அப்படி இல்லையே என்று ஏங்குகின்றோம். அன்று அவர்கள் உலகம் புகழ வாழ்ந்தார்கள். வீரர்களாக வாழ்ந்தார்கள்; அறிவின் அரசர்களாக விளங்கினார்கள்; நாட்டின் நலம் கொழித்தது; மகிழ்ச்சி பொங்கியது; நாகரிகம் விளங்கியது என்றெல்லாம் அறிகின்றோம். அறிந்து மகிழ்கின்றோம்.

அவர்கள் வாழ்ந்ததை நாம் காணவில்லை என்றாலும், இந்தச் செய்திகளை நாம் எப்படி அறிகின்றோம்? சில நூல்கள், பாடல்கள் நமக்கு அந்த வாழ்க்கையை ஓவியம்போல் எடுத்து விளக்குகின்றன. அந்த நூல்களுக்குத் தான் **சங்க இலக்கியங்கள்** என்று பெயர்.

## தெரியாது!

'அந்தக் காலம்' என்று சொன்னால் போதாது, 'எந்தக் காலம்? என்று சுட்டிக்காட்டி விளக்க வேண்டாமா? ஆம்! ஆனால் முடியாது. ஏன்? நமக்கு எழுதி வைக்கப்பட்ட வரலாறு கிடையாது. இன்ன ஆண்டில், இன்னது, நடந்தது; இன்னார் நடத்தினார் என்றுசொல்லும் வரலாறு நம்மிடத்திலே இல்லை. இது நமது இனத்தின் குறையோ, அன்றி இதிலேதான் நமதுசிறப்பு இருக்கிறதோ தெரியவில்லை. எப்படியோ—இந்த ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை உள்ள இத்தனையாண்டுகள் சங்க காலம் என்று சொல்ல முடியவில்லை. என்றாலும், ஆராய்ச்சியாளர்கள் பலவாறு ஆராய்ந்து, பல காலம் ஆராய்ந்து, 'இதுதான்' என்று குறிப்பாக ஒரு காலத்தைச் சொல்கின்றனர். அந்தக் காலம், ஏறத்தாழ **இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்** வரை இருந்த ஒரு காலத்தைக் குறிக்கிறது. இது, சங்க காலத்தின் முடிவு; எப்போது தொடங்கியது என்பதை அறிய இயலவில்லை.

## அந்த இலக்கியங்கள் யாவை?

காலம் தெரியாவிடினும், அந்தக் காலத்தில் எழுதிய நூல்களாவது தெரியுமா? தெரியும். 'இதோ இவைதான்' என்று சில நூல்களை எடுத்துக்காட்டி, இவை சங்க இலக்கியங்கள் என்று சொல்ல இயலும். அப்படிக்காட்டக் கூடிய நூல்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து வைத்துள்ளனர். ஒன்று **பத்துப்பாட்டு** என்றும், இன்னொன்று **எட்டுத்தொகை** என்றும் அவைஅழைக்கப்படுகின்றன. ஆக, மொத்தம் பதினெட்டு நூல்கள்தானா அந்தக் காலத்தில் எழுதப்பட்டன?

அல்ல-வேறு எத்தனையோ நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. போன இடம் தெரியவில்லை. கடல் பொங்கி வந்து நாட்டை விழுங்கியபோது சில அழிந்து விட்டன என்றும், நெருப்பிலே சில நீறாகி விட்டன என்றும், சொல்கிறார்கள். அப்படி அழிந்து விட்ட நூல்களின் பெயர்கள் மட்டும் இப்போது நமக்குத் தெரிகின்றன.

உள்ள நூல்களையேனும் அறிந்து கொள்வோம்.

## பத்துப் பாட்டு

பெயரிலேயே, பத்துப்பாட்டுகளின் தொகுப்பு நூல் இது என்பது தெரிகிறது.

1. திருமுருகாற்றுப் படை,
2. பொருநர் ஆற்றுப்படை,
3. சிறுபாணாற்றுப் படை,
4. பெரும்பாணாற்றுப் படை,
5. முல்லைப் பாட்டு,
6. மதுரைக் காஞ்சி,
7. நெடுநல்வாடை,
8. குறிஞ்சிப்பாட்டு,
9. பட்டினப் பாலை,
10. மலைபடுகடாம்.

இவையே பத்துப்பாட்டு என்று சொல்லப்படும் நூல்கள்.

## 1. திருமுருகு ஆற்றுப்படை

**புலவர் ஆற்றுப்படை** என்று இன்னொரு பெயரும் இந்த நூலுக்கு வழங்கும். ஆறு என்றால் 'வழி' என்று ஒரு பொருள் உண்டு. ஆற்றுப்படுத்துதல், வழிப்படுத்துதல் என்றாகும். படைஎன்பது படுத்துதல் என்று பொருள்படும்.

முருகக்கடவுளுடைய அருள் பெற்ற ஒரு புலவர் எதிரே வந்த மற்றொரு புலவருக்கு முருகன் இங்கிருந்து கோயில் கொண்டுள்ளார். இன்ன இன்ன இயல்பை யுடையவர்; இவ்வாறு சென்று, இவ்வாறு வழிபட்டால் அவனுடைய அருளைப் பெறலாம் என்று எடுத்துச்சொல்லி வழியனுப்பியதாக இப்பாடல் புனையப்பெற்றுள்ளது. 317 அடிகளை உடையது இது.

### இதை இயற்றியவர்

மதுரைக் கணக்காயனார் மகன் **நக்கீரன்.**

### எங்கும் உள்ளார்

திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி.

---

[54ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைத்தடியால் கொடுத்த அடி அவன் தலையில் விழுந்து, பேச்சு மூச்சு இரண்டையும் நிறுத்தி விட்டது. பிள்ளை ஒன்றும் செய்யாவிட்டால்கூட இன்னும் ஒரு நாழிகைக்குள் அவன் உயிர் இயற்கையாகப் பிரிந்திருக்கும். பிள்ளை கொடுத்த அடி சீக்கிரம் உயிர் பிரிவதற்கு உதவி செய்தது. அவ்வளவுதான்!

ஆனால் இறக்கும்பொழுது உண்மையைச்சொல்லிக்கொண்டு மன்னார்சாமி இறந்தான்!

—"மன்றம்"

திருவேரகம், மலைகள் தோறும், ஊர்கள்தோறும் முருகன் காணப் படுவான் என்று சொல்லப் படுகிறது. அங்கெல்லாம் சென்று, அவன் புகழ் பாடித்துதித்து வேண்டி நிற்பார்க்குப் பழமுதிர் சோலையில் கோயில் கொண்டுள்ள அவன் அருள் கிடைக்கும் என்று இந்தப் பாட்டு குறிப்பிடுகிறது.

## 2. பொருநர் ஆற்றுப்படை

கரிகால் பெருவளத்தான் என்ற சோழமன்னனிடம்பெரும் பரிசில்கள் பெற்றுவரும் பொருநன் ஒருவன் தன் எதிரில் வந்த வறிய பொருநன் மற்றொருவனுக்குக் கரிகாலனின்வளம், வீரம் கொடை முதலியவற்றை எடுத்துச் சொல்லி, அவனிடம்சென்று பரிசில் பெற்றுமகிழுமாறு வழிப் படுத்துவதாக இந்தப் பாடல் அமைந்திருக்கிறது. 248 அடிகளை உடையது. இதனை இயற்றிய புலவர் முடத்தாமக்கண்ணியார் என்பவராவர்.

"புலவனே, நாங்களும் அவனைக் காணும் முன்னர், உன்னைப் போலவே வறுமையில் வாடிக் கிடந்தோம். அவன் அவைக்குச் சென்று அவனைக் கண்ட பின்னர் இதோ, இத்தகைய சிறப்புகளோடு வருகின்றோம். நீயும் அவ்வாறே அவன்பால் சென்று பொருள் பெறுவாயாக. அவன் கருவில் திருவுடையவன்; இளவயதிலேயே வெண்ணிப் பறந்தலை என்ற இடத்தில் சேரபாண்டிய மன்னர்களைஒருங்கேவென்று புகழ் கொண்டவன். அவன் உங்களுக்குப், பொற்றாமரைப்பூவை அணிவிப்பான்; பட்டுடைகள் நல்குவான்; நாடும் அளிப்பான்; உங்கள் வறுமை தொலையும்." என்றெல்லாம் பரிசில் பெற்ற புலவன் எடுத்து இயம்புகின்றான்.

## 3. சிறுபாண் ஆற்றுப் படை

ஓய்மான் நாட்டு நல்லியக்கோடன் என்ற வள்ளலிடம் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் தன் எதிரில் வந்த இன்னொரு பாணனுக்கு நல்லியக்கோடனின் பண்புகளை எடுத்துச் சொல்லி, அவன்பால் சென்று பரிசில் பெற்று மகிழுமாறு கூறுவதாக இந்தப்பாட்டு அமைந்திருக்கிறது. 209 அடிகள் கொண்டது இப்பாடல்.

பாணரில் சிறுபாணர்; பெரும்பாணர் என்று இரண்டு வகையினர் இருந்தனர் என்று அறிகின்றோம். இது சிறுபாணர் ஆற்றுப் படை.

இதனைப்பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் ஆவர்.

பாணனே, வேறு இடங்களை நாடி நீ செல்லவேண்டாம். அங்கே கிடைக்கும் பரிசில்களை விடப் பெரியபரிசில், நல்லியக் கோடனிடம் கிடைக்கும். மயிலுக்கு ஆடை அணிவித்த பேகன், முல்லைக்குத்தன் தேர் ஈந்த பாரி, குதிரைகளோடு பல பரிசில்களை ஈந்த காரி, நாகம் அளித்த ஆடையை ஆண்டவன் உருவத்திற்கு அளித்த ஆய், அருமையான நெல்லிக் கனியை அவ்வைக்கு அளித்த அதியமான்,

தன்னை அடைந்தவர்க்கு அள்ளி அள்ளிக் கொடுத்த **நள்ளி**, என்று இவர்கள் எழுவர் அளித்த கொடையை அவன் ஒருவனே தந்து கொண்டிருக்கிறான். அவனைப் பாடிப் பொருள் பெறுவதற்கு முன் கொடிய வறுமை எங்களையும் வாட்டி வருத்தியது. இப்போதோ நாங்கள் செல்வச் செழிப்பில் திளைக்கின்றோம்.

"அவன் நகர் சென்று சேரும் வழியில் உள்ள நெய்தல் நில மக்களும், முல்லை நில மக்களும், மருத நில உழவர்களும், உங்களை அன்போடு வரவேற்று உண்டி முதலியன தந்து உபசரிப்பர். பின் அவன் நகர் அடைந்ததும் நல்ல பரிசில் பெறுவீர்" என்று கூறுகின்றார்.

தமிழகத்தின் வளமும், மக்களின் விருந்தோம்பும் பண்பும், ஆடை அணிமணிகளின் சிறப்பும் இந்தப் பாட்டில் தெளிவாக விளக்கப்படுகின்றன. இயற்கையழகு கொஞ்சும் பகுதிகள் நிறைந்துள்ளன.

## 4. பெரும்பாண் ஆற்றுப்படை

காஞ்சிபுரத்தில் அரசாண்டிருந்த **தொண்டைமான் இளந்திரையன்** என்னும் மன்னன் பால் ஒரு பெரும்பாணனை வழிப்படுத்தியதாக இப்பாடல் அமைந்துள்ளது. 103 அடிகள் கொண்டது.

இப்பாடல், கடியலூர் **உருத்திரங் கண்ணனார்** என்ற புலவர் பாடியதாகும்.

சிறுபாணாற்றுப்படையில் உள்ளது போலவே, இப்பாடலிலும் தமிழகத்தின் இயற்கை எழில், வளம் முதலியவற்றை எடுத்துக் கூறித் தமிழ்மக்களின் பண்பு மேம்பாட்டை விளக்கியுள்ளார் புலவர். அதனைவிட, இப்பாடலில் மிகுதியான செய்திகளும் விளக்கங்களும் உள்ளன. நெய்தல் முதலான நால்வகை நிலங்களில் வாழும் மக்களின் உணவு வகைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவைகள் இப்பாடலின் மூலமாக நாம் அறிய இயலும்.

## 5. முல்லைப்பாட்டு

பகைவன் மீது சினந்து போருக்குச் சென்ற தலைவன் (கணவன்) வரும்வரை மனம் தேறியிருந்த தலைவி (மனைவி) யின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது, இப்பாட்டு. இதனைப் பாடியவர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் **நப்பூதனார்** ஆவர்.

தலைவனின் வரவு நோக்கிக் காத்திருக்கும் தலைவியின் மனத் துயரத்தை விளக்கும் போது, அதே நேரத்தில் போர்க்களத்தில் இரவு நேரத்தில் தலைவன் இருக்கும் நிலையை விளக்கும் வாயிலாகப் புலவர் அந்தக் காலத்துப்போர்க்களத்தை நமக்கு எழுதிக் காட்டுகின்றார்.

"ஆறு சூழ்ந்த காட்டில், புதர்களை அழித்து, அங்கிருந்த விலங்கினங்களை ஓட்டி, முள்வேலியிட்டுப்பாசறை அமைக்கப்பட்டது." பாசறை பரப்பிலும் அமைப்பி

னும் ஒரு நகரம் போலவே விளங்கியது. யானைகள் இரவில் உணவு கொள்ளாமல் இருக்க, பாகர் அவற்றை வேறு வழிகளில் தெருட்டிக் கொண்டிருந்தனர். பல்வேறு இடங்களிலிருந்து வந்த பெரிய படை இருந்தது. ஆங்கு, தனியாக அமைந்ததோர் இடத்தில் மங்கையர் விளக்கு அணையாமல் பாதுகாத்து நிற்க, மெய்க்காப்பாளர் சூழ்ந்து நிற்க, நாழிகைக் கணக்கர் பொழுது எண்ண, யவனக் கலைஞர்கள் சமைத்த இருக்கையில் மன்னன் வீற்றிருந்தான். ஊமையரான காவலர் சூழ்ந்திருந்தனர்'' என்று சொல்லும் பகுதி நம் மனக்கண் முன்னே போர்க்களத்தையே கொண்டுவந்து நிறுத்துகின்றது அல்லவா ?

இந்தப் பாட்டு நூற்றுமூன்று வரிகளைக் கொண்டது. இந்தத் தொகுதியில் இதுவே மிகச்சிறிய பாட்டு.

## 6. மதுரைக் காஞ்சி

தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் **நெடுஞ் செழியன்** என்ற மன்னனுக்கு நிலையாமையை உணர்த்துவதற்காக மாங்குடி **மருதனார்** என்ற புலவர் பாடியது இது. எழுநூற்று எண்பது வரிகளைக் கொண்ட இந்தப் பாடலில் பல கருத்துக்கள் விரிவாகப் பேசப் படுகின்றன.

இவன் புகழினையும் முன்னோர் சிறப்பினையும் எடுத்துச் சொல்லி வாழ்த்துக் கூறுவதற்குப் புலவர் பல வரிகளைப் பயன்படுத்தியுள்ளார். பாண்டி நாட்டில் அமைந்துள்ள மருதம், முல்லை, குறிஞ்சி பாலை, நெய்தல் ஆகியநிலங்களின் வளங்களும் சிறப்புக்களும் விரிவாக விளக்கப்படுகின்றன. அந்தக் காலத்தில் மதுரை மாநகர் விளங்கிய மாண்பு இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. அந்நகரின் தெருக்கள், வாணிபச் சிறப்பு, அங்கு விற்கப்பட்ட பொருள்களின் பட்டியல், வாழும் மக்கள், அவரவர்கள் செய்தொழில் முதலியனவெல்லாம் இப்பாடலில் காணக் கிடக்கின்றன.

## 7. நெடுநல்வாடை

பாண்டியன் **நெடுஞ்செழியன்** பகைவர் மீதுபடைகொண்டு சென்றானாக அவன் வரும் வரை ஆற்றியிருக்குமாறு **நக்கீரனார்** பாடிய பாட்டு இது. இந்தப் பாட்டில் ஓர் இடத்திலாவது இது நெடுஞ்செழியனைக் குறித்துப்பாடப்பட்டது என்று சொல்லப்படவில்லை. ஆனால் 176ஆவது வரியில் (வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்) இருக்கும் தலைவன் வேப்பம்பூ அணிந்தவன் என்ற குறிப்பைக் கொண்டு அந்தப் பூவை அடையாள மாலையாகக் கொண்டவன் பாண்டியன் என்ற காரணத்தினால் இது நெடுஞ்செழியனைக் குறிக்கிறது என்று அறிகின்றோம்.

இந்தப் பாடலிலும், தமிழகத்தின் வளம் முதலிய சிறப்புக்கள் பேசப்படுகின்றன. தலைவனை எதிர்நோக்கி இருக்கும் தலைவி

யைப் பற்றி விளக்கும்போது ஆசிரியர் அந்தக் காலத்தில் தமிழகத்து அரசி ஒருத்தியின் செல்வச் சிறப்பை விளக்கும் வாயிலாகப் புறநாகரிகத்திலும் நாம் எவ்வளவு மேம்பட்டு இருந்தோம் என்பதை அறிவிக்கிறார்.

இந்தப் பாட்டு, நூற்று எண்பத்தெட்டு வரிகளைக் கொண்டதாகும்.

## 8. குறிஞ்சிப் பாட்டு

ஒரு பெண் (தலைவி) இன்னான் (தலைவன்) மீது காதல் கொண்டுள்ளாள், பழக்கமும் உண்டு என்ற செய்திகளை யெல்லாம் செவிலித்தாயிடம் (தலைவியின் தோழி) எடுத்துச் சொல்வாள். இந்த நிகழ்ச்சிக்கு 'அறத்தொடு நிற்றல்' என்று பெயர். அந்த முறையில் இந்தப் பாட்டைக் **கபிலர்** பாடியுள்ளார். ஏன் பாடினார்? காரணம் விந்தையானது! ஆரிய அரசன் **பிரகத்தன்** என்பவனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்காகப் பாடினாராம்!

பண்டைக் காலத்துக் காதல் வாழ்க்கை இப்படி இருந்தது என்பதை அறிய வேண்டுமாயின் இந்தப்பாட்டு அதற்கு உற்ற துணையாக இருக்கும்.

தலைவி தலைவனைக் காணுவது, கருத்து இழப்பது, கலப்பது, பழகுவது, கலங்குவது, களிப்படைவது முதலியனவெல்லாம் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

கபிலர் இயற்கையை நன்கு ஆராய்ந்த புலவர் என்பதும், அதன் இன்பத்திலே திளைத்தவர் என்பதும் தமிழ் மாணக்கர் அறிவர். இந்தப்பாட்டில் இயற்கையை அவர் பாடியுள்ள பகுதிகள் படித்து இன்பம் பெறத்தக்கவையாகும்.

இந்தப் பாட்டு இருநூற்று அறுபது வரிகள் கொண்டது.

## 9. பட்டினப்பாலை

இந்தக் காலத்தில் பட்டினம் என்றால் சென்னை. அந்தக்காலத்தில் பட்டினம் என்றால் அது **காவிரிப்பூம் பட்டினம்** தான்! அதன் சிறப்பு, அமைப்பு முதலியன இந்தப் பாடலில் பேசப்படுகின்றன.

இதனைப் பாடியவர் கடியலூர் **உருத்திரங் கண்ணனார்** ஆவார். வஞ்சி நெடும்பாட்டு என்பது இதற்கு வழங்கும் இன்னொரு பெயர்.

அந்த நகரத்துத் தெருக்களின் வருணனைகள், அங்காடிகளின் விளக்கங்கள், பொருள்களின் சிறப்புக்கள், மக்களின் வாழ்க்கை விளக்கங்கள், விலங்கு, புள் (பறவை) இவற்றினைப் பற்றிய செய்திகள், கடற்கரை, கலங்கள் அங்குள்ள நிலை, இன்னோரன்ன செய்திகளை விரிவாக அறிய இந்நூல் பெருந்துணையாக இருக்கிறது. முன்னூற்று ஒரு வரிகளைக் கொண்டது இப்பாட்டு.

## 10. மலைபடுகடாம்

செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் **நன்னன்** என்ற வள்ளள

[62ஆம் பக்கம் பார்க்க]

# "வெறும் கல்வி போதாது: ஒழுக்கத்தை உயர்த்தும் நியதிகளைப் போதிக்கவும்"

## சி. டி. தேஷ்முக் அறிவுரை

கோலப்பூர். அக். 18— "தேசத்தில் அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறையாக இருந்துவரும் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. இதன் காரணமாக ஜனநெருக்கம் மிகுதியாகவுள்ள நகர்ப் புறங்களில், மதிப்புமிக்கவை எனப் போற்றிப் பேணி வந்த நல்லொழுக்கங்களும் ஆன்மிக நியதிகளும் சிதைந்து வருகின்றன" என்று டில்லி ஸர்வகலாசாலை உப-அத்யட்சகர் திரு. தேஷ்முக் கூறினார்.

### சூழ் நிலை

மேலும் திரு. தேஷ்முக் கூறினார்:

ஒருவன் எந்தச் சுற்றம் சூழ்நிலையில் வாழ்கின்றானோ, அது மனிதனின் குணப் பண்புகள் உருவாகி உறுதிப்படுவதற்குத் துணைபுரியக்கூடியவை. இது என் திட நம்பிக்கை. வர்த்தக, ராஜீயத் துறைகளில் தார்மிக, ஆன்மிக நியதிகள் சுலபமாக மதிப்பிழந்து வரும் நிலவரத்தில், சமுதாயம் நிச்சயமாக சரியத்தான் செய்யும். இவை சீரழியும்படி விடுகின்ற எந்தச் சமுதாயமும், நாளடைவில் சுபிட்சமாக வாழ இயலாததாகி விடும்.

### ஓயாத தொல்லை

அத்தகைய சமுதாயத்தில் தகராறுகளும் நெருக்கடிகளும் நிறைய இருக்கத்தான் செய்யும். அந்நிலையின் காரணமாக, படிப்படியாக சட்டத்தின் மாட்சிமை குன்றிப்போய், ஒரு பெரிய கொந்தளிப்பில் கொண்டுபோய் விடும்.

சட்டத்தின் மாட்சிமைக்கு இளைஞர், முதியோர் எல்லோரும் ஒருசேர மதிப்புத் தந்து கட்டிக் காத்தாலொழிய, சமுதாயமே நிலைகுலைந்துபோய்க் குழப்பத்தில் ஆழ்ந்துவிடும்.

### அலட்சியம் கூடாது

ஒழுக்கத்தைப் பற்றிய நியதிகள் விஷயத்தில் இளைஞர்கள் சிரத்தையற்று இருக்கலாகாது. பல நூற்றாண்டுகள் அடிமைகளாக வாழ்ந்தது நம்மைச் சோம்பேறிகளாக்கிவிட்டது. அநீதி, முரட்டுத்தனம், பொய்மை ஆகியவற்றைச் சுலபமாக சகித்துக் கொண்டு இருப்பவர்களாகி விட்டோம். இந்த அலட்சிய புத்தியை மாற்ற வேண்டிய பொறுப்பு இளைஞர்களாகிய உங்களுடையது.

நீங்கள் அடியெடுத்துவைக்கின்ற வாழ்க்கையில் சுகபோகங்கள், வசதிகள் மிகக் குறைவாகத்தான் இருக்கும். கடுமையாக உழைத்து உழைத்துத்தான் சுகத்தை அடைய முடியும்.

## பித்தலாட்ட மயம்

எங்கு நோக்கினும் அதிகாரப் பேராசை, நேர்மையற்றபோக்கு, பொய்மை, பித்தலாட்டம், நீதி நியாய விஷயத்தில் சிரத்தையின்மைபோன்றகேடுகள் வெற்றி முழக்கம் செய்வதை நீங்கள் காண்பீர்கள். அத்தகைய பிரதிகூலமான சூழ்நிலையில், உங்கள் நாணயத்துக்கும் ஒழுக்க நிலைகளுக்கும் பெரியசோதனை வரும். நல்ல குணப்பண்புகள் படைத்த உங்களைப் போன்றவர்களால் தான் இச் சூழ்நிலையை மாற்ற முடியும்.

## கல்வி மட்டும் போதாது

தார்மிக, ஆன்மிக நியதியை போஷித்து வளர்ப்பதற்குக்கல்வி அறிவு மட்டும்பயன்படும் என்பது வீண் பிரமை, பொதுக்கல்வியோ சர்வகலாசாலைப் படிப்போ குறிப்பாக ஒழுக்கம் உயருவதற்குத் துணைபுரிகின்றன என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் ஏற்படவில்லை. அனுபவம் இதற்கு நேர் மாறாக இருக்கிறது.

ஒரு மனிதனிடம் என்னகுறைகள் உள்ளூர அமைந்திருக்கின்றனவோ அவற்றை மோசமான வகையில் துஷ்பிரயோகம் செய்வதற்குக் கல்வியறிவு பயன் படுகிறதைக் காண்கிறோம். இயற்கையிலேயே வகை தொகை இன்றி, தந்திரக்காரர்களாக நடந்து கொள்கின்ற தன்மையுடையவர்கள், கல்வியின் விளைவாக அதிக தந்திரமும் அதிகமான வகை தொகையின்மையும் உள்ளவர்களாக மாறி, அடியோடு கட்டுப்படுத்த முடியாமற் போய்விடுகிறார்கள்.

## தரும வழி

சுதந்தரம் வருவதற்கு முன் வர்த்தகத் துறையில் ஒழுக்கக் குறைவான நடை முறைகள் காணப்பட்டபோது, நிராதரவாகக் கைகளை விரித்தோம். வர்த்தகம் என்றால் இப்படியும் அப்படியுமாகத்தான் இருக்கும் என்று சொல்வதுவழக்கம். இப்பொழுது மேற்றிசை பார்லிமெண்டரி ஜனநாயக அரசியல் சட்டம் முழு அளவில் அமுலாகிறது; இத்துடன் கூட, ஒழுக்கக் குறைவான

---

[60ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடம் பரிசில் பெற்று வரும் பாணன் ஒருவன் வேறு ஒரு பாணனைக் கண்டு, அவனிடம் சிறப்பு உரைத்து, அங்குச் செல்லுமாறு கூறுவதாக அமைந்துள்ளது. இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கோசிகனார் பாடியது இப்பாட்டு. 'கூத்தர் ஆற்றுப்படை' என்பது இந்நூலுக்குள்ள இன்னொரு பெயர்.

மலையை யானைக்கு உவமித்து அங்குத் தோன்றும் ஓசை யானையின் மதநீரான 'கடாம்' என்றதினால் மலைபடுகடாம் என்பது பெயர் ஆயிற்று. ஐநூற்று எண்பத்து மூன்று வரிகள் கொண்ட இப்பாடல் தமிழகத்தின் இயற்கை வளமும், குறிப்பாக மலைவளமும் விரிவாகக் கூறப்படுகிறது. இவை பத்துப்பாட்டு.

—"திராவிடன்"

ராஜீய நடவடிக்கைதான் சகஜம் என்று ஆகிவிட்ட புதிய சகாப்தம் நடைபெறுகிறது.

வர்த்தகத் துறையைவிட ராஜீயத்துறையில் உயர்பண்புகள் இல்லாமை மிகஎடுப்பாகக்காணப் படுகிறது. அரசியல் என்ருல் இப்படியும் அப்படியுமாகத்தான் இருக்கும் என்ற ஜவாபுக்கிடைக்கிறது.

வர்த்தகம் சம்பந்தப்பட்டவரை சட்டத்தின் மூலம் தடைகள் என்ற மாயை சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. 'மாயை' என்று சொல்வதற்குக் காரணம், தடைகளை சமாளிக்க சாமர்த்தியமான எத்தனையோ வழிகளைக் கண்டு பிடித்துப் பரவலாகக் கையாள்கிருர்கள். ராஜீய வாழ்வில் தன்னடக்கம் என்பது மருந்துக்குக்கூடக் காணும்.

வர்த்தகத்தில் மிக முக்கியமானவை வரவு, செலவு, ஆஸ்திப் பொறுப்பு கணக்குகள். வசதியற்ற வர்த்தகன் வியாபாரத் துறையில் இருந்து மறைந்து விடுகிருன். ராஜீயவாதிகள் விஷயம் முற்றிலும் வேறுதான். உதவாக்கறை என்பது தெரிந்த பிறகும் காலவரம்பின்றி தன் ஜபர்தஸ்துகளை ராஜீயவாதி நடத்திக் கொண்டுதான் இருக்கிருன். இந்நிலையை மாற்றுங்கள். ஒழுக்கங்களை பண்புகளை மனப்பூர்வமாய்க் காப்பாற்றுங்கள். ஒழுக்க உயர்வு சுபாவம், சூழ்நிலை, ஆத்மசிந்தனை மனச்சாட்சிக்கு மதிப்பு ஆகியவை உரம் பெற்ருேங்கத்துணை புரியும்.


**" ஆரம்பக் கல்வி "**
**ஆபீஸ்.**
**94-95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

**முக்கிய அறிவிப்பு**

Book Post-ல் பாரங்களை அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# வாக்காளர் விளக்கம்

## தமிழ் நாட்டில் முதன்முறையாக 210 லட்சம் பேர் வாக்களிப்பர்

சென்னை, நவ. 10 - சென்னை மாநிலத்தில் தோன்றிய விடுதலைப் போராட்ட காலத்தினர் வோட்டர்களிடை குறைந்து விட்டனர். விடுதலைக்குப் பிறகு நெருக்கடிகளாலும், சுமையாலும் பாதிக்கப்பட்டவர்களே பெரும்பாலான வாக்களர்களாக இருப்பர்.

வாக்காளர் பட்டியல்களில் மொத்தம் 210 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்: அவர்களில் 1 கோடியே 75 லட்சம் பேர் 42 வயதிற்குக் குறைவானவர்களாவர். அதாவது மொத்த வாக்காளர்களில் 42 வயதிற்குக் குறைந்தவர்கள் சுமார் 83 சத விகிதமாகும்.

வோட்டர்களில் எட்டில் ஒரு பங்கினர் முதன் முறையாக வாக்களிப்பர்; மற்றோர் 8 சதவிகிதத்தினர் இரண்டாம் முறையாக வாக்களிப்பர். சுமார் 10 சத விகிதத்தினர் மூன்றாவது முறையாக வாக்களிப்பர். மொத்தத்தில் சுமார் 30 சதவிகிதத்தினர் இள வயது வாக்காளராயிருப்பர்.

லோகசபைக்கு 39 பேரையும், அசெம்பிளிக்கு 234 பேரையும் அனுப்பி வைக்க வேண்டும். லோக சபைக்கான இடங்களில் இரண்டு குறைந்து, அசெம்பிளி இடங்களில் 28 அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு லோக சபைத் தொகுதிக்கும் ஆறு அசெம்பிளி இடங்கள் வீதம் சேர்க்கப்பட்டுள்ளன.

ஹரிஜனங்கள் உள்ளிட்ட ஷெட்யூல்ட் வகுப்புகளுக்கு 44 அசெம்பிளி ஸ்தானங்கள் உண்டு. முந்திய தேர்தலைவிட இது 8 அதிகம். லோக சபைக்கான 39 இடங்களில் அவர்களுக்கென ஏழு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டின் 14 ஜில்லாக்களில், கோயம்புத்தூரில்தான் சுமார் 23 லட்ச வாக்காளர்கள் இருக்கின்றனர்; எனவே வாக்காளர் எண்ணிக்கையில் கோயமுத்தூர் உச்சியிலும், மக்கள் குறைவாக வாழும் நீலகிரி மாவட்டம் அடியிலும் உள்ளன; நீலகிரியில் 2 லட்சத்து 20 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர்.

அசெம்பிளிக்கு 234 தொகுதிகளில் சுமார் 88 சத விகிதத்தை நகர்ப்புறம் என்று பிரிக்கலாம்; எஞ்சியுள்ள தொகுதிகளை அரை குறை நகர்ப்புறம் அல்லது கிராமத் தொகுதிகள் எனலாம்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.